இரட்சிப்பவர் தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள நெருக்கமான உறவை மீட்பாரு. மரணத்துல இருந்து மனிதனை காப்பாத்துவாரு. நித்தியமான ஜீவிதத்தை தந்து எப்பவும் மனிதனோட இருப்பாரு.

தேவன் நம்மளை எந்த அளவுக்கு நேசிக்காருன்னா நேரம் சரியா இருந்தப்ப, அவருடைய மகனை இந்த உலகத்துக்கு இரட்சிப்பவரா அனுப்பினாரு. இயேசு தேவனின் குமாரன். ஒரு கன்னியின் மூலமா இந்த உலகத்துக்கு வந்தாரு. சரியான ஜீவிதம் ஜீவிச்சாரு. அவர் எப்பவும் பாவம் புரியல.

தேவனை பத்தி இயேசு மக்களுக்கு சொல்லிக்குடுத்தாரு. அவருடைய சிறந்த வல்லமை மூலமா பல அற்புதங்கள் செய்து காட்டினாரு. பல பேய்களை விரட்டி அடிச்சாரு. நிறைய பேரை குணப்படுத்தினாரு. குருடர்களை பாக்க செய்தாரு. செவிடனை கேக்க வெச்சாரு. நொண்டியை நடக்க வெச்சாரு. மரித்தோரையும் இயேசு உயிர்பிச்சாறு. பல மத தலைவர்கள் இயேசுவை பாத்து பயந்தாங்க பொறாமை அடைஞ்சாங்க. அவரை கொல்ல விரும்பினாங்க.

அவர் பாவம் புரியாததுனால, இயேசு மரிக்க தேவை இல்லை. ஆனா நமக்கு தியாகம் செய்ய அவர் மரிக்க தேர்ந்தெடுத்தாரு. அவருடைய வலி நிறைந்த மரணம் மனிதனின் பாவங்களை போக்கிச்சி. அதுக்கப்புறம், இயேசு கல்லறைல புதைக்கப்பட்டாரு. இயேசு குடுத்த பலியை பாத்து தேவன் ஏத்துகிட்டாரு.மூணாவது நாள் மரணத்துல இருந்து இயேசுவை உயிர்பித்து ஏத்துகிட்டதை பிரமாணப்படுத்தினாரு.

தேவன் சொல்றாரு, நம்முடைய பாவங்களுக்காக இயேசுவின் பலியை நம்பி ஏத்துகிட்டா – நாம பாவங்கள்ல இருந்து விலகி இயேசுவை பின்பற்றினா, தேவன் நம்மை எல்லா பாவத்திலிருந்து கழுவி அவருடைய குடும்பத்துல திரும்பவும் ஏத்துக்கராரு.

நமக்கு இறங்கவும் இயேசுவை பின்பற்றவும் பரிசுத்த ஆவியை தேவன் அனுப்பினாரு. இந்த மீட்கப்பட்ட உறவை வெளிப்படுத்தவே நாம ஜலத்துனால ஞானஸ்நானம் செய்யப்பட்டிருக்கோம். மரணத்துக்கு அடையாளமா நாம ஜலத்துல புதைக்கப்பட்டிருக்கோம். புதிய ஜீவிதத்தின் அடையாளமா இயேசுவை பின்பற்ற நாம ஜலத்துல இருந்து எழுப்பட்டிருக்கோம். மரிப்பிலிருந்து இயேசு உயிர்த்தெழுந்ததும், பூமில அவர் நாப்பது நாள் இருந்தாரு. இயேசு இரட்சிக்கப்பட்டதை உலகம் முழுக்க போய் சொல்லணும்னு அவர் தன்னுடைய சீஷர்களுக்கு கத்துக்குடுத்தாரு.

இயேசு கூறினாறு –எல்லா தேசங்களுக்கு போய் சீஷர்களை உருவாக்குங்கள், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களை ஞானஸ்நானம் செய்வீர்; என்னுடைய கட்டளைகளை சொல்லிக்குடுப்பீர். எப்போதும் உங்களுடன் இருப்பேன் – இந்த காலம் முடியும் வரை இருப்பேன்.

அவங்க பாக்கும்போதே இயேசு பரலோகத்துக்கு அழைக்கப்பாட்டாரு. ஒரு நாள், இயேசு எப்படி போனாரோ அப்படியே திரும்பி வருவாரு. அவரை நேசிக்காதவங்களையும் அவருக்கு கீழ்படியாதவங்களையும் என்றென்றும் தண்டிப்பாரு. அவரை நேசிச்சவங்களையும் கீழ்படிஞ்சவங்களையும் ஏற்று என்றென்றும் பரிசளிப்பாரு. நாம புதிய பரலோகத்துல புதிய உலகத்துல அவர் கூட என்றென்றும் ஜீவிப்போம்.

என்னுடைய பாவங்களுக்காக இயேசு குடுத்த பலியை நான் ஏத்துக்கறேன் நம்பறேன். அவர் என்னை பரிசுத்தமாக்கி தேவனின் குடும்பத்துல மீட்டு செத்திருக்காரு. அவர் என்னை நேசிக்காரு, நான் அவரை நேசிக்கறேன் அவருடைய ராஜ்ஜியத்துல என்றென்றும் அவருடன் ஜீவித்திருப்பேன்.

தேவன் உங்களை நேசிக்காரு நீங்க இந்த பரிசை ஏத்துக்கணும்னு விரும்பறாரு. இப்பவே அப்படி நடந்துக்க விரும்பறீங்களா?

படிக்கவும்

(5 நிமிடம்)

விளக்கக்காட்சி 2

ஜூம் பயிற்சிக்கு மீண்டும் வரவேற்கிறோம்.

இந்த அமர்வில், "மூன்று வட்டங்கள்" என்ற கருவியைப் பயன்படுத்தி கடவுளின் கதையை - நற்செய்தியை - எப்படிப் பகிர்வது என்பதைக் கற்றுக்கொள்வோம்.

கடவுளின் கதையைப் பகிர்ந்து கொள்ள பல வழிகள் உள்ளன.

சிறந்த வழி நீங்கள் பகிர்ந்து கொள்ளும் நபர் மற்றும் உலகத்தைப் பற்றிய அவர்களின் பார்வை மற்றும் அவர்களின் வாழ்க்கை அனுபவங்களைப் பொறுத்தது. கேட்கத் தயாராக இருக்கும் இருதயங்களில் கிரியை செய்ய, பகிர்ந்துகொள்ளத் தயாராக இருக்கும் இருதயங்களை கடவுள் பயன்படுத்துகிறார். அது அவருடைய வேலை. அவர் நம்மை அவரோடு சேர அழைக்கிறார்.

கடவுளின் கதையைப் பகிர்வதற்கான ஒரு வழி, நாம் மூன்று வட்டங்கள் என்று அழைக்கும் ஒரு எளிய வரைபடத்தைப் பகிர்வதும் விவரிப்பதும் ஆகும்.

நாம் அனைவரும் மிகவும் சிதைந்து போன உலகில் வாழ்கிறோம்

துன்பம், மரணம், போர், நோய், அடிமையாதல் போன்றவற்றைப் பார்க்கிறோம், கேட்கிறோம். இது எல்லா இடங்களிலும் உள்ளது. ஆனால் இது கடவுளின் அசல் வடிவமைப்பு அல்ல.

கடவுளின் சரியான வடிவமைப்பு அன்பு, மகிழ்ச்சி, ஒற்றுமை மற்றும் சமாதானம் நிறைந்த உலகம்.

கடவுளின் பரிபூரண வடிவமைப்பிலிருந்து நாம் வெளியேறி, உடைந்த நிலைக்கு வந்த விதத்தை வேதம் "பாவம்" என்று அழைக்கிறது.

பாவம் என்பது கடவுளின் வழியிலிருந்து விலகி, நம் சொந்த வழியைப் பின்பற்றுவதாகும். பாவம் நம்மை கடவுளிடமிருந்து பிரிக்கிறது. பாவம் நம்மை உடைந்த நிலைக்குத் தள்ளுகிறது. பாவம் நம்மை ஆவிக்குறிய மரணத்திற்கு அழைத்துச் செல்கிறது.

மக்கள் அந்த உடைபட்ட நிலையிலிருந்து வெளியேற விரும்புகிறார்கள். வெளியே வர எல்லா விதமான காரியங்களையும் முயற்சி செய்கிறோம். நம்மில் சிலர் போதைப்பொருள் மற்றும் ஆல்கஹாலை முயற்சி செய்கிறோம். நம்மில் சிலர் ஒரு நல்ல வேலையின் மூலமாகவோ அல்லது நிறைய பணம் சம்பாதிப்பதன் மூலமாகவோ வெளியேற முயற்சி செய்கிறோம். நம்மில் சிலர் ஒரு உறவு அவர்களை வெளியேற்றும் என்று நினைக்கிறார்கள். சிலர் மதத்தை முயற்சி செய்கிறார்கள் -- நல்ல நடத்தை அல்லது மற்றவர்களுக்கு உதவுவது நம்மை விடுவிக்கும் என்று நாம் நினைக்கிறோம்.

இந்த காரியங்கள் எதுவும் உண்மையில் முறிவு என்ற பிரச்சனையை சரி செய்யவில்லை. நாம் ஒரு கணம் அதிலிருந்து விலகிச் செல்வது போல் உணர்ந்தாலும்... நாம் தொடங்கிய இடத்திற்கே திரும்பிச் செல்கிறோம். இங்கே ஒரு கடினமான உண்மை. நாம் இன்னும் அங்கே இருந்தால் -- இன்னும் உடைந்த நிலையில் -- இந்த வாழ்க்கை முடிவடையும் போது, நாம் கடவுளிடமிருந்து நிரந்தரமாகப் பிரிந்து விடுவோம் என்று வேதம் கூறுகிறது. எப்போதும்.

வேதம் அந்த இடத்தை “நரகம்” என்று அழைக்கிறது.

ஆனால் நாம் உடைந்த நிலையில் இருப்பதை கடவுள் விரும்பவில்லை.

வேதம் சொல்கிறது -- கடவுள் நம்மை மிகவும் நேசித்தார், நமக்காக ஒரு வழியை உருவாக்க அவர் தனது சொந்த குமாரனை அனுப்பினார். நம்முடைய பாவத்தை அழிக்கவும், உடைந்த நிலையிலிருந்து நம்மை அழைத்துச் செல்லவும் இயேசு பூமிக்கு வந்தார்.

ஆகவே, கடவுளின் குமாரனாகிய இயேசு, தம்முடைய மரணத்தின் மூலம் நம்முடைய பாவத்தை ரத்து செய்தார்.

இயேசு மரித்து அடக்கம் செய்யப்பட்ட மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். அவருடைய மகத்தான தியாகத்தின் காரணமாக, கடவுள் இயேசுவை பரலோகத்திலும் பூமியிலும் உள்ள அனைத்திற்கும் ராஜாவாக ஆக்கினார்.

ராஜா இயேசு நமக்காக உடைந்த நிலையிலிருந்து ஒரு வழியை உருவாக்கினார். கடவுள் சொன்னார் என்றால்...

… நம் பாவத்திலிருந்து நாம் திரும்பி…

இயேசு நமக்காக மரித்தார் என்று நம்பி…

பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் பெயரில் ஞானஸ்நானம் பெறும் போது…

கடவுள் நம்மை -- இயேசுவைப் போலவே -- கடவுளின் குடும்பத்தின் ஒரு பகுதியாக -- என்றென்றும் ஒரு புதிய வகையான வாழ்க்கையில் நடக்க -- எழுப்புகிறார்.

உடைந்த உலகில் இந்தப் புதிய வாழ்க்கையை நாம் முன்மாதிரியாகக் கொண்டு, இயேசுவின் வருகைக்காகக் காத்திருக்கிறோம், அப்போது அவர் ஒரு புதிய வானத்தையும், புதிய பூமியையும் உருவாக்குவார், அங்கு நாம் அவருடன் எப்போதும் முழுமையான முழுமையுடன் இருக்க முடியும்.

நாம் அவருடனான உறவில் வளர வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார். கடவுள் நம்மை மீண்டும் அவரது அசலான சரியான வடிவமைப்பில் மீட்டெடுக்க விரும்புகிறார்.

கடவுளின் குடும்பத்தின் ஒரு பகுதியாக, இயேசு நமக்கு ஒரு பணியைக் கொடுத்திருக்கிறார் - வாழ்வதற்கான ஒரு காரணம் - மற்றும் சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கான வழி.

இயேசுவின் பணி நமக்கானது.

இயேசு நம்மை அனுப்புகிறார் -- அவருடைய பிதாவாகிய கடவுள் அவரை அனுப்பியது போல் -- பிறர் விடுபடவும், என்றென்றும் நிலைத்திருக்கும் கடவுளின் குடும்பத்தின் ஒரு பகுதியாக இருக்க உதவுவதற்காக உடைந்த நிலையில் உள்ளவர்களுக்குள் அனுப்புகிறார்.

இந்த மூன்று வட்டங்கள் கொண்ட உலகில், இரண்டு வகையான மனிதர்கள் மட்டுமே உள்ளனர் --

கடவுளின் முழுமையான வடிவமைப்பின் ஒரு பகுதியாக இருப்பவர்கள், கடவுளின் மீட்புப் பணியில் வாழ்கிறார்கள் … கடவுளை அவரது குடும்பத்துடன் மீண்டும் இணைக்க உதவுகிறார்கள்.

அல்லது…

… இன்னும் உடைந்த நிலையில் உள்ளவர்கள் … விடுபட எல்லாவற்றையும் முயற்சி செய்கிறார்கள் … யாராவது காப்பாற்றுவார்கள் என்று நம்புகிறார்கள்

- நீங்கள் இப்போது எங்கே இருக்கிறீர்கள் என்று தெரியுமா?
- நீங்கள் எங்கு இருக்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரியுமா?

கடவுளின் கதையைப் பகிர்ந்து கொள்ள பல வழிகள் உள்ளன. முக்கியமானது பகிர்ந்து கொள்ள வேண்டும். கேட்கத் தயாராக இருக்கும் இருதயங்களில் கிரியை செய்ய, பகிர்ந்துகொள்ளத் தயாராக இருக்கும் இருதயங்களைக் கடவுள் பயன்படுத்துகிறார். அது அவருடைய வேலை. அதில் நம்மை அவருடன் சேர அழைக்கிறார்.

செயல்பாடு

(45 நிமிடங்கள்)

சுவிஷேசத்தைப் பகிர்ந்து கொள்

- நீங்கள் பார்த்த இரண்டு விளக்கக்காட்சிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
- இரண்டு அல்லது மூன்று பேர் கொண்ட குழுக்களாய் பிரிக்கவும்.
- மாறி மாறி சுவிஷேசத்தை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளுங்கள்.

படிக்கவும்

(5 நிமிடம்)

ஞானஸ்நானம்

இயேசு கூறினார் – எல்லா தேசங்களிலும் போய் சீஷர்களாக்குங்கள், பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் செய்வீர். ஞானஸ்நானம் – அல்லது பாப்டிஜோ என்றால் – மூழ்க வைப்பது – அதாவது துணிக்கு சாயம் பூசும்போது மாறுபட்ட நிறத்தில் வருது.

ஞானஸ்நானம் என்றால் புதிய ஜீவிதம், இயேசுவின் சாயலில் ஊறிய, தேவனுக்கு கீழ்படிந்திருப்பது. நம்முடைய சாவிலிருந்து பாவம் வரை, இயேசு நம் பாவங்களுக்காக மறித்தது போல்; பழைய ஜீவிதம் புதைக்கப்பட்டு, இயேசு புதைக்கப்பட்டது போல, கிறிஸ்துவில் ஒரு புதிய ஜீவிதமாக, இயேசு மறு ஜீவிதம் அடைந்து இன்று ஜீவிப்பது போல்.

இதுவரைக்கும் யாரையும் ஞானஸ்நானம் செஞ்சிருக்கலேன்னா , மிரட்டலா இருக்கலாம், ஆனா அப்படி இருக்க கூடாது. இதோ சில சாதாரண வழிகள். நிக்கற தண்ணியை தேடுங்க, புது சீஷரை அதுல மூழ்க வெக்கற அளவுக்கு ஆழமா இருக்கணும். குளமோ, நதியோ, குட்டையோ இல்லை கடலோ. தண்ணி தொட்டியா இல்லை வேற விதமாவும் இருக்கலாம்.

சீஷர் உங்க கைகளை பிடித்து மற்றவருடைய முதுகை தழுவட்டும்.

அவங்க முடிவை புரிஞ்சுக்க ரெண்டு கேள்விகளை கேளுங்க.

- “இயேசு கிருஸ்துவை உங்கள் கர்த்தராக இரட்சிப்பவராக ஏற்றுக்கொண்டீர்களா?”
- “உங்கள் ராஜாவாக ஜீவிதம் முழுக்க அவருக்கு கீழ்படிந்து ஊழியம் செய்வீர்களா?”

அவங்க ஆமாம்னு சொன்னா, இப்படி சொல்லுங்க:

- “கர்த்தர் இயேசுவில் நீங்க விசுவாசிக்கறதுனால, நான் உங்களை பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் செய்யறேன்.”

அவங்களை தன்நில மூழ்க உதவுங்க, முழுமையா முழுகினதும் மறுபடியும் மேல கொண்டு வாங்க.

இயேசுவின் புதிய விசுவாசியை ஞானஸ்நானம் செஞ்சிருக்கீங்க – பரலோகத்தின் புதிய குடிமகன் – ஜீவ தேவனின் புதிய குழந்தை. இது கொண்டாடற நேரம்!

ஞானஸ்நானம் – இயேசு அவருடைய சீஷர்களுக்கு குடுத்த முதல் திருவருட்சாதனம். ஜூமே கருவியின் அடித்தளம்.

விவாதி

10 நிமிடம்

- நீங்கள் யாருக்காவது ஞானஸ்நானம் கொடுத்துள்ளீர்களா?
- நீங்கள் இதை கருத்தில் கொள்வீர்களா?
- சுவிஷேசத்தை அறிவிக்கும் கட்டளை எல்லோருக்குமாயின் அனைவரும் ஞானஸ் நானம் கொடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்களா? ஏன்? அல்லது ஏன் இல்லை?

உங்கள் ஞாபகத்திற்கு – நீங்கள் ஞானஸ்நானம் பெற்று விட்டீர்களா?

இல்லையெனில், அடுத்த பகுதி ஆரம்பிப்பதற்கு முன்பதாய் அதற்காய் திட்டமிடுங்கள். நீங்கள் இயேசுவிடம் “சரி” என்று சொல்லும் அந்த முக்கியமான நாளிலே உங்களோடு சேர்ந்து கொண்டாடுவதற்கு உங்கள் குழுவினரை அழையுங்கள்.

சரிபார்த்தல்

(1 நிமிடம்)

இந்த அமர்வில் கேட்ட கருத்துக்கள்:

- ஆவிக்குறிய பொருளாதாரம்

இந்த அமர்வில் கேட்ட முறைமைகள்:

- சுவிஷேசம்
- ஞானஸ்நானம்

அடுத்த அடி

கீழ்படி

படைப்பு முதல் நியாயத்தீர்ப்பு வரையிலான கதையை (அல்லது வேறு விதத்தில் சொல்வதை) யாருக்கு சொல்லிக் கொடுப்பது என்பதை காட்டும் படி கடவுளிடம் கேளுங்கள். அந்த நபரின் பெயரை உங்கள் குழுவினரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.

பகிர்ந்து கொள்

இந்த வாரம் கடவுளின் கதையை சொல்லி சிறிது நேரம் பயிற்சி செய்யுங்கள். உங்கள் பட்டியலில் “அவ்விசுவாசி” அல்லது “தெரியவில்லை” என்று குறித்த ஒருவரிடமாவது பகிர்ந்து கொள்ளுங்கள்.

நினைவில் கொள்க – அடுத்த பகுதியில் உங்கள் குழு கடவுளின் பந்தியை கொண்டாடும். அதற்கு தேவையான பொருட்களை நினைவில் வையுங்கள் (அப்பம், திராட்ச ரசம்).

அமர்வு 4

சரிபார்

(1 நிமிடம்)

பங்கேற்ற அனைவரும் சரிபார்த்து விட்டார்களா.

ஜூம் பயிற்சி/சரிபார்த்தல் மற்றும் குறியீட்டைப் பயன்படுத்துதல்: **8764**

ஜெபி

(5 நிமிடம்)

மற்றவர்களோடு இந்த நற்செய்தியை பகிர்ந்து கொள்வதற்கு நம்மை அழைத்ததற்காக தேவனுக்கு நன்றி சொல்லுங்கள்.

உங்கள் குழுவில் உள்ள ஒவ்வொருவருக்கும் தேவ சிந்தையைக் கொடுக்கும் படியும் அவருடைய ஆவியால் ஒவ்வொருவரையும் நிரப்பும் படியும் கேளுங்கள்.

திரும்பிப் பார்

(5 நிமிடம்)

ஆரம்பிப்பதற்கு முன்பு சரிபார்ப்பதற்கு சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

கடந்த பகுதியின் முடிவில் நீங்கள் கற்றுக் கொண்டதை நடைமுறைப்படுத்த உங்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு வழிகளில் சவால் விடுக்கப்பட்டது.

இந்த வாரம் உங்கள் குழு எப்படி செயல் பட்டது என்பதைப் பார்க்க சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

மேலோட்டம்

(1 நிமிடம்)

இந்த அமர்வில், இந்தக் காரியங்களைக் குறித்து நாம் கேட்டு கற்றுக் கொள்வோம்:

- பிறருக்கு உங்கள் தரிசனத்தைக் கொடுப்பது மிகப்பெரிய ஆசீர்வாதம்
- வாத்து போன்ற மெதுவான சீஷத்துவம்
- ராஜ்யம் எங்கே இல்லை என்பதைப் பார்க்கும் கண்கள்

இந்த முறைகளை நம்முடைய தொகுப்பில் சேர்ப்போம்:

- 3 நிமிட சாட்சி
- கர்த்தருடைய இராபோஜனம்

படிக்கவும்

(5 நிமிடம்)

3 நிமிட சாட்சி

இயேசு தன்னுடைய சீஷர்களிடம் கூறினார் – 'இதற்கெல்லாம் நீங்கள் சாட்சிகள்'. இயேசுவின் சீஷர்களாக, நாமளும் சாட்சிகள், நம்முடைய ஜீவிதங்கள்ல இயேசு ஏற்படுத்திய பாதிப்பு. தேவனிடம் உங்களுக்கு இருக்கற உறவின் கதை தான் சாட்சி. எல்லாருக்கும் கதை இருக்கு. நீங்க பயிற்சி செய்ய உங்களுக்கு இது ஒரு வாய்ப்பு.

பயிற்சி செய்ய ஒண்ணு ரெண்டு விசுவாசிகளை தேர்ந்தெடுங்க பிறகு 100 பேர்ல உள்ள பட்டியல்ல இருந்து 5ஐ தேர்ந்தெடுங்க. நம்பிக்கை இல்லாதவர் அல்லது ஆண்மீகம் தெரியாத வகையறாவில் மக்களை தேர்ந்தெடுக்கவும். உங்களுடைய சாட்சியை பயிலவும் – இயேசுவின் உங்கள் கதை – நீங்க தேர்ந்தெடுத்த 5ல முதன்மையா இருக்க வெளிப்படுத்துவாங்க. 5 பேர்கிட்டயும் குறிப்பா உங்க கதை சொல்ல பயிலவும். மூணு நிமிஷத்துல உங்க கதையை சுருக்கமா பகிர்ந்துக்க திறமை இருக்கணும்.

உங்க கதையை சொல்ல முடிவில்லாத வழிகள் இருக்கு ஆனா மத்தவங்களோட நல்லா செயல்பட இங்க சில வழிகள் இருக்கு. நீங்க இயேசுவை பின்பற்ற எதுக்காக தேர்ந்தேடுத்தீங்கனு சாதாரணமா பகிர்ந்துக்கலாம். புத்தம் புதிய விசுவாசிக்கு இது நல்லா செயல்படும்.

முந்திய பிந்திய கதையை நீங்க பகிர்ந்துக்கலாம் – இயேசுவை தெரிஞ்சதுக்கு முன்னால உங்க ஜீவிதம் எப்படி இருந்துச்சு அதுக்கு அப்புறம் எப்படி மாறி இருக்கு. சுலபமா வல்லமையா. உடன் இருப்பது உடன் இல்லாம இருப்பது கதையை சொல்லலாம் அதாவது இயேசுவுடன் எப்படி இருக்கு அவர் இல்லாம எப்படி இருக்கும். சின்ன வயசுலயே விசுவாசிச்சா இந்த வசனம் நல்லா செயல்படும்.

நீங்க பகிர்ந்து முடிஞ்சதும், உங்க கூட இருக்கறவர் ஆரம்பிக்கட்டும். நீங்க அஞ்சு பேருக்கு சொல்லி முடியற வரைக்கும் முன்னையும் பின்னையும் சொல்லிக்கிட்டு இருங்க. இன்னும் சிறப்பான பலனை ஏற்படுத்த விரும்பறீங்களா?

உங்க கதையை பகிர்ந்துக்கும்போது, மூணு விதமா யோசிச்சா உதவியா இருக்கும்:

- அவங்க கதை – நீங்க பேசிகிட்டு இருக்கறவங்ககிட்ட அவங்க ஆண்மீக பயணத்தை பகிர்ந்துக்க சொல்லுங்க.
- உங்க கதை – அவங்க அனுபவத்தை சுத்தி உங்க சாட்சியை பகிர்ந்துக்குங்க.
- தேவனின் கதை – முடிவுல தேவனின் கதையை அவங்க உலக கண்ணோட்டம், மதிப்புகள் முதன்மைகளை இணையும்படி பகிர்ந்துக்குங்க.

எப்படி ஆரம்பிக்கறதுன்னு உங்களுக்கு கவலையா இருந்தா – சாதாரணமா வைங்க.

இயேசுவை ஏன் பின்பற்ற முடிவெடுத்தீங்கனு சொல்லுங்க. ஜீவிதங்கள் மாற உங்க கதையை தேவன் பயன்படுத்தலாம், ஆனா நினைவிருக்கட்டும் – உங்களுக்கு தான் அதை சொல்ல வாய்ப்பு கிடைக்குது.

உங்க மூணு நிமிஷ சாட்சி ஜூமே கருவி இன்னொரு சாதாரண கருவியா இருக்கு.

செயல்பாடு

(30 நிமிடங்கள்)

உங்கள் சாட்சியை பகிர்ந்து கொள்ள பயிற்சி செய்யுங்கள்

- 3 நிமிடத்தில் உங்கள் கதையை எழுத முயற்சி செய்யுங்கள் (10 நிமிடங்கள்)
- 2 அல்லது 3 பேர் கொண்ட குழுவாய் பிரிந்து உங்களின் சாட்சியை பகிர்ந்து கொள்வதற்கு பயிற்சி செய்யுங்கள் (20 நிமிடங்கள்)

மூன்று அடிப்படையான சாட்சியங்கள்

உங்கள் கதையை வடிவமைக்க பல வழிகள் உள்ளன, ஆனால் இங்கே பயன்பாட்டில் உள்ள சில சிறந்த வழிகள்:

- ஒரு எளிமையான அறிக்கை - நீங்கள் ஏன் இயேசுவைப் பின்பற்ற விரும்புகிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளலாம். இது ஒரு புதிய விசுவாசியின் மத்தியில் நன்றாக வேலை செய்கிறது.
- முன்னும் பின்னுமாக - உங்கள் "முன்" மற்றும் "பின்புற" கதையைப் பகிர்ந்து கொள்ளலாம் -உங்கள் வாழ்க்கை இயேசுவை அறிவதற்கு முன்னும் பின்னும் எவ்வாறு இருக்கிறது என்பதை பகிர்ந்து கொள்ளலாம். எளிய மற்றும் சக்திவாய்ந்த முறை.
- அதனுடன் மற்றும் இல்லாமல் - உங்களுடைய கதையுடன் அல்லது இல்லாமல் பகிர்ந்து கொள்ளலாம். இயேசு உங்கள் வாழ்க்கையில் இருந்தால் எப்படி இருக்கிறது, இல்லாமல் இருந்தால் எப்படி இருக்கும் என்பதைப் பகிர்ந்து கொள்ளலாம். நீங்கள் இளம் வயதிலேயே விசுவாசத்திற்குள் வந்திருப்பீர்களானால் உங்கள் கதை இன்னும் நன்றாக வேலை செய்யும்.

உங்கள் சாட்சியைப் பகிர்ந்து கொள்வதற்கான மூன்று பகுதிகள்

உங்கள் கதையைப் பகிர்ந்து கொள்ளும் போது, அது மூன்று பகுதியாக செய்யும் செயல்முறை என்பதை அறிந்திருங்கள்:

- அவர்களின் கதை - நீங்கள் பேசும் நபரிடம் அவர்களின் ஆவிக்குரிய பயணம் பற்றிப் பகிர்ந்து கொள்ள கேளுங்கள்.

- உங்கள் கதை - பின்னர் உங்கள் சாட்சியை அவர்கள் அனுபவத்தைச் சுற்றி பகிர்ந்து கொள்ளுங்கள்.
- கடவுளின் கதை - கடைசியாக, கடவுளுடைய கதையை, உலகின் பார்வை, மதிப்பு மற்றும் முன்னுரிமைகள் இணைந்த விதத்தில் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் சாட்சி தாக்கக்தை ஏற்படுத்துவதற்காக மிக நீளமாகவோ அல்லது பல விவரங்கள் உடையதாகவோ இருக்க வேண்டியதில்லை. உண்மையில், அது 3-நிமிடங்களுக்குள் இருக்குமானால், கேள்விகளுக்கும், ஆழமான உரையாடலுக்கும் நேரம் கிடைக்கும். எப்படித் தொடங்குவது என்பது பற்றிக் கவலைப்படுவீர்களானால் - அதை எளிமையாக வைத்துக் கொள்ளுங்கள். கடவுள் உங்கள் கதையைப் பலரின் வாழ்க்கையை மாற்றுவதற்கு பயன்படுத்த முடியும். ஆனால் நினைவில் கொள்ளுங்கள் – நீங்கள்தான் அதை சொல்பவர்.

படிக்கவும்

(5 நிமிடம்)

மிகப் பெரிய ஆசீர்வாதங்கள்

இந்த செஷன்ல, தேவனின் சிறந்த, மிக சிறந்த, மிக மிக சிறந்த அபிஷேகங்களையும் எப்படி மத்தவங்களோட உங்களால பகிர்ந்துக்க முடியும்னு பேசலாம். இயேசுவை யாராவது பின்பற்ற தேர்ந்தெடுக்கும்போது, சரியான வழில அவங்க செல்ல எப்படி நீங்க உதவி செய்வீங்க? இன்னோரு நுகர்வாளரா மட்டும் இல்லாம தேவனின் ராஜ்ஜியத்துல தயாரிப்பாளராக எப்படி உதவி செய்வீங்க. தேவன் குடுக்க விரும்பற அபிஷேகங்களை எல்லாம் அவங்க ஏத்துக்க எப்படி உதவி செய்விங்க.

அவங்களுக்கு இப்படி சொல்லி ஆரம்பிப்பேன்...

- இயேசுவை பின்பற்ற இது ஒரு அபிஷேகம்.
- இயேசுவை பின்பற்ற மத்தவங்களை வழி நடத்தறது பெரிய அபிஷேகம்.
- இதுஒரு புதிய ஆண்மீககுடும்பத்தை ஆரம்பிக்க ஒரு மிகப்பெரிய அபிஷேகம்.
- இது புதிய ஆண்மீககுடும்பங்களை ஆரம்பிக்க மத்தவங்களை தயார் படுத்த ஒரு மிக மிகப்பெரிய அபிஷேகம்.

நீங்க இயேசுவை பின்பற்ற தேர்ந்தெடுத்திருக்கிங்க அதனாலதேவன் உங்களை அபிஷேகிச்சிருக்காரு. நீங்க தேவனின் சிறந்த, மிக சிறந்த, மிக மிக சிறந்த அபிஷேகத்தை பெறணும்னு விரும்பறேன். எப்படீன்னு தெரியப்படுத்தவா?

அவங்க மேலும் தெரிஞ்சுக்க விரும்பினா, அவங்களுக்கு ஏற்கனவே தெரிந்த 100 மக்களுடைய பட்டியலை உருவாக்க சொல்லுவேன். அந்த பட்டியல்ல இருந்து அஞ்சு பேரை தேர்ந்தெடுக்க சொல்லுவேன் – இயேசுவை தெரியாத அஞ்சு பேரு – அப்பவே அஞ்சு பேரோட அவங்க பகிர்ந்துக்க விரும்பரவங்களை.

இயேசுவை பின்பற்றுவது ஒரு அபிஷேகம். இந்த அபிஷேகத்தை யாரு கூட நீங்க பகிர்ந்துக்க விரும்பறீங்க.

அவங்க அனுபவத்தை பகிர்ந்துக்க சொல்லிக்குடுப்பேன் – அவங்க ஜீவிதத்துலதேவன் என்ன செய்றாரருங்கற கதை – உலகத்துல தேவன் என்ன செய்யறாருங்கற கதை. தேவனின் சிறந்த, மிக சிறந்த மிக மிக சிறந்த அபிஷேகங்களை எப்படி பகிர்ந்துக்கறதுன்னு சொல்லிக்குடுப்பேன்.

அவங்க பகிர்ந்துக்க தேர்ந்தெடுத்த அந்த அஞ்சு பேருக்கும் ஒரு தடவை இதை எல்லாம் கடைப்பிடிக்க சொல்லுவேன். முதல்ல அவங்க கதை. அப்புறம் தேவனின் கதை. அப்புறம் தேவனின் அபிஷேகங்கள். ஒவ்வொரு முறையும், அவங்க பட்டியல்ல உள்ள ஒருவனா நான் இருகக்ற மாதிரி நடந்துப்பேன். ஒவ்வொரு தடவையும், அவங்க கதையை பகிர்ந்துக்கும்போது. அவங்க தேவனின் கதையை பகிர்ந்துக்கறாங்க. என்னை இயேசுவை பின்பற்ற அழைக்கறாங்க. அவங்க தேவனின் சிறந்த, மிக சிறந்த, மிக மிக சிறந்த அபிஷேகத்தை சொல்லிக்குடுக்கறாங்க. ஒவ்வொரு முறையும்,

நான் அவங்களை கேள்விகள் கேக்கறேன் அல்லது அவங்க எதை சொல்லுவாங்களோ அதை நான் சொல்லுவேன். நாங்க பயின்றதும், அவங்களை மறுபடியும் சந்திக்க சொல்லுவேன் – முடிந்த 2 நாளைக்கு பிறகு – இந்த பகிர்தல் எப்படி செயல்படுதுன்னு தெரிஞ்சுக்கணும். அவங்க பட்டியல்ல இருக்கற அஞ்சு பேரை.

சந்திக்க தேவையான நேரம் குடுக்க விரும்பறேன், ஆனா அதை கண்டுக்காம இருக்கவோ இல்லை மறக்கவோ அதிக நேரம் குடுக்க விரும்பல.

எப்பவும் போன் நம்பர் அல்லது இமெயில் முகவரி அல்லது எப்படியாவது அவங்களை தொடர்பு கொள்ள கேட்டுப்பேன். என் கூட பகிர்ந்த மாதிரியே சரியா வசனங்களை தேவன் குடுப்பாருன்னு அவங்க கூடஜெபம் பண்ணுவேன்.

ரெண்டு நாட்களுக்குபிறகு, மறுபடியும் சந்திச்சு எப்படி செயல்படுதுன்னு பேசிப்போம்.

அவங்க பகிர்ந்துக்கலேன்னா, இன்னும் அதிகமா பயிற்சி செய்யலாம்னு சொல்லுவேன். யார் கிடைக்கறாங்களோ அந்தஅஞ்சு பேர்ல ஒருத்தர் கூட அப்பவே போக விரும்புவேன். ஆனா புது விஷயங்களை பத்தி பேச மாட்டேன். அவங்க ஏற்கனவே கத்துகிட்ட விஷயத்தை விசுவாசிக்க அதிக வாய்ப்பை குடுக்க விரும்புவேன்.

அவங்க தவிர்த்தாலோ காரணங்களை சொன்னாலோ, இது தேவனின் ராஜ்ஜியத்துக்கு பலன் குடுக்கற நல்ல நிலமா இல்ல வேற எங்கியாவது நான் செயல்படணுமானுதேவனை கேட்டுப்பேன்.

அவங்க பகிர்ந்துகிட்டா –நாங்க கொண்டாடுவோம்!

அந்த பட்டியல்ல ஒருத்தர் கூட நம்பலேன்னா, அவங்க கேட்டாங்க, கீழ் படிஞ்சாங்க பகிர்ந்துகிட்டாங்கனு உற்சாகப்படுவேன். அது தான் விசுவாசம். கொஞ்சமாவது அவங்க விசுவாசிச்சதுனால, மேலும் பகிர்ந்துக்க மகிழ்ச்சியா இருக்கேன்.

ஞானஸ்நானம்பத்தி பகிர்ந்துக்குவேன் இன்னொரு கருவியை அவங்களுக்கு குடுப்பேன்அதை அவங்க எப்படியும் ------ அல்லது----- பயன்படுத்தலாம். 100 பேர் உள்ள பட்டியல்ல இருந்து சில பேரை தேர்ந்தெடுக்க சொல்லுவேன் – இயேசுவை தெரியாதவங்க அல்லது அவரை பின்பற்றாதவங்க.

அப்புறம் அவங்க கூட பயிற்சி செய்வேன் – முதல்ல மாதிரி- அவங்க கதையோட, தேவனின் கதையோடயும் தேவனின் அபிஷேகத்தோடையும் நாங்க ஜெபிப்போம். இப்ப அவங்க பகிர்ந்துகிட்டு அவங்க பட்டியல்ல யாராவது விசுவாசிச்சா, நாங்க உண்மைல கொண்டாடுவோம்.

தேவனின் குடும்பம் பெருசாகுது. சிறந்த, மிக சிறந்த மிக மிக சிறந்த அபிஷேகத்தை அவங்க பகிர்ந்துகிட்டாங்களானு கேப்பேன், ஏன்னா இப்படி தான் தேவனின் குடும்பம் வளருது.

தேவனின் அபிஷேகங்களை பத்தி அவங்க பகிர்ந்துக்கலேன்னா, நாங்க மறுபடியும் முயற்சிப்போம் – அபிஷேகங்கள்,எப்படி இயேசுவின் புதிய விசுவாசியை பட்டியல்ல சேக்கலாம், எப்படி அவங்க கதையை பகிர்ந்துக்குவாங்க, தேவனின் கதையை அபிஷேகங்களை பகிர்ந்துக்குவாங்க – அப்ப தான் இயேசுவின் புதிய விசுவாசி பகிர்ந்து கத்துக்கலாம்.

நாங்க பயிற்சி செஞ்சதும், அவங்க தொடர்ந்து பகிர்ந்துக்க புது விச்வாசிகிட்ட அவங்களை அனுப்புவோம். ஆனா பகிர்ந்துகிட்டவங்களை பத்தியும் பட்டியல்ல இருந்த விசுவாசிகளை பத்தியும் அபிஷேகங்களை பகிர்ந்துகிட்டவங்களை பத்தி என்ன சொல்றது?

அப்படி நடந்தா நான் ரொம்ப மகிழ்ச்சி அடைவேன்.

இந்த மனிதனை தான் தேவன்’நல்ல நிலம்னு சொல்றாரு- நான் பார்த்ததைவிட மேலா தேவனின் குடும்பத்தை பல வழிகள்ல வளர்க்கலாம். இப்படிபட்டவங்களை நான் பாக்கும்போதெல்லாம், அவங்களை அடிக்கடி சந்திக்க திட்டம் போடுவேன். அவங்க ஆண்மீக வளர்ச்சிக்கு அதிக நேரம் குடுப்பேன்.

ஞானஸ்நானம் மாதிரி புது பாடங்களையும் எப்படி மூணுக்கு மூணு குழுவை ஆரம்பிக்கறதுன்னு பகிர்ந்துக்குவேன். இப்பஆண்மீக குடும்பத்தை வளர செய்யலாம் அதேஇயேசுவின் புதிய விசுவ.

அவங்க அந்த அளவுக்கு விசுவாசிக்கறதுனால, என்னால முடிஞ்சதை பகிர்ந்துக்கவும் தேவன் அடுத்து என்ன செய்யறாருன்னு பாப்பேன். எப்பவும் படிப்படியா. அவங்க கத்துக்க, கீழ்படிய தெரிஞ்சதை பகிர்ந்துக்க எப்பவும் வாய்ப்பு குடுக்கணும்.

இந்த மனிதனுக்காகவும் ஜெபிப்பேன் – என்னால முடிஞ்ச அளவுக்கு – அவங்க கூட பகிர்ந்துக்கவும் கத்துக்கவும் அனுமதிச்ச தேவனுக்கு நன்றி சொல்வேன்.அவருடைய மிகமிக சிறந்த அபிஷேகத்தை குடுக்க சொல்லுவேன்.

விவாதி

10 நிமிடம்

- நீங்கள் இயேசுவை பின்பற்ற ஆரம்பித்த பொழுது, இப்படித்தான் போதிக்கப்பட்டீர்களா? இல்லையெனில் எது வேறுபாடாயிருக்கிறது?
- நீங்கள் விசுவாசத்திற்குள் வந்த பின்பு எவ்வளவு நாள் கழித்து, சீஷர்களை உருவாக்க ஆரம்பித்தீர்கள்?
- புதிதாய் விசுவாசிகளானவர்கள் உடனே சீஷர்களை உருவாக்க முற்பட்டால் என்ன நடக்கும்?

படிக்கவும்

(5 நிமிடம்)

வாத்து போன்ற மெதுவான சீஷத்துவம்

சுமே பயிற்சிற்கு உங்களை வரவேற்கிறேன். இந்த பயிற்ச்சியில் சீடராக்குவதில் இருக்கிற இரண்டு தத்துவங்களை நாம் பார்க்லாம். வாத்து குஞ்சுகள் நடக்க பயிற்ச்சி எடுப்பiதை பார்த்தால் நமக்கு அது சீக்கிரமா அது புரியவரும் வாத்து குஞ்சுகள் நடப்பதை நீங்க எப்போதாவது பார்த; ததுண்டா.

உலகத்துல எந்த பகுதியில அது இருந்தாலும் அது ஒரே மாதரி தான் நடக்கும்.

தாய் வாத்து முன்னே நடக்கும், குஞ்சுகள் பின்னே நடக்கும். ஒன்றன்பின; ஒன்றாக ஒரே கோட்டில் நடக்கும். தாய் வாத்து வழிநடத்துகிறது குஞ்சுகள் பின்தொடருகிறது.

இன்னும் நுனுக்கமாக பார்த்தால் வேறு சில விஷயங்களை நாம் கற்றுக்கொள்ளமுடியும். ஒவ்வொரு வாத்துக்குஞ்சும் 2 காரியங்கள் செய்கிறது அதுவும் ஒரே நேரத்தில். ஒவ்வொரு வாத்துக்குஞ்சும் பின்தொடருபவையே.. ஏனெ;னால் தாய் வாத்தை அல்லது தனக்கு முன்செல்லும் வாத்துக்குஞ்சை அது பின்தொடருகிறது.

அதே நேரத்தில். ஒவ்வொரு வாத்துக்குஞ்சும் ஒரு தலைவர் தான், ஏனென்றால் தனக்கு பின்வரும் வாத்துக்குஞ்சை அது வழிநடத்துகிறது.

அப்டியென்றால் அந்த வாத்துக்குஞ்சு தலைவரா, அல்லது பின்தொடருபரா.. இரண்டுமேதான். . நடக்கப்போகிற வாத்துகுஞ்சுகள் சீடராக்குற அந்த செயலில் பெரிய ஒரு மாதிரியாக இருக்கிறது.

ஆண்டவர் தன்னுடைய குடும்பம் வளர விரும்புகிறார். அதனால் அவர் எல்லா பின்பற்றுபவர்ளையும் தலைவராக்க விரும்புகிறார். ஒவ்வொரு விசுவாசியும் பகிர்ந்துக்கொள்ள வேண்டும் ஒவ்வொரு சீடரும் சீடராக்க வேண்டும்.

ஒரே நேரத்தில் சீடர், சீடராக்குகிறவர் என்ற வேலையிலிருந்து நாம் வீழ்ந்துவிட சாத்தியமான ஒரு கன்னி என்னவென்று நாம் அறிந்துகொள்ள வேண்; டும; இல்லையென்றால், நாம; குறைந்த அளவிலாவது தெரிந்திருக்வேண்டும் இந்த காரியத்தை நாம் செய்வதற்கு முன்னே என்கிற சிந்தனை தான; அது. சீடராக்குவதின் வழிமுறை அப்படிக்கிடையாது.

சீடர்கள் வாத்துக்குஞ்சுகள் போலவே தான். தலைவராக எல்லாம் தெரிந்திருக்க வேண்டியதில்லை மாறாக ஒரு படி முன்னிலையில் இருந்தால் மட்டும் போதும். ஆண்டவர் தன்னுடைய குடும்பம் உத்தமத்தில் வளரவேண்டும் என்று அசைப்படுகிறர். எல்லா தலைவரும் பின்பற்றுகிறவனாகவும் இருக்கவேண்டும். பகிந்துக்கொடுக்கிறவர் விசுவாசியாயிருக்கவேண்டும். சீடராக்குகிறவர் சீடராயிருக்கவேண்டும்.

ஒரே நேரத்திலேயே... சீஷர், சீஷராக்குபவர் என்ற வேலையில் நமக்கு முன்இருக்கும் மற்றொரு கன்னி யென்னவென்றால். என்க்கெல்லாம் தெரியும் நான் அவனை பின்பற்றினால் நான் பின் தங்கிவிடுவேன் என்ற சிந்தனைதான் அது.

ஆண்டவருடைய ராஜ்ஜியத்தில் ஒரே ஒரு தாய் வாத்து தான் இருக்கிறது நாம் பின்பற்ற.. அது இயேசு கிறிஸ்துதான்.

மிஷனரியோ, போதகரோ, வேதாகம விரிவுரையாளகளோ அங்கு கிடையாது. இயேசு மட்டும் தான் நம்முடைய முழு உத்தமத்திற்கும் தகுதியானவர் மற்றறெல்லாருமே அந்த வழியிலிருக்கிறவர்கள் மட்டுமே (அந்த செயல்முறையிருக்;கிறவர் மட்டும்) ஆனா நமக்கு பின்பற்றுகிற நபர் இயேசுவிற்கு அடுத்துள்ளவர் இருக்கலாம். நமக்கு வழிநடத்த குறியவர்கள் இயேசுவிடடு சற்று தூரமாயிருக்கலாம். நம் இருக்கும் இடம் எதுவாயிருந்தாலும், நம்முடைய கண்களும் நம்முடைய இருதயமும் எப்போதும் இயேசுவில் உறுதியாயிருக்கவேண்டும்.

வேத புத்தகத்தில் புதிய ஏற்பாட்டில் அநேக புத்தகங்கள் எழுதி ஆதி திருச்சபையின் ஸ்தாபருமான பவுல் என்னை பின்பற்றுங்கள் என்று எழுதவில்லை.. நான் கிறிஸ்துவை பின்பற்றுவது போல என்னைப் பின்பற்றுங்கள் என்றார்.

பவுலுக்கு தெரிந்திருந்தது வாத்து குஞ்சுகள் என்ன செய்யும் என்றும் ஒவ்வொரு சீடருக்கும் என்ன தெரிய வேண்டும் என்றும் ஒவ்வொரு சீடரும் பின் பற்றுகிறவ்;களாக இருக்க வேண்டும; நாம் எல்லோருமே இயேசுவை பின்பற்றவேண்டும்.

வேத்தில் பவுல் எழுதியிருக்கிறார். நூன் இயேசு கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற சட்டத்தை கொண்டிருக்கிறேன; என்று.

பவுலுக்கு வாத்துக் குஞ்சுகள் என்ன அறிந்திருக்கிறது என்றும் ஒவ்வொரு சீடனும் என்ன தெரிய வேண்டும் என்றும் தெரியும். நாம் ஒவ்வொருவரும் இயேசு சுயநலமின்றி நம்மை நடத்துவது போல வழிநடத்த வேண்டும். நம் வாழ்கையை அர்பணிக்வேண்டும் ஆண்டவரின் குடும்பத்தின் வளர்ச்சியும், அதின.

உத்தமத்தின் மீதுள்ள வளர்ச்சியும் பார்கவேண்டும் என்றால் வாத்து குஞ்சுகள் போல சீடராகுவது பற்றி யோசியுங்கள். ஒரே நேரத்தில் ஒரு தலைவராகவும் பின்பற்றுகிறவராக மாறுங்கள்.

விவாதி

10 நிமிடம்

- சீஷர்களை உருவாக்கும் எந்த ஒரு பகுதியை (வேதத்தை படிப்பது, புரிந்து கொள்வது, ஜெபிப்பது, கடவுளின் கதையை பகிர்ந்து கொள்வது போன்றவை) நீங்கள் கற்றுக் கொள்ள விரும்புகிறீர்கள்? அதற்கு யார் உங்களுக்கு உதவி செய்வார்?
- சீஷத்துவத்தின் எந்த ஒரு பகுதியை நீங்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறீர்கள்? நீங்கள் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒருவர் யார்?

படிக்கவும்

(5 நிமிடம்)

ராஜ்யம் எங்கே இல்லை என்பதைப் பார்க்கும் கண்கள்

இந்த செஷன்ல, தேவனின் ராஜ்ஜியம் அவங்க பாக்கற இடத்துல இல்லைன்னு தெரிஞ்சதும் எப்படி சீஷர்கள் வெகு தூரத்துலவேகமா பன்மடங்காகறாங்கனு நாம தெரிஞ்சுக்கலாம்.

மனிதர்களா, நாம நினைக்கறோம், நம்மால பாக்க முடிஞ்சதை கூர்ந்து கவனிச்சு செயல்படுத்தறோம். அதை நிஜம்னு சொல்றோம். இதுதான் நடைமுறை. ஆனாநாம பாக்க முடியாத விஷயங்களை குறி வெச்சா ராஜ்ஜியம் வேகமா வளருது. அங்க எதுவும் இல்லை. அங்க கண்டிப்பா இல்லை, ஆனாலும் இருக்கு.

தேவனின்விருப்பம் பரலோகத்துல செஞ்ச மாதிரி பூமயில செய்யாத இடங்கள் பல இருக்கு – உடைந்துப்போனஅசுர இடைவெளி, வலி நிறைந்த துன்புறுத்தல், பாதிப்புமரணமும் அன்றாட ஜீவிதத்துல ஒரு பகுதியா இருக்கு.

ஒவ்வொரு சீஷரும் – இயேசுவை பின்பற்றுபவரும் – தேவனின் ராஜ்ஜியம் எங்க இருக்குங்கறதை பாக்கறது மட்டுமில்லாம, தேவனின் ராஜ்ஜியம் எங்க இல்லைன்னு தெரிஞ்சுக்க வேண்டியது அவசியம். ராஜ்ஜியம்னா இடைவெளிகளுக்குள்ள இருளான பகுதிகள்ல நுழைந்துநிறப்பி ஒளியையும் மகிழ்ச்சியையும் இங்கியே வரச்செய்யணும்.

தேவனின் ராஜ்ஜியம் இல்லைங்கறதை ரெண்டு வழில தெரிஞ்சுக்கலாம் – ஏற்கனவே நமக்கு தெரிஞ்சவங்க மூலமாவும் இதுவரைக்கும் சந்திக்காதவங்க மூலமாவும் தெரிஞ்சுக்கலாம்.

நமக்கு ஏற்கனவே தெரிஞ்சவங்க மூலம் முதல் வழி – நம்ம கூட இருக்கற நண்பர்கள், குடும்பம், கூட வேலை செய்யறவங்க, கூட படிக்கறவங்க, பக்கத்து வீட்டுக்காரங்க நடந்துக்கறதை வெச்சி தெரிஞ்சுக்கலாம். இப்படித்தான் தேவனின் கதை படுவேகமா பயணிக்குது. அவங்க நமக்கு ஏற்கனவே தெரிஞ்சதுனால அவங்களை நேசிக்கறோம் அக்கறையோட இருக்கோம். இது சகஜம்.

இயேசு ஒரு திமிர்பிடிச்ச சுயநல பணக்காரன் – இப்ப நரகத்துல தண்டிக்கப்பட்டிருக்கறவனை பத்தி சொன்னாரு. பணக்காரன் கெஞ்சினான் – லாசருவை என் பிதா வீட்டுக்கு அனுப்புங்க. என் அஞ்சு சகோதரர்களையும் எச்சரிக்கட்டும், அப்ப தான் இந்த மோசமான இடத்துக்கு வர மாட்டாங்க.

சுயனலக்காரனுக்கும்நெருங்கினவங்க மேல எப்படி அன்பும் அக்கறையும் இருக்குனு இயேசு நமக்கு வெளிப்படுத்தராரு.

நமக்கு தெரிஞ்சவங்க நம்ம ஜீவிதங்கள்ல இருக்கறதுக்கு காரணம் தேவன் நம்மளை நேசிக்கராரு அவங்களை நாம நேசிக்கணும்னு விரும்பராரு.அன்பாவும் பொறுமையாவும் உறுதியோடையும் நாம அவங்க கூட இருக்கணும். அவங்களை சுத்தி தேவன்வெச்சிருக்கறவங்க மேல அக்கறையோட இருந்தா சீஷர்கள் பன்மடங்காகறாங்க. அதை பத்தி செயல் பட அவங்ககிட்ட திட்டம் இருக்கு.

அவங்க அக்கறையை அதிகப்படுத்த உதவலாம் சில வழிகள்ல பன்மடங்காக்க சாதாரண திட்டத்தை உருவாக்கலாம். இது இப்படித்தான். அவங்களுக்கு ஏற்கனவே தெரிஞ்ச 100 பேரை பட்டியல் போட சொல்லுங்க. 3 வகைகளா பிரிச்சி எழுத சொல்லுங்க.

- இயேசுவை பின்பற்றுபவர்கள்.
- இயேசுவை பின்பற்றாதவர்கள்.
- பின்பற்றாங்களா இல்லையானு உறுதியோட இல்லாதவங்க.

பின்பற்றுபவர்களுக்கு – சீஷர்கள் அவங்களை மேலும் பலன் கிடைக்க விசுவாசிக்க உற்சாகப்படுத்தணும். பின்பற்றாதவங்களுக்கு – எப்படி பகிர்ந்து அவங்களை நேசிக்கும் தேவனிடம் அறிமுகப்படுத்தணும்னு தெரிஞ்சுக்கலாம். உறுதியா சொல்ல முடியாதவங்களுக்கு – சீஷர்கள் அதிக நேரத்தை குடுத்து அவங்க மேலும் தெரிஞ்சுக்க வெக்கலாம்.

நாம சந்திக்காதவங்க மூலமா தேவனின் ராஜ்ஜியம் இல்லைன்னு தெரிஞ்சிக்கவும் வழி இருக்கு. நம்ம உறவுகளுக்கு அப்பாற்பட்டவங்களும் இருக்காங்க- நமக்கு தெரியாதவங்க, ஹெலோனு மட்டும் சொல்லிக்கிட்டு இருக்கற பக்கத்து வீட்டுக்காரங்க, வியாபாரிங்க தெருவுல நாம கடக்க பெண்கள், ஒவ்வொரு கிராமத்துலயும் நகரத்துலயும் இருக்கற அந்நியர்கள், அவங்களை சந்திச்சிருக்க மாட்டோம்.

இயேசு சொல்றாரு – எல்லா நாடுகள்லயும் சீஷர்களை உருவாக்குங்கள். இயேசு சொல்றாரு – எருசலேம்ல, யுதேல, சமாரியால, பூமியின் கடைசி பகுதி வரைக்கும் என்னை பத்தி சொல்லுங்க.

நமக்கு தெரிஞ்சவங்களோட பகிரும்போது தேவனின் கதை வெகு வேகமா பயணிக்கும். இதுவரைக்கும் தெரியாவங்களோட பகிரும்போது தேவனின் கதை வெகு தொலைவுல பயணிக்கும்.

நமக்கு தெரியாதவங்களை நேசிக்கவும் அக்கறையோட இருக்கணும்னு, அது இயற்கையா இருக்கும் பரிசுத்த ஆவியின் நம்ம ஜீவிதங்கள்ல சாட்சியா இருக்கும். வனுக்கு பிடிச்சவங்க ரொம்ப தொலைவுல, கடைசியா தொலைஞ்சவங்க. இவங்களுக்கு தான் அவர் அடிக்கடி திரும்ப திரும்ப நிறைப்பாறு.

நாம தேவனை போல இருக்க விரும்பினா, இவங்களை போல உள்ளவங்களுக்காக நம்ம நேரத்தை ஒதுக்கணும். நாம போகணும்னு தேவன் கட்டளையிடாறு. நெருக்கமானவங்ககிட்ட போகனும்ங்கறது மட்டுமில்லாம ஆண்மீக ரீதியான இருளல இருக்கறவங்க கிட்டயும் போகணும் – இயேசு, இந்த பேரை எப்பவுமே கேக்காதவங்ககிட்ட போகணும்.

தேவனின் வசனம் கூருது –தேவன் பெருமைபடறவங்களை அதிர்க்கறாரு ஆனா பணிவானவங்களுக்கு அருள் புரியாறு. பணிவானவங்களுக்குதிக்கற்றவங்க செயல் இழந்தபோனவங்களுக்கு அவர் குடுக்கற மாதிரி நாமளும் இயேசுவின் விசுவாசிகளுக்கு கிருபை புரியணும். தேவனால் அனுப்பட்டஜீவிதங்கள் மேல அக்கறையோட இருந்தா சீஷர்கள் பன்மடங்காகறாங்க. தேவனால் எங்கியும் அனுப்படாத மக்களிடம் அக்கறையோட இருந்த சீஷர்கள் மேலும் பன்மடங்காகறாங்க. ஆனாலும் அவங்களுக்கு திட்டம் அவசியமா இருக்கு.

சீஷரின் அக்கறை மத்தவங்க மேல இருந்தா உதவுங்கதேவன்ஏற்கனவே தீர்மானிச்சகேக்க தயாரா இருக்கறவங்களுக்கு பயிற்சி குடுத்து பன்மடங்காக்க நீங்க உதவலாம். இயேசு கூறினார் - நீங்க வீட்டுக்குள்ள நுழைஞ்சதும், 'இங்கு அமைதியை தேவன் ஆசிர்வதிக்கட்டும்னு சொல்லுங்க. அங்க இருக்கறவங்க அமைதியை விரும்பறவங்களா இருந்தா, அமைதிக்கான உங்கஜெபம் பலிக்கும்.அவங்க அமைதியை விரும்பலேன்னா, உங்க ஜெபம் திரும்ப உங்களை சேரும்.

அமைதியை கேக்க விரும்பற தேவனால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒருத்தரை கூப்பிடறோம்- தேவனின் வசனத்தை கேட்டு கீழ்படிய மத்தவங்களோட பகிர்ந்துக்கற விச்வாசியை அழைக்கறோம். சில பேரை மட்டுமே நமக்கு தெரியும், நம்ம நண்பர்களோட, உறவினர்களோட, சக ஊழியர்களோட, கூட படிச்சவன்களோடபக்கட்டுவீட்டுக்காரங்களோட பகிர்ந்துக்கறதை விட, நாங்க அமைதியை விரும்பறவங்களுக்கு பயிற்சி குடுக்கறோம்.

ஆனா நாம விசுவாசி மேல குறியா இருந்தா சிறந்த பலன்கள் கிடைக்கும். தேவன் சொன்னதுக்கு கீழ்படிஞ்சு மத்தவங்களோட பகிர்ந்துக்கறதுனால விசுவாசம் வெளிப்படுத்து. இயேசு பேசின அந்தநல்ல நிலம்மாதிரிதான் கீழ்படிஞ்சு பகிர்ந்துக்கற விசுவாசி.

இயேசு கூறினாறு – ஒரு சில விதைகள் நல்ல நிலத்துல விழுந்து சிதறினதைவிடஅதிகமா செடிகள் முப்பது அறுபது நுறு மடங்கு உற்பத்தி ஆச்சு.

- தேவனின் வசனத்தை நிராகரிக்கற அளவுக்கு விசுவாசிகளுக்கு கல்லு மனசு இல்லை.
- துன்புருத்தப்படும்போதோகஷ்டமானநேரங்கள்லயோ விசுவாசிகள் மனசு உடைய மாட்டாங்க.
- இந்த உலகத்தின் கவலைகளாலையோ கடைசி வரைக்கும் வராத பணத்துனாலையோ விசுவாசிகள் தடுமாறுவதில்லை.
- ஜெராசனஸ்ல பேயால் பீடிக்கப்பட்டவன் இயேசு வெளிப்படுத்தினதுக்கு கீழ்படிந்து பகிர்ந்துகிட்ட மாதிரி விசுவாசி.

கீழ்படிஞ்சு பகிர்ந்துகிட்ட ஒரு விசுவாசி இயேசுவை மேலும் தெரிஞ்சுக்க விரும்பின பலரை உருவாக்கினான்.

ராஜ்ஜியம் எங்கில்லையோ அங்க கவனிச்சு நமக்கு தெரிஞ்சவங்களை சந்திச்சு, இதுவரைக்கும் தெரியாதவங்களை எப்படி சீஷர்கள் பன்மடன்காக்கறாங்க இப்படி தான் தேவனின் ராஜ்ஜியம் தொலைதூரம் வேகமா வளருது.

விவாதி

10 நிமிடம்

- நீங்கள் யாருடன் பகிர்வதற்கு மிகவும் வசதியாக உணருகிறீர்கள்? - உங்களுக்கு ஏற்கனவே தெரிந்தவர்கள் அல்லது இதுவரை நீங்கள் சந்திக்காத நபர்கள்?
- அது ஏன் என்று நினைக்கிறீர்கள்?
- உங்களுக்கு வசதியற்ற நபர்களுடன் பகிர்வதில் நீங்கள் எவ்வாறு சிறப்பாக இருக்க முடியும்?

படிக்கவும்

(5 நிமிடம்)

கர்த்தருடைய இராபோஜனம்

இயேசு கூறினார் – *நானே வானத்திலிருந்திறங்கின ஜீவஅப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்.*

பரிசுத்த ஒற்றுமை அல்லது தேவனின் விருந்து நம்முடைய இணக்கத்தையும் இயேசுவுடன் நம்முடைய உறவையும் கொண்டாட ஒரு வழி.

இதை கொண்டாட ஒரு சாதாரண வழி இதோ –

நீங்க இயேசுவை பின்பற்றுபவர்களா கூடி, அமைதியா, தியானத்துல உங்க பாவங்களை ஒப்புக்குடுக்கணும்.

யாராவது இந்த வசனத்தை படிச்சிருக்கீங்களா – *நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு: நீங்கள் வாங்கிப்புசியுங்கள், இது உங்களுக்ககாகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.* (1 கொரிந்தியர் 11:23-24)

நீங்க ஒதுக்கி வெச்ச அப்பத்தை உங்க குழுவுக்கு குடுத்து சாப்பிடுங்க.

தொடர்ந்து படிங்க – *'போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். (1 Corinthians 11:25)*

ஒதுக்கி வெச்ச பழ ரசத்தையோ பானத்தையோ உங்க குழுவுக்கு குடுத்து குடிங்க.

படிச்சி முடிங்க - *'ஆகையால், நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய. மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.* (1 கொரிந்தியர் 11:26)

தேவனின் போஜனத்தை நீங்க பகிர்ந்துகிட்டீங்க.

பாடியோ ஜெபிச்சோ கொண்டாடுங்க – நீங்க அவருடையவர் அவர் உங்களுடையவர்!

தேவனின் போஜனம் – முதல் சர்ச்சிலிருந்து பரிசுத்த திருவருட்சாதனம் மற்றும் ஜூமே கருவிகளின் முக்கிய பகுதி.

செயல்பாடு

10 நிமிடம்

கர்த்தருடைய பந்தியை கொண்டாடுங்கள்

- உங்கள் குழுவுடன் கர்த்தருடைய இராபோஜனத்தைக் கொண்டாட அடுத்த 10 நிமிடங்களை செலவிடுங்கள்.

நீங்கள் கூடி வரும் போது:

1. அமைதியாக சிறிது நேரத்தை தியானத்தில் செலவிடுங்கள், உங்கள் பாவங்களை மன்னிக்க ஆண்டவரிடம் கேளுங்கள்.
2. பின்பு கீழே உள்ள வேத பகுதியை ஒருவரை வாசிக்கச் சொல்லுங்கள். நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். (1 கொரிந்தியர் 11:23-24)
3. உங்கள் குழுவிற்காக நீங்கள் ஒதுக்கி வைத்திருக்கிற அப்பத்தை எடுத்து, சாப்பிடுங்கள்.
4. வாசிப்பதைத் தொடரவும் – போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். (1 கொரிந்தியர் 11:25)
5. உங்கள் குழுவிற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட பழச்சாறைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
6. வாசித்து முடிக்க – ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். (1 கொரிந்தியர் 11:26)

பிரார்த்தனை மற்றும் பாடல்: தேவனை ஆராதியுங்கள். இராப்போஜனத்தில் பங்கு பெற்றீர்கள். நீங்கள் அவருடையவர்கள், அவர் உங்களுடையவர்.

சரிபார்த்தல்

(1 நிமிடம்)

இந்த அமர்வில் கேட்ட கருத்துக்கள்:

- பிறருக்கு உங்கள் தரிசனத்தைக் கொடுப்பது மிகப்பெரிய ஆசீர்வாதம்
- வாத்து போன்ற மெதுவான சீஷத்துவம்
- ராஜ்யம் எங்கே இல்லை என்பதைப் பார்க்கும் கண்கள்

இந்த அமர்வில் கேட்ட முறைமைகள்:

- 3 நிமிட சாட்சி
- கர்த்தருடைய இராபோஜனம்

அடுத்த அடி

கீழ்படி

உங்கள் 3 நிமிட சாட்சியத்தை பயிற்சி செய்ய இந்த வாரம் நேரத்தை செலவிடுங்கள். பின்னர் நீங்கள் “தெரியாதவர்” அல்லது “அவ்விசுவாசி” என்று குறிப்பிட்ட 100 பேர் பட்டியலில் இருந்து குறைந்த பட்சம் ஒரு நபருடன் சாட்சியத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்.

பகிர்ந்து கொள்

3 நிமிட சாட்சியம் மூலம் நீங்கள் யாரைப் பயிற்றுவிக்க விரும்புகிறீர்கள் என்று கடவுளிடம் கேளுங்கள். நீங்கள் செல்வதற்கு முன் இந்த நபரின் பெயரை குழுவுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

அமர்வு 5

சரிபார்

(1 நிமிடம்)

பங்கேற்ற அனைவரும் சரிபார்த்து விட்டார்களா.

ஜூம் பயிற்சி/சரிபார்த்தல் மற்றும் குறியீட்டைப் பயன்படுத்துதல்: **6542**

ஜெபி

(5 நிமிடம்)

அவருடைய ஜனங்களின் சாட்சியின் மூலம் அவர் கிரியை செய்வதற்காய் ஆண்டவருக்கு நன்றி சொல்லுங்கள். தேவ ஆவியானவர் உங்கள் நேரத்தை வழி நடத்த கேளுங்கள்.

திரும்பிப் பார்

(5 நிமிடம்)

ஆரம்பிப்பதற்கு முன்பு சரிபார்ப்பதற்கு சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

கடந்த பகுதியின் முடிவில் நீங்கள் கற்றுக் கொண்டதை நடைமுறைப்படுத்த உங்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு வழிகளில் சவால் விடுக்கப்பட்டது.

இந்த வாரம் உங்கள் குழு எப்படி செயல் பட்டது என்பதைப் பார்க்க சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

மேலோட்டம்

(1 நிமிடம்)

இந்த அமர்வில் இந்தக் கருத்தைக் குறித்து கேட்போம் மற்றும் விவாதிப்போம்:

- சமாதானமான மனிதர்

இந்த முறைகளை நம்முடைய தொகுப்பில் சேர்ப்போம்:

- B. L. E. S. S ஜெபம்
- பிரார்த்தனை நடை

படிக்கவும்

(5 நிமிடம்)

பிரார்த்தனை நடை

தேவனின் வசனம் கூருது நாம 'மனு போடணும்,ஜெபிக்கணும், பரிந்துரைக்கணும் எல்லாருக்கும் நன்றி தெரிவிக்கணும், ராஜாக்களுக்காக எல்லா அதிகாரிகளுக்காக - நாம சமாதானமா அமைதியான ஜீவிதங்களை பரிசுத்தமா தெய்வீகமா ஜீவிக்கலாம். இது நல்லது, எல்லா மக்களும் ரட்சிக்கப்பட்டு சத்தியத்தை அறிந்துக்கொள்ளணும்னு விரும்பற நம் ரட்சகர் தேவனை மகிழ்விக்கும்.

தேவனின் கட்டளைக்கு கீழ்படிந்து மற்றவர்களுக்காக நடந்துகிட்டே ஜெபிக்கறது சாதாரண வழி. நடந்துகிட்டே தேவனிடம் ஜெபிப்பது நடந்துகிட்டே ஜெபிக்கற மாதிரி தான்.

நம் கண்களை மூடாம தலை குனியாம, நம்மளை சுத்தி நடக்கறதை பாத்துகிட்டு இதயங்களை பணிஞ்சு தேவனிடம் பணிவோட தலையிடும்படி கேட்டுக்கறோம். ரெண்டு மூணு பேரோட சிறிய குழுக்கள்ல நடந்துகிட்டே ஜெபிக்கலாம் அல்லது நீங்களே நடந்துகிட்டு ஜெபிக்கலாம்.

நீங்க ஒரு குழுவுல போகும்போது – எல்லாரையும் சத்தம் போட்டு ஜெபிக்க சொல்லுங்க, எல்லாரும் பாக்கறதையும் தேவன் அவங்க இருதயத்துல கொண்டு வர அவங்க தேவைகளையும் தேவனிடம் பேச சொல்லுங்க.

நீங்க தனியா போனா – அமைதியா ஜெபிங்க அல்லது வழில சந்திக்கரவங்களோட சத்தம்போட்டு ஜெபிங்க.

நீங்க நடந்துகிட்டே ஜெபிக்கும்போது நாலு வழிகள் இருக்கறதை தெரிஞ்சுக்கலாம்:

- கவனிப்பு – நீங்க எதை பாக்கறீங்க ? குழந்தையோட பொம்மையை பாத்தா, பக்கத்து வீட்டு பிள்ளைங்களுக்காக, குடும்பங்களுக்காக, பள்ளிகளுக்காக ஜெபிக்க விரும்புவீங்க.
- ஆராய்ச்சி – உங்களுக்கு என்ன தெரியும் ? பக்கத்துவீட்டுக்காரங்களை பத்தி தெரிஞ்சிருந்தா, அங்க இருக்கறவங்களை பத்தி தெரிஞ்சிருந்தா, அநியாயங்கள் குற்றங்கள் நடக்குதா. இதுக்காக ஜெபிச்சு தேவனை செயல்பட சொல்லுங்க.

- வெளிப்பாடு – பரிசுத்த ஆவி உங்க இருதயத்தை தூண்டலாம் அல்லது குறிப்பிட்ட தேவைக்காக எண்ணத்தை ஏற்படுத்தலாம். கேளுங்க – அப்புறம் ஜெபிங்க.
- வசனம் – நீங்க நடக்கும்போது தேவனின் வசனத்தின் சில பகுதியை படிச்சிருக்கலாம், பரிசுத்த ஆவி உங்க மனசுல வசனத்தை கொண்டு வந்திருக்கலாம். அந்த வசனத்தை படீங்க, அது மக்களை பாதிக்கலாம்.

நீங்க நடந்துகிட்டே ஜெபிக்க அஞ்சு விஷயங்கள் இருக்கு:

- அரசாங்கம் –அரசாங்க மையங்கள் அதாவது நீதிமன்றங்கள், நியமன கட்டடங்கள் அல்லது நீதிமன்ற வளாகங்களா பாருங்க. அதை பாதுக்காக்க நீதிக்காக, தெய்வீக ஞானம் தலைவர்களுக்கு கிடைக்க ஜெபிங்க.
- வணிகம் காமர்ஸ் –ஜெபிக்கறதுக்காக வணிக மையங்கள் அதாவது நிதி மாவட்டங்கள் அல்லது கடைகளை பாருங்க. நியாயமான முதலீடு நல்ல வாரிசுகளின் வளங்களை பாருங்க. பொருளாதார நியாயத்துக்காக வாய்ப்புக்காக தாராளமாக லாபங்களை குடுக்கும் தெய்வீக மக்களுக்காக ஜெபிங்க.
- கல்வி –கல்வி கூடங்கள் அதாவது பள்ளிகூடங்கள் நிர்வாக கட்டடங்கள், தொழில்முறை பயிற்சி கூடங்கள், சமூக கல்லூரிகள் பல்கலைக்கழகங்களுக்காக ஜெபிங்க. நியாயமான ஆசிரியர் தேவனின் சத்தியத்தை சொல்லிக்குடுத்து மாணவர்களின் மனதை பாதுக்காக்கும்படி ஜெபிங்க. பொய்களையும் குழப்பங்களையும் அகற்ற தேவன் தலையிடும்படி ஜெபிங்க. இந்த இடங்கள் புத்திசாலிகளை உருவாக்கி ஊழியம் செய்யும்படி ஜெபிங்க.
- தொடர்பு – தொடர்பு நிலையங்கள் அதாவது வானிலை நிலையங்கள், தொலைகாட்சி நிலையங்கள் பத்திரிகை வெளிஈட்டார்களை பார்த்து ஜெபிங்க. தேவனின் கதைக்காக விசுவாசிகளின் சாட்சி நகரம் உலகம் முழுவதும் பரவ ஜெபிங்க. அவருடைய ஊடகம் மூலமா தேவனின் செயலை கவனிக்க அவருடைய வசனங்கள் மூலமா ஜெபிங்க.
- ஆண்மீகம் – ஆண்மீக மையங்கள் அதாவது சர்ச், மசூதி ஆலையங்களை பார்த்து ஜெபிங்க. ஒவ்வொரு ஆண்மீகவாதியும் அமைதியை இயேசுல அடையணும், எந்த தவறான மதத்துனாலையும் குழம்பி தடுமாறக்கூடாது.

கடைசியா, நீங்க நடக்கும்போது சந்திக்கறவங்களுக்காக ஜெபிக்க அஞ்சு வழிகள் இருக்கு:

நீங்க நடந்துகிட்டே ஜெபிக்கும்போது, வாய்ப்புகளுக்காக எச்சரிக்கையா இருங்க தனிப்பட்டவர்களுக்காகவும் வழில சந்திக்கறவங்களுக்காகவும் தேவனின் ஆவியின் தூண்டுதலை கேட்டு ஜெபிங்க. நாங்க இந்த சமூகத்துக்காக ஜெபிக்கறோம், உங்களுக்காக குறிப்பிட்ட வழில ஜெபிக்க ஏதாவது இருக்கானு நீங்க கேக்கலாம். இந்த பகுதிக்காக ஜெபிக்கறேன்னு சொல்லலாம். உங்களுக்கு தெரிஞ்ச குறிப்பிட்ட விஷயத்துக்காக நாம ஜெபிக்கணுமானு கேளுங்க. அவங்க சொன்னதை கேட்டு அவங்க தேவைகளை பத்தி கேக்கலாம். அவங்க சொன்னா, அப்பவே அவங்களுக்காக ஜெபிங்க. தேவன். வழி நடத்தினா, மத்த தேவைகளுக்காகவும் ஜெபிக்கலாம்.

bless வார்த்தையை பயன்படுத்துங்க 5 வழிகள்ல நீங்க ஜெபிக்க உதவும்:

- body (ஆரோகியம்)
- labor (வேலையும் பணமும்)
- emotional (மன உறுதி)
- social (உறவுகள்)
- spiritual (ஆண்மீகம்)

பல விஷயங்கள்ல, மக்கள் நன்றியோட உங்க ஜெபத்தை ஏத்துக்கறாங்க.

ஒருவர் கிறிஸ்துவா இல்லைனா, உங்க ஜெபம் ஆண்மீக பேச்சா ஆரம்பிக்கலாம் தேவனின் கதையும் உங்க கதையும் பகிர்ந்துக்க வாய்ப்பா இருக்கலாம். பைபில் ஸ்டடிக்கு உங்க வீட்ல அழைக்கலாம் அல்லது அவங்க வீட்டுக்கு போகலாம்.

ஒருவர் கிறிஸ்துவா இருந்தா நீங்க நடந்துகிட்டே ஜெபிக்க அழைக்கலாம் அல்லது எப்படி நடந்துகிட்டே ஜெபிக்கறது தேவனின் குடும்பத்துல மேலும் வளர bless ஜெபத்தை எப்படி சாதாரண வழிகள்ல ஜெபிக்கறதுன்னு பயிற்சி குடுங்க.

நடந்துகிட்டே ஜெபிக்கறது - ஜூமே கருவிகளில் இன்னொரு சாதாரண கருவி.

படிக்கவும்

(5 நிமிடம்)

சமாதானமான மனிதர்

சூமேபயிச்சிக்குஉங்களைவரவேற்கிறேன். சமாதானகாரணர் என்றஒருயோசனையைமுன்பேவழங்கியிருந்திதோம். இந்த கூட்டத்தில் அந்தநபர் எப்படிப்பட்டவர்,அப்படிஒருநபரைபார்த்தால் எப்படியெனவிரிவாகபார்கலாம்.

இயேசுவுக்குசீடர்கள் இல்லாத இடத்திலேயோ,கொஞ்சம் மட்டும் இருக்கிற இடங்களில் கூட சீடர்களைஉருவாக்க இந்தசமாதானநபர்களாளேமுடியும்.

இயேசுதன்னுடையசீஷர்ககளைபுதிய இடங்களுக்குமற்றவர்களைசீடராக்கஅனுப்பும்போது,சாதரானஆனால் திட்டமிட்டஒருஅலோசனையைகொடுத்தார்.

இயேசுசொன்னார். பணப்பையையும் சாமான் பையையும் பாதரட்சைகளையும் கொண்டுபோகவேண்டாம்; வழியிலேஒருவரையும; வினவவும; வேண்டாம். ஒருவீட்டில் பிரவேசிக்கிறபோது; இந்தவீட்டிற்குச் சமாதானம் உண்டாகட்டும் என்றுசொல்லுங்ள். சமாதானபாத்திரன் அங்கே இருந்தால் நீங்கள் கூறினசமாதானம் அவரிடத்திலேயேதங்கும், இல்லாதிருந்தால் அருஉங்களிடத்திற்குத் திரும்பிவிடும். அந்தவீட்டி லேயேதங்கிகொ டுப்பததைபு சித்துகுடியுங்கள்; வேலையாள் தன்னுடைய கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான். வீட்டிற்குவீடுபோகாதிருங்கள்.

ஆனா இதற்கெல்லாம் என்னஅர்த்தம்.

நாம் மற்றவர்களைசீடராகமுயச்சிசெய்யும் பேது,நம்முடையமுதல் சிந்தனைஅதற் கேற்றபணம் இருக்கிறதா,அதற்கேற்றநபரைகண்டுப்பிடிக்கமுடியுமா? எப்படிசெய்யவேண்டும் என்றதெளிவானதிட்டங்கள் எல்லாமேதேவை. இயேசுபோங்கள் என்றுசொல்லியிருக்கிறார் என்றால் நாம் உடனேபோகவேண்டும் எல்லாரிடத்திலும் எப்பொழுதும் இதைசொல்லவேண்டும்.

இயேசுகொடுத்த இந்தவழிமுறையில் பணத்தைபற்றியோ, தீவிரமானஉற்சாகத்தைபற்றி யோகவலைபடுவதைபார்க்கமுடியாது. நம்முடையநோக்கத்தைபற்றிதான் கவலைபட வேண்டும். இயேசுவிற்கு தேவைதன்னுடையசீடர்கள் ஒருசமாதானநபரைகண்டு; பிடிக்கவேண்டும், அதற்காக நேரத்தைசெலவு செய்யவேண்டும்.

இயேசுவைபின்பற்றாதவர்கள் இல்லாமல் இருக்கலாம் அல்லதுமிகவும் குறைவாக இருக்கலாம்.

ஆனால,நமதுமுக்கியமானநோக்கம் சமாதானநபர் ஒருவரைகண்டுபிடிக்கவேண்டும் என்பதுதான் சமாதானநபர் அப்படியென்றால்:

- உங்களைபற்றியும்,ஆண்டவரைபற்றியும், இயேசுவின் சுவிஷேத்தைபற்றியும் கேட்கஒருதிறந்தமனதுள்ளவராக இருக்கவேண்டும்.
- உங்களைவீட்டிற்கோ,அவர்கள் வேலைசெய்யும் இடத்திற்கோ,அவர்கள் குடும்பமாகஒன்றுகூடியிருக்கும் இடததிற்கோமிகவும் உபசரிப்போடுவரவேற்கின்றஒருநபராயிருக்கவேண்டும்அவர் மற்றவர்களால் தெரியப்படுகின்றஒருநபராகவும்.
- கொஞ்சம் நபர்களைதீடிரென்று கூட்டுகின்றதகுதிபடைத்தஒருநபராகவும் இருக்கவேண்டும்.
- நம்பிக்கைக்குறியவரும்,தனக்குகிடைத்ததைபகிர்ந்துகொள்ளகூடியவராகவும் இருக்கவேண்டும். நீங்கள் போனபிறகுஅதைதொடருபவராகவும் இருக்கவேண்டும்.

வேதபுத்தகத்தில் இயேவும் சீஷர்களும் இப்படிப்பட்ட சமாதானத்தின் நபர்களை கொஞ்சம் கூட நினைக்காத இடத; தில் பார்பதைபார்க்கமுடிகிறது.

இயேசுஅசுத்தஆவியினால் பாதிக்கபட்டஒருவனைஅவர் பார்த்தார். அவன் சங்கிலியினால் கட்டப்பட்டு, தனியாகவாழ்பனாயிருந்தான். நாம் அந்தநபரைசமாதானநபர் என்றுநினைத்துகூடபார்க்கமாட்டோம். ஆனாஅவன் இயேசுவிடம் கேட்கமனதைதிறந்தான். அவன் தங்கியிருந்த இடத்திற்குமிகுந்தமரியாதையோடுவரவேற்றான்.

அவனைஎல்லோருக்கும் தெரியும். அவன் நினைத்தால் ஆட்களை கூட்டவும் முடியும்.அதுஅவனுடையஅரியகுனநலனும் கூட,அவன் நம்பிக்கைக்குறியவன் என இயேசுபார்த்தார். இயேசுதனக்கு செய்ததைதன்னுடை யகுடும்பத்தினரிடமும், அருகில்வசிப்பவிடமும், தன் ஊரார் அனைவரிடமும் சொன்னான். இயேசுஅந்த ஊருக்குதிரும்பிஒருநாள் வந்தபோது,பெரிய ஜனக்கூட்டம் வந்தது. அவன் கூறியஅந்தஅந்தமனிதரைநேரில் பார்ப்பதற்காக.

இதேப்போல் சமாரியாவில் கினற்றின் அருகேஒருபெண்னைப்பார்த்தர்,அவள் அவரைகேட்கமனதைதிறந்தாள். அவளுக்குஉபசரிக்கும் குணம் இருந்தது. தண்ணீர் கேட்டவுடன் அதற்குபதில் சொன்னாள். அவளுக்கு5 கணவர்கள்,ஆனால் இப்பொழுதுவேறுநெருவனிடம் தான் இருக்கிறாள். அதுவும் அந்தசின்னகிராமத்தில் அவளைஎல்லாருக்கும் கண்டிப்பாதெரிந்திருக்கிறது, இயேசுஅவளோடு பேசினார், பிறகுஅவள் நம்பிக்கைகுறியவளாக இருந்தாள். அவள் தனக்குகிடை த்தஅனுவபவத்தைபகிர்ந்து க்கொண்டாள். அந்தஊரிலுள்ளஅனைவரும் இயேசுவிடம் கேட்கதயராகிவந்தார்கள். அவர் அதைசெய்தும் முடித்தார்.

அதனால் சமாதானகாரணர் எங்கேயும் இருக்கலாம் யாராகவும் இருக்கலாம், நமக்குதெரிந்தவரோமுன் பேபார்த்தவராகவும் இருக்கலாம். ஆனால் எப்படிகண்டுப்பிடிக்கமுடியும்?

அதற்கான 3 எளிமையானவழிகள் -

ஒருசமுகத்தின்மக்களிடம் கேட்கலாம்,உங்கள் மத்தியில்எல்லாருக்கும் தெரிந்தநபர் யாரென்று? தம்மைப்பற்றிநினைப்பதற்குமுன்பு மற்;றவர்கள் பற்றிநினைப்பவர் யாராவது இருக்கிறார்களா? அப்பொழுதுநாம் கேட்கிறஒருபொதுவானநபர் அவரைநாம் பார்க்கவேண்டும்,ஆவிக்குறியயோசனைகள் பகிர்ந்துகொள்ளும்போது, திறந்தமனதுள்ளவராகஅதைமற்வர்களிடம் அதைபகிரு கிறாஎன்றுஉ ற்றுநோக்கவேண்டும்.

ஒருவன்அவனுடைய ஜெபவேளையிலோ, வேலைசெய்யும்பொழுதோ, பொழுதுபோக்குநேரத்திலோ, முடிந்தநேரத்திலோ, அவனுக்குஒரு ஜெபம் ஏறெடுக்கலாம். பிறகுஅதைஆவி; க்குறியபேச்சுவார்த் தையாகமாற்றலாம்.

ஆண்டவர் ஒருவருடையவாழ்வில் கிரியைசெய்கிறாhஎ ன்றுஅறியஒவ்வொருபேச்சுவார்த்தையி; ன் போதும் ஆவிக்குறியயோசனைசொல்லவேண்டும். அவர் மகிழ்ச்யோடுதிறந்தமன தோடடுதயாரானால் இன; னும் விவாதிக்கஒருகுழுவை கூட்டஅனுமதிகேட்கலாம். நபரைகேட்டுதெரிந்துக்கொள்வது, ஜெபத்தைஏறெடுப்பது, ஆவிக்குறியயோசனைகளைசொல்வது இவை மூன்றும் தான் சமாதானதூதுவரைநாம் கண்டுக்கொள்வதற்கானவழிகள்.

எப்படிஅவரைகண்டுபிடித்தாலும் சரி,அந்தசமாதானத்தின் நபரோடுக் கூடத்தான் நம்முடையசீராக்கும் செயல்முறைகளுடையஅதிகப்படியானநேரம் செலவழிக்கவேண்டும்.

நான; நினைப்பது இப்படித்தான்; நம்முடைய நேரத்தைநன்றாகபய ண்படுத்துவதென்றால், எல்ரோருக்காவும் நம்முடைய நேரத்தைசரியாகபிரி த்துக்கொடுப்பதுஎன்பதுதான். ஆனால், இயேசுநமக்குகாண்பித்தது, நாம் யாருடையநேரத்தின் விஷயத்தில் கருமிதனமாக இருக்ககூடாதுமாறாகஅதிகம் கொடுக்கவேண்டும்.

இயேசுசெல்கிற இடத்திலெல்லாம் நிறை ஜனக்கூட்டம் வந்திருந்தது. அதிகமுறை இயேசுஅவர்களைதவிர்த்துதன்னுடைய 12 சீடர்களுடன; நேரத்தைசெ லவிடுவதைநம்மால் பார்க்கமுடிகிறது.

இதேபோல் இயேசுபலதடவை இயேசு 3 பேர் அடங்கியகுழுவிற்காகநிறையநேரம் செலவிடுவதைபார்கக்கமுடிகிறது.

நம்மைவிடவல்லவரும், ஆற்றல்மிக்கவரும், ஒழுக்கமிக்கவரும்; ஞானமிகுந்தவரும், புரிந்துகொள்ளுக்குடியவருமான, இரக்கமுள்ள இயேசுசிலநபரு களுக்காகநேரத்தைஅதிகம் செலவுசெய்திருக்கிறார், தம்முடையசீடரையும் அப்படியேசெய்யசொல்லியிருக்கிறார் என்றால் அதேமாதிரிவடிவத்தைநாம் பின்பற்றுகிறதுஅவசியமல்லவா?

சுமாதானத்தின்.

ஆதாவதுமறைந்திருக்கும் பொக்கிஷத்தைதே டுவதுபோல் நாம் அவரைதேடியாகவேண்டும். அப்படிநாம் தேடிகண்டுப்பிடித்தஅந்தநபராணவர் ஆண்டவருடைய ராஜ்ஜியத்தின் வளர்ச்சியில் அவருடையபங் குஅளவிடமுடியாதஒன்றாகும்.

விவாதி

10 நிமிடம்

- சமாரியப் பெண் அல்லது கெர்கெசேனர் ஊரை சேர்ந்த பேய் பிடித்த நபரைப் போல் இருப்பவர் சமாதானமான நபராய் இருக்க முடியுமா? ஏன் அல்லது ஏன் இல்லை?
- உங்களுக்கு அருகாமையில் இருக்கும் எந்த சமூகம் தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பெற்றிருக்கிறது அல்லது இல்லை?
- உங்களுக்கு அருகிலுள்ள எந்த சமூகத்தில் கிறிஸ்துவின் ராஜ்ஜியம் குறைவாய் உள்ளது? எப்படி அமைதலாய், திறந்த மனதுடையவராய், விருந்தோம்பலாய், மற்றவர்களை நன்கு அறிந்தவராய், பகிர்ந்து கொள்பவராய் இருக்கும் ஒரு நபர், சுவிஷேசம் பரவுவதை துரிதப்படுத்த முடியும்?

செயல்பாடு

10 நிமிடம்

B. L. E. S. S ஜெபத்தை பயிற்சி செய்க.

- இரண்டு அல்லது மூன்று குழுக்களாக பிரிந்து B. L. E. S. S ஜெபத்தை பயிற்சி செய்க. B. L. E. S. S ஜெபத்தின் 5 பகுதிகளை பயிற்சி செய்யவும்.

BLESS பிரார்த்தனை முறை

BLESS பிரார்த்தனை முறையின் மூலம், நீங்கள் எந்த நேரத்திலும் சந்திக்கும் நபர்களுக்காக ஐந்து வழிகளில் பிரார்த்தனை செய்யலாம், ஆனால் குறிப்பாக பிரார்த்தனை நடைபயிற்சி போது.

- **உடல்** - சுகம்
- **தொழில்** - வேலை மற்றும் நிதி
- **உணர்ச்சி** - நல்வழி
- **சமூகம்** - உறவுகள்
- **ஆன்மீகம்** - கடவுளை அதிகம் தெரிந்து கொண்டு அவர் மேல் இன்னும் அதிகமாய் அன்பு செலுத்துவது

செயல்பாடு

(60 - 90) நிமிடங்கள்

பிரார்த்தனை நடை

- இரண்டு அல்லது மூன்று குழுக்களாக பிரிந்து சமூகத்திற்குள் சென்று ஜெப நடையை பயிற்சி செய்யுங்கள்.
- வெளியே செல்வதற்கான இருப்பிடத்தை தேர்ந்தெடுப்பது எளிதான ஒன்று அல்லது நீங்கள் ஒரு குறிப்பிட்ட இருப்பிடத்தை தெரிந்தெடுக்கலாம்.
- கடவுள் வழிநடத்துகிறபடியே சென்று, 60-90 நிமிடங்கள் இந்தச் செயலில் செலவிடத் திட்டமிடுங்கள்.
- இந்த அமர்வு ஒரு பிரார்த்தனை நடை பயிற்சியுடன் முடிவடைகிறது.

உங்கள் பிரார்த்தனைக்கு வழிகாட்டக்கூடிய நான்கு ஆதாரங்கள்:

1. **கவனிக்க** - நீங்கள் என்ன பார்க்கிறீர்கள்? ஒரு பொம்மையை வீட்டின் முற்றத்தில் பார்த்தால், நீங்கள் அக்கம் பக்கத்திலுள்ள பிள்ளைகளுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், அப்பகுதியில் உள்ள பள்ளிகளுக்காகவும் ஜெபம் செய்யலாம்.
2. **ஆராய்ச்சி** - உங்களுக்கு என்ன தெரியும்? அக்கம் பக்கம் பற்றி நீங்கள் பத்திரிக்கையில் வாசித்திருந்தால், அங்கு வாழும் மக்களைப் பற்றி ஏதாவது தெரிந்திருக்கலாம், அல்லது அந்த பகுதியில் குற்றம் அல்லது அநீதி நிறைந்திருக்கலாம். அதற்காய் செயல்பட கடவுளிடம் கேளுங்கள்.
3. **வெளிப்படுத்துதல்** - பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்தில் ஒரு குறிப்பிட்ட தேவையையோ அல்லது ஜெபத்தின் ஒரு பகுதியையோ கொண்டு வரலாம். கவனித்து அதற்காய் ஜெபம் செய்யவும்.
4. **வசனம்** - கடவுளுடைய வார்த்தையின் ஒரு பகுதியை உங்கள் ஜெப நடைக்கு முன்பு நீங்கள் வாசித்திருக்கலாம். பின் நீங்கள் நடக்கும்போது பரிசுத்த ஆவியானவர் ஒரு வசனத்தை உங்கள் மனதில் கொண்டு வரலாம். அந்தப் பகுதி எப்படி சுற்றியுள்ளவர்களை பாதிக்கும் என்பதற்காக ஜெபியுங்கள்.

ஜெபத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் ஐந்து பகுதிகள்:

1. **அரசாங்கம்** - அரசாங்க மையங்கள், நீதிமன்றங்கள், கமிஷன் கட்டிடங்கள் அல்லது சட்ட அமலாக்க அலுவலகங்கள் ஆகியவற்றுக்காக ஜெபியுங்கள். அந்த பகுதியின் பாதுகாப்பிற்காகவும், நியாயத்திற்காகவும், கடவுளுடைய ஞானம் தலைவர்களுக்குக் கொடுக்கப்படும் படியும் ஜெபியுங்கள்.
2. **வணிகம் மற்றும் வர்த்தகம்** - வர்த்தக மையங்களையும், வணிக வளாகங்களையும் பார்த்து ஜெபியுங்கள். நேர்மையான முதலீடுகளுக்காகவும் அவற்றை நல்ல முறையில் நிர்வகிக்கவும் ஜெபியுங்கள். நல்ல நிர்வாகத்திற்காகவும். பொருளாதார நீதி மற்றும் வாய்ப்பிற்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள். கடவுளுக்குத் தாராளமாக கொடுப்பவர்களுக்காகவும் ஜெபியுங்கள்.
3. **கல்வி** – பள்ளிகள், கல்வி மையங்கள், நிர்வாக கட்டிடங்கள், தொழிற்பயிற்சி மையங்கள், சமூக கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களைப் பார்த்து ஜெபம் செய்யுங்கள். நீதியுள்ள கல்வியாளர்கள் கடவுளுடைய சத்தியத்தைப் கற்பிப்பதற்கும், மாணவர்களின் பாதுகாப்பிற்க்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள். பொய்யையும் குழப்பத்தையும் வளர்க்க. எடுக்கும் முயற்சிகளை கடவுள் தலையிட்டுத் தடுக்க ஜெபியுங்கள். நல்ல குடிமகன்களை இந்த இடங்களிலிருந்து அனுப்ப ஜெபியுங்கள்.
4. **தகவல்தொடர்பு** - தகவல்தொடர்பு மையங்களான வானொலி நிலையங்கள், தொலைக்காட்சி நிலையங்கள் மற்றும் செய்தித்தாள் நிறுவனங்கள் ஆகியவற்றைப் பார்த்து ஜெபியுங்கள். .

கடவுளுடைய கதையும் சீஷர்களின் சாட்சியும் நகரம் மற்றும் உலகம் முழுவதிலும் பரவ வேண்டும் என்பதற்காக ஜெபியுங்கள். அவரது செய்தி எல்லா தரப்பு மக்களையும் சென்றடைய ஜெபியுங்கள்.

5. **ஆன்மீகம்** – தேவாலயம் போன்ற ஆன்மீக மையங்களைப் பார்த்து பிரார்த்தனை செய்யவும் இயேசுவில் சமாதானத்தையும் ஆறுதலையும் கண்டடையவும், குழப்பமடையாமலிருக்கவும் ஜெபியுங்கள்.

ஜெபி

(5 நிமிடம்)

நீங்கள் பிராத்தனை நடை பயிற்சிக்கு செல்லு முன் உங்கள் குழுவினருடன் சேர்ந்து ஜெபம் செய்ய மறவாதேயுங்கள்.

எளியவர்களையும் கடைக் கோடியில் உள்ளவர்களையும் இரட்சிக்கப்படாதவர்களையும் அவர் நேசிப்பதற்காய் ஆண்டவருக்கு நன்றி சொல்லுங்கள்!

உங்களுடைய மனதையும், உங்கள் நடை பயிற்சியின் போது நீங்கள் சந்திக்கும் நபர்களின் மனதையும் அவர் தயார் செய்யும் படி ஆண்டவரிடம் கேளுங்கள்.

அமர்வு 6

சரிபார்

(1 நிமிடம்)

பங்கேற்ற அனைவரும் சரிபார்த்து விட்டார்களா.

ஜூம் பயிற்சி/சரிபார்த்தல் மற்றும் குறியீட்டைப் பயன்படுத்துதல்: **1235**

ஜெபி

(5 நிமிடம்)

சென்ற அமர்வில் ஆண்டவர் செய்த காரியங்களுக்காய் அவருக்கு நன்றி சொல்லுங்கள். கீழ்ப்படிவது கடினமாக இருக்கும்போது உதவும்படி அவரிடம் கேளுங்கள், உங்கள் நேரத்தை ஒன்றாக வழிநடத்த பரிசுத்த ஆவியானவரிடம் வேண்டிக் கொள்ளவும்.

திரும்பிப் பார்

(5 நிமிடம்)

ஆரம்பிப்பதற்கு முன்பு சரிபார்ப்பதற்கு சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

கடந்த பகுதியின் முடிவில் நீங்கள் கற்றுக் கொண்டதை நடைமுறைப்படுத்த உங்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு வழிகளில் சவால் விடுக்கப்பட்டது.

இந்த வாரம் உங்கள் குழு எப்படி செயல் பட்டது என்பதைப் பார்க்க சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

மேலோட்டம்

(1 நிமிடம்)

இந்த அமர்வில் இந்தக் கருத்தைக் குறித்து கேட்போம் மற்றும் விவாதிப்போம்:

- விசுவாசம் அறிவை விட சிறந்தது

இந்த முறையை நமது பட்டியலில் சேர்த்துக் கொள்வோம்:

- 3/3 குழு சந்திப்பு

படிக்கவும்

(5 நிமிடம்)

உண்மைத்தண்மை

இந்த செஷன்ல,விசுவாசம் தான் அறிவையும் பயிற்சியையும்விட முதிர்ச்சியான விஷயம் எப்படின்னு நாம தெரிஞ்சுக்க போறோம். இப்ப, சர்ச்சுலரெண்டு ஐடியாக்கள் பல பிரச்சனைகளை ஏற்படுத்தி இருக்கு.

முதல் ஐடியா, தேவனின் வசனம் எந்த அளவுக்கு தெரியும்ங்கறதை பொறுத்து ஆண்மீக முதிர்ச்சியை வெச்சு தெரிஞ்சுக்கலாம். சரியான விசுவாசம்னு நினைக்கறாங்க – அல்லது பழமைவாதம் – இது ஒருவருடை விசுவாசத்தின் நல்ல அளவுகோல்.

ரெண்டாவது ஐடியா எதுன்னா ஊழியம் ஆரம்பிக்கறதுக்கு முன்னாடி வழிநடத்த அவங்களுக்கு திறமை தேவை. எல்லாம் தெரிஞ்ச மாதிரி நடந்துப்பாங்க – ஒருத்தருடைய திறன் அவங்களோட ஊழியமா இருக்கு.

முதல் ஐடியாவோட பிரச்சனை – பழமையை சார்ந்திருக்கறது –அல்லது ‘சரியான விசுவாசம்’ சாத்தானுக்கே, எந்த மனிதனுக்கும் தெரியாத அளவுக்கு வசனம் தெரியும்.தேவனின் வசனம் கூருது – ஒரு தேவன் இருக்காருன்னு நம்புங்க. நல்லது! பேய்களும் இதை தான் நம்பறாங்க.

ஆண்மீக முதிர்ச்சிக்கு சிறந்த அளவுகோல் orthopraxy – சரியான பயிற்சி.

நமக்கு தெரிஞ்ச முதிர்ச்சியை அளவிடறதைவிட கீழ்படியறதுலயும் பகிர்ந்துக்கறதுலயும் தான் அதிக அக்கறையோட இருக்கணும்.

ரெண்டாவது ஐடியாவோட பிரச்சனை – முழுமையா பயிற்சி அடைஞ்சதுக்கு பிறகு தான் வழி நடத்தணும், ஏன்னா யாருமே முழுமையா பயிற்சி அடையறதில்லை.

ராஜ்ஜியத்துல முக்கியமானதை தெரிஞ்சுக்க வேண்டி இருந்தும் இயேசு இளம் தலைவர்களை அனுப்பி ஒரு உதாரணமா இயேசு இருந்தாரு.

தேவனின் வசனம் கூருது – இயேசு 12 சீஷர்களையும் அழைத்து பிசாசுகளுக்கும் நோய்களுக்கும் எதிரா முழுமையான வல்லமையை குடுத்தாரு. அப்புறம் தேவனின் ராஜ்ஜியத்தை பத்தியும் குணப்படுத்தவும் சொல்ல அவங்களை அனுப்பினாரு.

இயேசு ரட்சிப்பவர்னு பேதுரு சொல்றதுக்கு முன்னாடியே இவங்களை அனுப்பினாரு – இதை விசுவாசத்தின் முதல் படியா கருதறோம். அனுப்பினதுக்கு பிறகும் இயேசு பல முறை தவறுகளுக்காக பேதுருவை கண்டிச்சாரு, பேதுருவும் இயேசுவை முற்றிலும் மறுப்பான். தேவனின் வருங்கால ராஜ்ஜியத்துல யாரு எந்த பகுதியை செயல்படுத்துவாங்கனு மத்த சீஷர்கள் விவாதிப்பாங்க.

அவங்க நிறைய தெரிஞ்சுக்க வேண்டி இருந்துது ஆனா அவங்களுக்கு ஏற்கனவே தெரிஞ்சதை பகிர்ந்து செஞ்சாரு.

விசுவாசம் – அறிவை விட மேலானது – இயேசுவை பின்பற்ற ஆரம்பிச்சதும் விசுவாசிக்கலாம்.

விசுவாசம் – பயிற்சியைவிட மேலானது – நமக்கு கொடுக்கப்பட்டதை எந்த அளவுக்கு செய்யறோம்ங்கறதை பொருத்து இருக்கு.

மத்தவங்க சொன்னதை கேட்டு கீழ்படிஞ்சு பகிர்ந்துக்கும்போது அது தான் விசுவாசம்.

நாம கேட்டும் கீழ்படியவும் பகிர்ந்துக்கவும் தவிர்த்தா, அது அவிசுவாசம்.

நாம சீஷர்களை பன்மடன்காக்கும்போது, நாம சரியான விஷயங்களை அளவெடுக்கறோம்னு உறுதியா இருக்கலாம்.

விவாதி

10 நிமிடம்

நீங்கள் ஏற்கனவே அறிந்த கடவுளின் கட்டளைகளைப் பற்றி சிந்தியுங்கள். அந்த விஷயங்களுக்குக் கீழ்ப்படிந்து பகிர்வதில் நீங்கள் எவ்வளவு "உண்மையுள்ளவர்"?

படிக்கவும்

(75 நிமிடங்கள்)

3/3 குழு சந்திப்பு

ஜூம் பயிற்சிக்கு மீண்டும் வரவேற்கிறோம். இந்த அமர்வில், 3/3 (மூன்றுக்கு மூன்று அலல்து மூன்றில் மூன்று பங்கு) (குறிப்பு: “மூன்றில் மூன்று பங்கு” என்று உச்சரிக்கவும்) குழு என்பது ஒரு சந்திப்பு முறை, இது இயேசுவைப் பின்பற்றும் ஒவ்வொவருவரும் இயேசுவை இன்னும் அதிக நெருக்கமாகப் பின்பற்ற உதவுகிறது.

இயேசு - “இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்.” இது ஒரு வல்லமைமிக்க வாக்குத்தத்தம், மேலும் இயேசுவை பின்பற்றும் ஒவ்வொருவரும் இதை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே நீங்கள் குழுவாக ஒன்று சேரும்போது, உங்கள் நேரத்தை எவ்வாறு செலவிடுவீர்கள்?

3/3 (மூன்றுக்கு மூன்று அலல்து மூன்றில் மூன்று பங்கு) குழு என்பது தங்கள் நேரத்தை 3 பகுதிகளாகப் பிரிக்கும் ஒன்று, இதனால் அவர்கள் இயேசு கட்டளையிட்ட மிக முக்கியமான சில பிராமணங்களுக்கு கீழ்ப்படிந்து பயிற்சி எடுக்க முடியும்.

இது எவ்வாறு செயல்படுகிறது:

- **திரும்பிப் பார்த்தல்:** குழு நேரத்தின் மூன்றின் முதல் பகுதியில், அவர்கள் ஒன்றாக இணைந்ததிலிருந்து என்ன நடந்தது என்பதை திரும்பிப் பார்க்கிறார்கள்.
- **மேலும் தொடர்தல்:** குழு நேரத்தின் நடுப்பகுதியில் மூன்றில் ஒரு பகுதியானது, வேதம், கலந்துரையாடல் மற்றும் ஜெபத்தின் மூலம் தேவஞானத்தையும் அவரின் வழிநடத்தலையும் தேட

செலவிடப்படுகிறது.

- **முன்னோக்கிப் பார்த்தல்:** குழுநேரத்தின் இறுதி மூன்றில் ஒரு பகுதியில் நாம் ஒவ்வொருவரும் கற்றுக்கொண்டதைக் எவ்வாறு கடைப்பிடித்து கீழ்ப்படிய வேண்டும் என்பதை எதிர்பார்த்து செலவிடப்படுகிறது.

நிஜ வாழ்க்கையில் ஒரு முழு பதிப்பிற்கு உங்களை தயார்படுத்த உதவுவதற்கு இந்த கூட்டத்தில்(அமர்வில்) உங்கள் 3/3 (மூன்றுக்கு மூன்று அலல்து மூன்றில் மூன்று பங்கு) குழுவின் குறுகிய பதிப்பு மூலம் வழிநடத்தப்படும். ஆவிக்குரிய சுவாசம் குறித்த கூட்டத்தை (அமர்வை) நினைவில் வைத்து கொள்ள முடியுமா? மூச்சை உள் இழுத்து, ஆண்டவர் சொல்வதை கேளுங்கள். பின்பு மூச்சு விட்டு, நீங்கள் கேட்டதைக் கீழ்ப்படிதலோடு கடைப்பிடித்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். 3/3 க்கு குழு என்பது இதுதான். 3/3 (மூன்றுக்கு மூன்று அலல்து மூன்றில் மூன்று பங்கு) குழு என்பது தங்கள் நேரத்தை 3 பகுதிகளாகப் பிரிக்கும் ஒன்றாகும், இதனால் அவர்கள் ஆண்டவர் சொல்வதை கேட்பதற்கும், இயேசு கட்டளையிட்ட மிக முக்கியமான சில பிராமணங்களுக்கு கீழ்ப்படிந்து அவைகளை பகிர்ந்து கொள்வதற்கும் பயிற்சி பெறலாம்.

இந்த பயிற்சி கூட்டம் (அமர்வு) ஒரு மணி நேரத்திற்கு மேல் நீடிக்கும், மேலும் அது விரைவாக நகரும்(சீக்கிரத்தில் முடிந்து விடும்). உங்களிடம் ஒரு பெரிய குழு அல்லது ஆழமான கலந்துரையாடல்களை விரும்பும் ஒருவர் இருந்தால், உங்களை கண்காணிக்கவோ தொடர்ந்து நேரத்தை சரியாக செலவளிக்கிறதை கண்காணிக்க உதவவோ குழுவின் ஒரு உறுப்பினரிடம் கேட்கலாம்.

நிஜ வாழ்க்கையில், இந்த படி நிலைகள் மெதுவான வேகத்தில் நகரும், ஆனால் நீங்கள் பயிற்சி செய்யும் போது விட்டுவிடாமல் தொடர உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள், எனவே நீங்கள் நேரத்தை இழக்க மாட்டீர்கள் (எனவே நீங்கள் நேரம் கடந்து ஓட மாட்டீர்கள்). எந்த வழிமுறைகளையும் தவிர்க்க வேண்டாம் - அவைகள் அனைத்தும் முக்கியமானவைகள்!

3/3(மூன்றுக்கு மூன்று அலல்து மூன்றில் மூன்று பங்கு) குழு வேதாகம வகுப்பு போன்றதல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள் - அது ஒரு நோக்கம் கொண்டது! ஒரு புதிய வழியைக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பாக, இந்த அனுபவத்தை கருதுங்கள், நம் நல்ல தேவன் உங்கள் நேரத்தில் இணைந்து என்ன திட்டமிட்டுள்ளார் என்பதை சந்தியுங்கள், காணுங்கள். செல்வதற்கு தயாராக இருக்கிறீர்களா? தொடங்குவோம்!

திரும்பிப் பார்த்தல்

ஒருவருக்கொருவர் தாங்கி, நன்றி செலுத்துவதன் மூலமும், நம் போராட்டங்களைப் பகிர்ந்துகொள்வதன் மூலமும், நம் குழுவின் மற்ற உறுப்பினர்களுக்காக ஜெபிப்பதன் மூலமும் நம் நேரத்தின் முதல் மூன்றில் ஒரு பகுதியை நாம் திரும்பிப் பார்ப்போம். குழுவில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் அவர்கள் ஒன்றாக இணைந்த போது கடைசியாக அவர்கள் கற்றுக்கொண்டதைக் கீழ்ப்படிந்து கடைப்பிடிப்பதற்கும், பகிர்ந்து கொள்வதற்கும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கிறதா என்பதை சரிபார்ப்போம்.

படி நிலை ஒன்று - "நன்றி செலுத்துதல்."

ஒவ்வொரு நபரும் தாங்கள் நன்றி செலுத்தும் விஷயம ஒன்றைப் பகிர்ந்து கொள்ள சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். இந்த வீடியோவை (காணொளியை) இடைநிறுத்தி இப்போதே அதைச் செய்யுங்கள்... நீங்கள் இன்னும் அங்கே இருக்கிறீர்களா? (நீங்கள் இன்னும் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களா?) நிச்சயமாக, நீங்கள் இடைநிறுத்தப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம், மேலும் உங்கள் குழுவில் உள்ள ஒவ்வொரு நபரும் நீங்கள் தேவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக ஒன்றைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். நீங்கள் திரும்பி வரும்போது நாங்கள் இங்கே இருப்போம்.

படிநிலை இரண்டு - "உங்கள் போராட்டங்களைப் பகிர்வது" மற்றும் "ஒருவருக்கொருவர் ஜெபிப்பது."

இப்போது உங்கள் குழுவில் உள்ள ஒவ்வொரு நபரும், தங்கள் போராட்டங்களில் ஒன்றை சுருக்கமாக பகிர்ந்து கொள்ளுங்கள். அவர்கள் பகிர்ந்து கொண்டதை மற்றோருவர் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். இடைநிறுத்தத்தை அழுத்தவும், பின்னர் பகிர்ந்து கொண்டு ஜெபியுங்கள். (8

நிமிடம்)

படிநிலை மூன்று - "குழுவில் கவனம் செலுத்துதல்."

நீங்கள் சந்தித்துக் கொள்ளும் ஒவ்வொரு முறையும், நேரம் எடுத்து (ஒதுக்கி), ஏன் இணைந்து இருக்கிறீர்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் - ஆண்டவருக்கு அன்பு செலுத்த, மற்றவர்களை நேசிக்க, (ஆண்டவரை நேசிக்க, மற்றவர்களை அன்பு செலுத்த) இயேசுவை குறித்துப் பகிர்ந்து கொள்ள, மற்றவர்களும் அவரைப் பகிர்ந்து கொள்ள உதவ. ஊழியத்தில் குழுவை மையப்படுத்த (குழுவில் கவனம் செலுத்த) நிறைய வழிகள் இருக்கின்றன, ஆனால் இந்த பயிற்சி கூட்டத்துக்கு (அமர்வுக்கு), யாராவது மத்தேயு 22: 37-38 ஐ சத்தமாக வாசிக்க வேண்டும். இடைநிறுத்தத்தை அழுத்தி, பின்னர் படிக்கவும். (2 நிமிடம்)

படி நிலை நான்கு - "சரிபார்க்குதல்."

சில குழுக்கள் தவிர்க்க விரும்பும் பகுதி இது, ஏனென்றால் சில நேரங்களில் கடினமாக (கஷ்டமாக) இருக்கும் கேள்விகளைக் கேட்பது தான் இதன் பொருள். தயவுசெய்து தவிர்க்க வேண்டாம்.

இயேசு, தம்மைப் பின்பற்றுபவர்கள் கடினமான கேள்விகளைக் போதுமான அளவுக்கு கேட்டாலும் நேசித்தார். நாம் இயேசுவைப் போல இருக்க விரும்பினால், நாம் கூட அப்படியிருக்க ஒருவரையொருவர் போதுமான அளவு நேசிக்க வேண்டும்.

இந்த கட்டத்தில், ஒவ்வொரு நபரும் நீங்கள் கடைசியாக இணைந்தபோது ஆண்டவர் செய்ய சொன்னதற்கு, நீங்கள் கீழ்ப்படிந்து கடைப்பிடித்தார்களா என்பது குறித்து குழு அறிக்கையில் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு ஜூம் கூட்டத்திலும் (அமர்விலும்), இந்த கடமைகளை முன்னோக்கிப் பார்க்கும், படிநிலையை நாங்கள் வடிவமைத்துள்ளோம், அங்கு நீங்கள் கீழ்ப்படிவதற்கும், மற்றவர்களுக்கு பகிர்வதற்கும், மற்றும் ஜெபிப்பதற்கும் கேட்கிறோம். அதே கடமைகளை சரிபார்த்து கேட்க, திரும்பிப் பார்க்கும் படிநிலை மாதிரியில், பொறுப்புடைமையை நாங்கள் வடிவமைத்து இருக்கிறோம்.

இப்போது, இந்த பயிற்சியில், நீங்கள் இந்த படிநிலைகளில் இதுவரை அதிக நேரம் செலவிடவில்லை என்றால், ஆரம்பிப்பதற்கு இது ஒரு நல்ல நேரம்.

ஆண்டவரை நேசிப்பதன் ஒரு பகுதி, அவர் நமக்கு கட்டளையிட்டதை கீழ்ப்படிந்து கடைப்பிடிப்பது. ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதன் ஒரு பகுதி, ஒருவர் தேவனிடமிருந்து கேட்டதை அவர்கள் கீழ்ப்படிந்து கடைப்பிடிக்க உதவி செய்வது. அன்பு என்பது ஒருவரின் கடமைகளை அக்கறையுடன் எடுத்து செய்வது - மற்றும் அவர்களுக்கு அன்பை கருணையுடன் மனதார காட்டுவது - அனைத்தும் ஒரே நேரத்தில்.

இடைநிறுத்தத்தை அழுத்தி ஒவ்வொரு நபரும் பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும்:

- இதுவரை நீங்கள் கற்றுக்கொண்டதை எவ்வாறு கீழ்ப்படிந்து கடைப்பிடித்தீர்கள்?
- நீங்கள் கற்றுக்கொண்டவற்றில் யாருக்கு பயிற்சி அளித்தீர்கள்?
- ஒரு குழுவாக ஒன்றாக இணைந்ததிலிருந்து யார் தங்களின் சாட்சியை அல்லது ஆண்டவரின் சத்தியத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டது?

எங்கள் 3/3(மூன்றுக்கு மூன்று அலல்து மூன்றில் மூன்று பங்கு) குழு திரும்பிப் பார்க்கும் பகுதியை முடிக்கும்போது, உங்கள் கூட்டங்கள் (அமர்வுகள்) இன்னும் சிறப்பாகச் செல்ல உதவும் ஒன்று இங்கே:

ஜூம் பயிற்சி உதவிக்குறிப்பு

சில நேரங்களில் ஒரு குழுவில், ஒருவர், இறுதியாக அதிக நேரம் பேசி முடிப்பவராக இருக்கலாம். இப்படி நடக்க விட வேண்டாம். குழுவில் உள்ள அனைவருக்கும் மதிப்பு உண்டு, எனவே அனைவரும் பகிர, மற்றவர்களுக்கும் வாய்ப்பு கிடைக்க, உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். மற்றவர்களுக்கு பேச வாய்ப்பு கிடைக்கவில்லை என்றாலும், யார் அதிகம் பேசுகிறார்களோ அவர்களுக்கு ஒவ்வொரு நபரும் காது கொடுத்து கேட்க கனிவாக நினைவுபடுத்துங்கள்.

மேலும் தொடர்தல்

எங்கள் நேரத்தின் மூன்றின் நடுப்பகுதியில் இணையும் போது, தேவனின் வார்த்தையை நன்கு புரிந்துகொள்ள, எங்கள் குழுவை வழிநடத்த தேவனின் பரிசுத்த ஆவியானவரை (தேவ ஆவியானவரை) அழைக்கிறோம். தேவனின் நோக்கங்களையும், திட்டங்களையும், ஆராய்ந்து புரிந்து கொண்டு உதவ, ஒரு குழு, வேதத்திலிருந்து ஒரு பகுதியை சத்தமாக வாசிப்போம், பின்னர் குழுவாக இணைந்து சில எளிய கேள்விகளைக் கேட்க அதற்கு பதிலளிப்போம்.

படி நிலை ஒன்று - வழிநடத்த தேவ ஆவியானவரை அழைத்தல்.

கொஞ்சம் நேரம் ஜெபம் செய்யுங்கள். தேவனுடன் எளிமையாகவும் சுருக்கமாகவும் பேசுங்கள். நீங்கள் படிக்கவிருக்கும் வசனத்தை தெளிவாக புரிந்து கொள்ள தேவ ஆவியானவரை கேளுங்கள். இடைநிறுத்தத்தை அழுத்தி ஜெபம் செய்யுங்கள். (2 நிமிடம்)

படி நிலை இரண்டு - தேவவார்த்தையைப் படித்து கேள்விகளைக் கேளுங்கள்.

குழுவில் இருந்து ஒருவர் வேதத்தை படிக்க வேண்டும். இந்த செயல்முறை அமர்வுக்கு, லூக்கா 18: 9-14 ஐப் படியுங்கள். நீங்கள் படித்து முடித்ததும், குழு இந்த இரண்டு கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டும்:

- இந்த வசனத்தில் உங்களுக்கு பிடித்தது எது?
- நீங்கள் இதில் எதை சவாலாக பார்க்கிறீர்கள் அல்லது புரிந்து கொள்ள எது கடினமாக (கஷ்டமாக) இருந்தது?

வாய்வழி கற்பவர்கள் இருந்தால் - நன்றாகப் படிக்காதவர்கள் அல்லது கேட்பதன் மூலம் கற்றுக்கொள்ள விரும்பும் நபர்கள் - உங்கள் குழுவில், வசனத்தை குறைந்தபட்சம் இரண்டு முறையாவது படிக்க வேண்டும் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

இடைநிறுத்தத்தை அழுத்தவும், பின்னர் கேள்விகளைப் படித்து பதிலளிக்கவும். (10 நிமிடம்)

இப்போது வேறு யாராவது அதே வசனத்தை இரண்டாவது முறையாகப் படித்து, பின்னர் இந்த இரண்டு கேள்விகளுக்கும் குழு பதிலளிக்க வேண்டும்:

- இந்த வசனத்தில் ஜனங்களை குறித்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?
- இந்த வசனத்தில் தேவனை குறித்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?

வசனத்தில் சார்ந்து, அதை எளிமையாக கடைப்பிடிக்க நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! (10 நிமிடம்)

இது எங்கள் 3/3 குழுவின் எதிர்நோக்கும் பிரிவின் இறுதி பகுதி, மேலும் உங்கள் கூட்டங்கள் (அமர்வுகள்) இன்னும் சிறப்பாகச் செல்ல உதவும் ஒன்று இங்கே:

ஜூம் பயிற்சி உதவிக்குறிப்பு

நீங்கள் தேவ வார்த்தையைப் படிக்கும்போது, பிற புத்தகங்கள், ஆசிரியர்கள் அல்லது கருத்துகளுக்குப் பதிலாக அவருடைய வார்த்தைகளில் கவனம் செலுத்துங்கள். “இதற்கு என்ன அர்த்தம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?” என்று கேட்பதற்குப் பதிலாக, “இந்த வசனம் என்ன சொல்கிறது?” என்று கேளுங்கள். உங்கள் குழுவில் உள்ள ஒருவர் கற்றுக் கொடுக்க விரும்பினால், தேவஆவியையும், பரிபூரணமான வார்த்தையையும் குழுவுக்கு கற்றுத் தரவேண்டும் என்பதை கனிவாக அவர்களுக்கு நினைப்பூட்டுங்கள். இங்கே அனைவரும் ஒன்றாகக் கற்றுக்கொள்ள இருக்கிறோம். விவாதத்தில் அமைதியாக இருக்க அல்லது இடைநிறுத்தம் குறித்து பயப்பட வேண்டாம். அமைதியாக இருக்கும்போது கூட தேவன் கிரியை செய்வார். அவருடைய வார்த்தையில் நிலையாக கவனம் செலுத்துங்கள், வசனத்தில் சார்ந்துக் கொள்ளுங்கள், மீதமுள்ளவற்றைச் செய்து முடிக்க தேவனை நம்புங்கள்.

முன்னோக்கிப் பார்த்தல் (எதிர்நோக்கி இருத்தல்)

நேரத்தின் கடைசி மூன்றில், தேவ வார்த்தையை கற்றுக்கொண்டதின் மூலம் நாம் எவ்வாறு கீழ்ப்படிந்து மற்றவர்களுக்கு பயிற்சி அளிக்க முடியும் என்பதைக் கண்டுகொள்ள எதிர்நோக்குவதில் கவனம் செலுத்துவோம். குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் ஆண்டவரிடம் ஒரு சில எளிய

கேள்விகளைக் கேட்டு, பின்னர் அவருடைய பதிலுக்காக ஜெபத்தில் காத்திருக்க வேண்டும். பின்னர் எங்கள் கடமைகளைப் பகிர்ந்து கொள்ள பயிற்சி கொடுப்போம், கடைசி நேரத்தில் ஒன்றாக இணைந்து ஜெபிப்போம்.

படி நிலை 1 - தேவனின் மகிமைக்கென்ற ஒத்த நோக்கத்திற்காக ஜெபித்தல்

குழுவில் உள்ள ஒவ்வொரு நபரும் அமைதியாக (மௌனமாக) ஜெபித்து தேவனிடம் இந்த கேள்விகளைக் கேளுங்கள்:

- ஆண்டவரே, நீர் எனக்கு போதித்ததை நான் எப்படி கடைப்பிடித்து, கீழ்ப்படிய வேண்டும்?
- உமக்கு கீழ்ப்படிந்து உம்மை அதிகமாக நேசிப்பதை அறிந்துக் கொள்ள இந்த வசனத்தில் இருந்து நான் யாரைப் பயிற்றுவிக்க முடியும்?
- என் சாட்சியை அல்லது இயேசுவின் நற்செய்தியை யாருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்?

இடைநிறுத்தத்தை அழுத்தி பின்னர் ஜெபம் செய்யுங்கள். (5 நிமிடம்)

இப்போதிலிருந்து மீண்டும் நீங்கள் சந்திக்கும் நேரம் வரை உங்கள் குழுவில் உங்களுக்கு தேவையான குறிப்பிட்ட பதில்கள், குறிப்பிட்ட பெயர்கள் மற்றும் குறிப்பிட்ட நிலை படிகளை சரியான நேரத்தில் கொடுக்க தேவஆவியானவரிடம் கேளுங்கள்.

நிலைபடி 2 - கூட்டத்தின் கடமைகள்

உங்கள் குழுவில் உள்ள ஒவ்வொரு நபரிடம், ஒவ்வொரு கேள்விக்கும் தேவனிடமிருந்து அவர்கள் கேட்டு பெற்றுக் கொண்டதை பகிர்ந்து கொள்ளச் சொல்லுங்கள். ஒன்று, இரண்டு, அல்லது மூன்று கேள்விகளிலும் ஒருவர் தேவனிடமிருந்து எதையும் கேட்டிருக்க மாட்டார்கள். அவர்கள் கேட்காமலே சாதாரணமாக அறிக்கை கொடுப்பார்கள்.

ஆனால் நினைவில் கொள்ளுங்கள், குழு தேவனிடமிருந்து கேட்க வேண்டும். இயேசு சொன்னார் - “என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது.”என்று. மேலும், உங்கள் கீழ்ப்படிதலின் நிலைபடிகள் எவ்வளவு குறிப்பிடும்படியாக இருக்கின்றனவோ, நாங்கள் மீண்டும் சந்திக்கும் வரை அவற்றிற்குக் கீழ்ப்படிந்து இருப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

இடைநிறுத்தத்தை அழுத்தவும், பின்னர் நீங்கள் கேட்டதைப் பகிரவும். (10 நிமிடம்)

படி நிலை 3 - உங்கள் திட்டத்தை பயிற்சி செய்தல்

நீங்கள் ஒன்றாகஇணைந்து உங்கள் நேரத்தை முடிப்பதற்கு முன், உங்கள் 3/3 குழு இரண்டு அல்லது மூன்று சிறிய குழுக்களாக பிரிந்து, தேவன் உங்களிடம் செய்ய சொன்னதை புரிந்து பயிற்சி செய்யுங்கள்.

நினைவில் கொள்ளுங்கள் - பயிற்சி என்பது கீழ்ப்படிதல், செயல்முறை அல்லது பகிர்வு அல்ல, ஆனால் அந்த விஷயங்களை சிறப்பாகச் செய்ய இது உங்களைத் தயார்படுத்தும். ஒவ்வொரு சிறு குழுவும் அதன் பயிற்சி நேரத்தை ஒன்றாக இணைந்து ஜெபத்தில் முடிக்க வேண்டும். அந்த மக்களுக்காகவும், தேவன் உங்கள் இருதயங்களில் தந்துள்ள திட்டங்களுக்காகவும் குறிப்பாக ஜெபியுங்கள்.

குழுவில் வாய்வழி கற்பவர்கள் உங்களிடம் இருந்தால், நீங்கள் முன்பு படித்த தேவனின் வார்த்தையை மீண்டும் படிக்க உங்கள் பயிற்சி நேரத்தில் ஒரு பகுதியை ஒதுக்குங்கள். கூட்டங்களுக்கு இடையில் அவர்கள் சந்திக்கும் மற்றவர்களுடன் இதை பகிர்ந்து கொள்ள முழு குழுவும் தயாராக இதற்கு உதவ வேண்டும்.

இடைநிறுத்தத்தை அழுத்தவும், பின்னர் பயிற்சி எடுத்து ஜெபம் செய்ய குழுக்களாக பிரியவும். குறிப்பிட்ட கடமைகள் செய்யாத ஒருவர் தங்கள் சாட்சியையோ அல்லது தேவனின் சத்தியத்தையோ பகிர்ந்து கொள்ள பயிற்சி எடுக்க வேண்டும். (10 நிமிடம்)

எங்கள் நேரத்தை ஒன்றாக நிறைவு செய்தல்

உங்கள் குழுவை மீண்டும் ஒன்றிணைக்கும்போது, சிறிது கொண்டாட நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்! நீங்கள் (எதிர்நோக்கி) முன்னோக்கிப் பார்க்கும் பகுதியை முடித்துவிட்டீர்கள், இப்போது முழு 3/3 (3 க்கு 3) குழுவடிவமைப்பை செயல் படுத்த வேண்டும்.

பிற்கால கூட்டங்களில் (அமர்வுகளில்) இந்த காணொளி வழிகாட்டி இல்லாமல் உங்கள் குழு தொடர்ந்து பயிற்சி கொடுக்கும். இந்த செயல்முறை மூலம் குழுவிற்கு வழிகாட்ட மற்றவர்களை விட்டு விடாமல் திருப்பங்களை எடுக்க மறக்காதீர்கள். நீங்கள் ஒரு சிறந்த ஆசிரியராக இருக்க வேண்டியதில்லை, இந்த எளிய வழிமுறைகளைப் பின்பற்றுங்கள். நீங்கள் செல்வதற்கு முன், உங்கள் கூட்டங்கள் (அமர்வுகள்) இன்னும் சிறப்பாகச் செல்ல உதவும் மற்றொரு பரிந்துரை இங்கே:

ஜூம் பயிற்சி உதவிக்குறிப்பு

உலகெங்கிலும், 3/3 (மூன்றுக்கு மூன்று அலல்து மூன்றில் மூன்று பங்கு)ன் குழுக்கள் அடிக்கடி தேவனின் பந்தி அல்லது பராமரிப்பு மற்றும் சாதாரண உரையாடல்களை தங்கள் நேரத்தின் ஒரு பகுதியாக பகிர்ந்து கொள்ள வேண்டும். தேவன் நமக்கு இந்த வகையான ஐக்கியததை கொடுத்திருக்கிறார் - உள்நோக்கத்துடன் கற்று, வளர்ச்சி மற்றும் உள்நோக்கத்துடன் வாழ்ந்து உறவை பலப்படுத்தவும், ஊக்குவிக்கவும், அவருடைய குமாரனாகிய இயேசுவைப் போல நாம் வளரவும் உதவுகின்றன.

அவ்வளவுதான் - உங்கள் குழு இப்போது மூன்று பகுதிகளையும் பயிற்சி செய்து இருக்கிறது - கடைசியாக நாங்கள் சந்தித்ததிலிருந்து எதைச் சாதித்தோம் என்பதைச் சரிபார்க்க திரும்பிப் பார்க்கிறோம், இந்த நேரத்தில் நாம் இணைந்து ஒன்றாக கற்றுக்கொள்ள தேவன் நமக்கு என்ன செய்து இருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டு, தொடர்ந்து நாம் பிரிந்து இருக்கும்போது தேவன் நம் இருதயங்களில் கிரியை நடப்பித்து முன்னோக்கி செயல்பட எதிர்பார்ப்போடு செல்லுவோம்.

3/3 (மூன்றுக்கு மூன்று அலல்து மூன்றில் மூன்று பங்கு) குழுக்கள் - சந்திப்பதற்கான ஒரு சாதாரண நடைமுறை வழி, அது இயேசுவைப் போல ஆக நமக்கு உதவுகிறது.

விவாதி

10 நிமிடம்

- 3/3 குழு மற்றும் வேத பாடம் அல்லது நீங்கள் முன்பு இருந்த சிறு குழுவுக்கு இடையில் ஏதேனும் வேறுபாடுகள் இருப்பதை நீங்கள் கவனித்தீர்களா? அப்படியானால், அந்த வேறுபாடுகள் குழுவை எவ்வாறு பாதிக்கும்?
- 3/3 குழுவை எளிய தேவாலயமாக கருத முடியுமா? ஏன் அல்லது ஏன் இல்லை?

சரிபார்த்தல்

(1 நிமிடம்)

இந்த அமர்வில் கேட்ட கருத்துக்கள்:

- விசுவாசம் அறிவை விட சிறந்தது

இந்த அமர்வில் கேட்ட முறைமைகள்:

- 3/3 குழு சந்திப்பு

அடுத்த அடி

கீழ்படி

3/3 குழு பயிற்சி நேரத்தில் நீங்கள் எடுத்த முடிவுகளுக்கு கீழ்படியவும், பயிற்சி செய்யவும் இந்த வாரம் நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

பகிர்ந்து கொள்

உங்கள் குழு மீண்டும் சந்திப்பதற்கு முன் யாருடன் 3/3 குழுவைப் பற்றி பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று கடவுளிடம் கேளுங்கள். அந்த நபரின் பெயரை உங்கள் குழுவுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

அமர்வு 7

சரிபார்

(1 நிமிடம்)

பங்கேற்ற அனைவரும் சரிபார்த்து விட்டார்களா.

ஜூம் பயிற்சி/சரிபார்த்தல் மற்றும் குறியீட்டைப் பயன்படுத்துதல்: **4322**

ஜெபி

(5 நிமிடம்)

இயேசுவை உண்மையாக பின்பற்றுவதற்கு, குழுவின் அர்ப்பணிப்புக்காக கடவுளிடம் ஜெபிக்கவும், நன்றி சொல்லவும். உங்கள் நேரத்தை ஒன்றாக வழிநடத்த பரிசுத்த ஆவியானவரை அழைக்கவும்.

திரும்பிப் பார்

(5 நிமிடம்)

ஆரம்பிப்பதற்கு முன்பு சரிபார்ப்பதற்கு சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

கடந்த பகுதியின் முடிவில் நீங்கள் கற்றுக் கொண்டதை நடைமுறைப்படுத்த உங்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு வழிகளில் சவால் விடுக்கப்பட்டது.

இந்த வாரம் உங்கள் குழு எப்படி செயல் பட்டது என்பதைப் பார்க்க சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

மேலோட்டம்

(1 நிமிடம்)

இந்த அமர்வில் இந்தக் கருத்தைக் குறித்து கேட்போம் மற்றும் விவாதிப்போம்:

- பயிற்சி சுழற்சி

இந்த முறையை நமது பட்டியலில் சேர்த்துக் கொள்வோம்:

- 3/3 குழு சந்திப்பு

படிக்கவும்

(5 நிமிடம்)

பயிற்சி சுழற்சி

இந்த செஷன்ல, சீஷர்கள் ஒரு இடத்துல இருந்து பல இடங்களுக்கு போய் அது ஒரு ஊழியமா பிறகு இயக்கமா மாற்ற உதவியா இருக்க நாம the training cycle கத்துக்கலாம்.

சைக்கிள் ஓட்ட எப்பவாவது கத்துகிட்டீங்களா. மத்தவங்க கத்துக்க எப்பவாவது உதவி செஞ்சீங்களா. அப்படீன்னா, the training cycle உங்களுக்கு தெரிய வாய்ப்புகள் இருக்கு.

இது அந்த அளவுக்கு சுலபம் மாடல் பண்ணனும், உதவணும், கவனிக்கணும், போகணும். மறுபடியும் யோசிங்க – சைக்கிள் ஓட்டறதுக்கு முன்னால, முதல்ல யாராவது ஒட்டி பாத்திருப்பீங்க.

அது தான் modelling

மாடல் பண்ணனும், உதவணும், கவனிக்கணும், போகணும்.

இது எப்படி செய்யப்பட்டிருக்குனு உதாரணமா வெளிப்படுத்தறது தான் modelling. யாராவது பைக் ஓட்டும்போது ஒரு குழந்தை பாத்தா, அப்பவே அதுக்கு ஐடியா கிடைக்கும். அப்படி தான் மாடலிங் – எப்பவும் செய்ய வேண்டியதில்லை, பொதுவாஒருதடவை செஞ்சா போதும்.

அந்த முதல் பைக் ஓட்டினதை யோசிச்சி பாருங்க. நீங்க கவனிக்க மட்டும் விரும்பறீங்களா? இல்லை உற்சாகத்தோட முயற்சி செய்ய நினைச்சீங்களா? யாரும் உங்களுக்கு வாய்ப்பு குடுத்திருக்கலேன்னா?

அதிகமான மாடலிங் பயிற்சி முறைய பாதிக்கலாம். கொஞ்சமா யாருக்காவது வெளிப்படுத்தறது தான் மாடலிங் – அப்புறம் முயற்சி செய்ய சொல்லணும். அப்ப அந்த முதல் ஓட்டத்துல என்னாச்சு? அவங்க சைக்கிளை குடுத்துட்டு போயிட்டாங்களா?

போயிருக்கமாட்டாங்க. பைக் ஓட்டறது எப்படின்னு நிறைய பேர் தெரிஞ்சு இருக்கும்போது, முதல் சில பெடல்களுக்கு யாராவது இருப்பாங்க. பக்கத்துல நடந்து உங்களை வழி நடத்துவாங்க.

அது தான் உதவி

மாடல் பண்ணனும், **உதவணும்**, கவனிக்கணும், போகணும்.

உதவறதுன்னா ஒரு கலையை கத்துக்க பயிற்சி குடுக்கறது ஆனா பலமா அடிபடாம பாத்துக்கறது. மாடளிங்கைவிட உதவி செய்யறதுக்கு அதிக நேரம் ஆகும். ஆனா ரொம்ப அதிகம் இல்லை. தேவைப்பட்டா கை கோக்கறது, வழி காட்டறது பயிற்சி குடுக்கறது, ஆனா அடிப்படைகளை கடக்கறது. யாரையும் பர்பெக்ட் ஆக்கறது இல்லை. அவங்களைபெடல் அடிக்க விடறது.

நீங்க பெடலை வேகமா அடிச்சு வேகமா போகும்போது உங்க கூடவே ஓடி வரதை கற்பனை பண்ணி இருக்கீங்களா? அது ரொம்ப தாக்குபிடிக்காது, உங்களாலயும் சரியா ஓட்ட கத்துக்க முடியாது.

உதவறதுன்னா மத்தவங்க செயல்பட அவங்களேகொஞ்சம் ஓட்ட அனுமதிக்கறது. அவங்க நகர ஆரம்பிச்சதும், அடுத்து கத்துக்கறவங்களுக்கு வழிலஅவங்க மாடலிங்கா இருக்காங்க. யார் கையும் பைக்ல இல்லைனாலும், நீங்க தனியா இருக்கீங்கனு அர்த்தம் இல்லை. பொதுவா ஒருத்தர் பார்வை இருக்கு – ஆனா கொஞ்சம் தொலைவுல இருந்து.

அது தான் பார்வை இடுதல்.

மாடல் பண்ணனும், உதவணும், **கவனிக்கணும்**, போகணும்.

கத்துக்கரவங்களை அவங்க கலையை தெரிஞ்சுக்கறவரறக்கு கவனிக்கறது, அதுவும் எந்த அடியும் எடுத்து வெக்காம கவனிக்கறது. பைக் ஓட்டும்போது, யாராவது எழுந்து வேகமா போகலாம்,, ஆனா ரோடோட எல்லா சட்டமும் தெரியும்னு அர்த்தம் இல்லை. கவனிக்கறதுன்னா அவங்க பாதுகாப்பா இருக்கப்போறாங்கனு உறுதிபடுத்திக்கறது - பக்கத்துல யாரும் இல்லைனாலும். என்ன செய்யணும்னு மத்தவங்க தெரிஞ்சுக்கறது கவனிப்பு இல்லை, ஆனா அவங்க செய்வாங்க – யாரும் பாக்கலைன்னாலும்.

இந்த training cycle பகுதில, கத்துக்கறவரு வளர்ந்து எப்படி வளர்றதுன்னு மத்தவங்களுக்கு சொல்லிக்குடுப்பாங்க...அப்படீன்னா மத்தவங்க எப்படி வளர்றதுன்னு சொல்லிக்குடுக்கறாங்க...அப்ப அவங்க மத்தவங்க வளர கத்துகுடுப்பாங்க. சீஷர்கள் அவங்க சீஷர்களை உருவாக்குவாங்க அவங்க சீஷர்களை உருவாக்குவாங்க. இப்படி மூணாவது நாலாவது தலைமுறையா உருவாக்குவாங்க.

கவனிக்கறதுன்னா கத்துக்கறவரு சரியா கத்துக்கறாரா மத்தவங்களுக்கும் உதவ விரும்பராரா. கவனிக்க கொஞ்ச நேரம் ஆகும். மாடலின் உதவி செய்யறதை இணைக்கும்போது பத்து மடங்கு அதிகம். அதிகமாகலாம். ஆனா காத்திருக்கறது பலனை தரும். இருதியில – பைக்கை ஓட்டறவரு ஓட்டுவாரு.

இதை தான் போகறதுன்னா என்னனு சொல்றோம்.

மாடல் பண்ணனும், உதவணும், கவனிக்கணும், **போகணும்**.

போகறதுன்னா பட்டதாரி ஆகறது. ஒரு மாணவன் ஆசிரியர் ஆகறான். ஒரு ஊழியன் இன்னொரு ஊழியனாகறான். ஒரு சீஷன் நண்பன் ஆகறான். பைக் ஓட்டும்போது, நீங்க ஒவ்வொரு தடவை ஓட்டும்போதும் உங்க கூட வர மாட்டாரு. சில நேரங்கள்ல நீங்க தனியா ஓட்டுவீங்க, மத்தவங்க இருக்கலாம், இல்லை தனியா.

போகறதுன்னா நீங்க நேசிக்கறவங்களுக்கு கடைசியா ஒரு பரிசு குடுக்கறீங்க – சுதந்திர பரிசு. நீங்க ஏற்கனவே போன இடத்துக்கு ஒருத்தரை தயார் படுத்தறது தான் போகறதுன்னு அர்த்தம் அதே நேரத்துல இதுவரைக்கும் நீங்க போகாத இடத்துக்கு போக உற்சாகப்படுத்தறீங்க.

மாடல் பண்ணனும், உதவணும், கவனிக்கணும், போகணும். தி training cycle

ஒருத்தர் பல பேருக்கு. ஒரு ஊழியத்துல இருந்து இயக்கம் வரைக்கும்.

விவாதி

10 நிமிடம்

- எப்போதாவது பயிற்சி சுழற்சியின் ஒரு பகுதியாக இருந்திருக்கிறீர்களா?
- யாருக்கு பயிற்சி அளித்தீர்கள்? அல்லது யார் உங்களுக்கு பயிற்சி அளித்தார்கள்?
- பயிற்சி சுழற்சியின் கடினமான பகுதிகளை கற்றுக் கொண்ட போது அந்த நபர் உங்களுடன் இருந்தாரா?
- அப்படி யாருக்காவது பயிற்சி கொடுப்பது எப்படி இருக்கும்?

செயல்பாடு

(60 - 90) நிமிடங்கள்

3/3 குழு சந்திப்பு

- திரும்பிப் பார்க்க – கடந்த பகுதியின் கீழ்படிவதில், பயிற்றுவிப்பதில், பகிர்வதில் உள்ள சவால்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். (30 நிமிடங்கள்)
- மேல் நோக்கி பார் – மாற்கு 5:1-20 ஐ நீங்கள் குழுவாக வாசிப்பதற்கு பயன்படுத்தி, மேல் நோக்கி பார் பகுதியிலுள்ள கேள்விகள் 1-4 க்கு பதில் அளிக்கவும். (30 நிமிடங்கள்)
- முன்னோக்கி பார் - முன்னோக்கி பார் பகுதியிலுள்ள கேள்விகள் 5, 6, 7 ஐ பயன்படுத்தி எப்படி கீழ்படிவது, பயிற்றுவிப்பது மற்றும் பகிர்ந்து கொள்வது என்பதை கண்டறியுங்கள். (30 நிமிடங்கள்)

திரும்பிப் பார்க்கிறேன்

படி 1 - நன்றி கூறுதல்

ஒவ்வொரு நபரும் தங்களுக்கு கிடைத்த நண்மைகளில் ஒன்றைப் பகிர்ந்து கொள்ள சிறிது நேரம் ஒதுக்குங்கள்.

படி 2 - உங்கள் போராட்டங்களைப் பகிர்ந்து கொள்வது மற்றும் ஒருவருக்காக ஒருவர் பிரார்த்தனை செய்தல்

உங்கள் குழுவில் உள்ள ஒவ்வொருவரும் தாங்கள் போராடிக் கொண்டிருக்கும் ஒன்றைப் பற்றி சுருக்கமாகப் பகிர்ந்து கொள்ளுங்கள். அவர்கள் பகிர்ந்து கொள்வதைப் பற்றி அவர்களுக்காக வேறு யாராவது ஒருவர் பிரார்த்தனை செய்யுங்கள்.

படி 3 - குழுவில் கவனம் செலுத்துதல்

நேரத்தை ஒதுக்கி, நீங்கள் ஏன் ஒன்றாக இருக்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள் - கடவுளை நேசிப்பது, மற்றவர்களை நேசிப்பது, இயேசுவைப் பகிர்ந்துகொள்வது மற்றும் மற்றவர்களும் அவரைப் பற்றி பகிர்ந்து கொள்ள உதவுங்கள்.

படி 4 - சரிபார்த்தல்

ஒவ்வொரு நபரும் பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும்:

- இதுவரை நீங்கள் கற்றுக்கொண்டதை எவ்வாறு கடைப்பிடித்தீர்கள்?
- நீங்கள் கற்றுக்கொண்டவற்றில் நீங்கள் யாரைப் பயிற்றுவித்தீர்கள்?
- ஒரு குழுவாக ஒன்றாக இருந்து உங்கள் கதை அல்லது கடவுளின் கதையை யாருடன் பகிர்ந்துள்ளீர்கள்?)

மேலே பார்க்கவும்

படி 1 - கடவுளின் பரிசுத்த ஆவியை வழிநடத்த அழைக்கவும்

பிரார்த்தனை செய்ய சிறிது நேரம் ஒதுக்குங்கள். கடவுளுடன் எளிமையாகவும், சுருக்கமாகவும் பேசுங்கள். நீங்கள் படிக்கவிருக்கும் பகுதியிலிருந்து உங்களுக்குக் கற்பிக்க பரிசுத்த ஆவியிடம் கேளுங்கள்.

படி 2 - கடவுளின் வார்த்தையைப் படித்து கேள்விகளைக் கேளுங்கள்

குழுவில் உள்ள ஒருவரை வேதத்திலிருந்து ஒரு பகுதியை படிக்கச் செய்யுங்கள். நீங்கள் படித்து முடித்தவுடன், குழு இந்த இரண்டு கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும்:

- இந்தப் பத்தியில் உங்களுக்கு பிடித்தது என்ன?
- உங்களுக்கு சவாலாக அல்லது புரிந்து கொள்ள கடினமாக இருப்பது எது?

அதே பகுதியை இரண்டாவது முறை படிக்கவும், பின்னர் குழு இந்த இரண்டு கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

- இந்த பகுதியிலிருந்து மக்களைப் பற்றி நாம் என்ன கற்றுக் கொள்ளலாம்?
- இந்த வசனத்திலிருந்து கடவுளைப் பற்றி நாம் என்ன கற்றுக் கொள்ளலாம்?

இந்த பகுதியை மட்டும் தியானியுங்கள். அதை எளிமையாக செய்யவும்!

முன்னோக்கி பார்க்கவும்

படி 1 - கடவுளின் நோக்கத்திற்காக பிரார்த்தனை

உங்கள் குழுவில் உள்ள ஒவ்வொருவரும் அமைதியாக ஜெபித்து, கடவுளிடம் இந்தக் கேள்விகளைக் கேளுங்கள்:

- கடவுளே, நீங்கள் எனக்குக் கற்பிப்பதை நான் எப்படிக் கடைப்பிடித்து நடைமுறைப்படுத்துவது?
- இந்தப் பத்தியிலிருந்து நான் யாரைப் பயிற்றுவிக்க முடியும், அதனால் அவர்கள் உங்களுக்குக் கீழ்ப்படியவும் நேசிக்கவும் கற்றுக்கொள்ள முடியுமா?
- என்னுடைய சாட்சியையோ அல்லது இயேசுவைப் பற்றிய உங்கள் நற்செய்தியையோ யாருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்?

இப்போது மற்றும் உங்கள் குழு மீண்டும் சந்திக்கும் நேரத்தில் நீங்கள் எடுக்கக்கூடிய குறிப்பிட்ட பதில்கள், குறிப்பிட்ட பெயர்கள் மற்றும் குறிப்பிட்ட படிகளை உங்களுக்கு கொடுக்க பரிசுத்த ஆவியிடம் கேளுங்கள்.

படி 2 - உறுதிமொழிகளை சேகரித்தல்

உங்கள் குழுவில் உள்ள ஒவ்வொரு நபரிடமும் ஒவ்வொரு கேள்விக்கும் தேவன் கொடுத்த பதிலைப் பகிர்ந்து கொள்ளச் சொல்லுங்கள். ஒருவர் ஒன்று, இரண்டு அல்லது மூன்று கேள்விகளுக்கும் கூட தேவனிடமிருந்து எதையும் பதிலாக கேட்டிருக்க மாட்டார்கள். அவர்கள் கேட்கவில்லை என்று வெறுமனே தெரிவிக்கலாம்.

ஆனால் நினைவில் கொள்ளுங்கள், உங்கள் குழு தேவனிடமிருந்து கேட்க வேண்டும். “என் ஆடுகள் என் சத்தத்தை கேட்கின்றன” என்று இயேசு சொன்னார். மேலும் உங்கள் கீழ்ப்படிதல் படிகள் எவ்வளவு குறிப்பிட்டதாக இருக்கிறதோ, அவ்வளவாய் நீங்கள் மீண்டும் சந்திப்பதற்கு முன்பு அவைகளுக்குக் கீழ்ப்படிவது எளிதாக இருக்கும்.

படி 3 - உங்கள் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

நீங்கள் ஒன்றாக நேரத்தை முடிப்பதற்கு முன், உங்கள் 3/3 குழுவை இரண்டு அல்லது மூன்று சிறிய குழுக்களாக உடைத்து, தேவன் உங்களிடம் செய்யச் சொல்லி கேட்கும் காரியங்களைப் பயிற்சி செய்யுங்கள்.

விவாதி

10 நிமிடம்

- 3/3 குழுவில் உங்களுக்கு பிடித்தது எது? ஏன்?
- அதிக சவாலாய் இருந்தது எது? ஏன்?

சரிபார்த்தல்

(1 நிமிடம்)

இந்த அமர்வில் கேட்ட கருத்துக்கள்:

- பயிற்சி சுழற்சி

இந்த அமர்வில் கேட்ட முறைகள்:

- 3/3 குழு சந்திப்பு

அடுத்த அடி

கீழ்படி

ஜூம் பயிற்சியில் நீங்கள் கற்றுக் கொண்ட ஏதாவது ஒரு திறமை அல்லது கருத்தை எடுத்துக் கொண்டு அதை நான்காவது தலைமுறைக்கு கொண்டு செல்ல ஒருவருக்கு பயிற்சி அளியுங்கள்.

பகிர்ந்து கொள்

நீங்கள் கற்றுக் கொடுத்தவரிடம், அதை ஐந்தாவது தலைமுறைக்கு எடுத்து செல்ல சவால் விடுங்கள்.

அமர்வு 8

சரிபார்

(1 நிமிடம்)

பங்கேற்ற அனைவரும் சரிபார்த்து விட்டார்களா.

ஜூம் பயிற்சி/சரிபார்த்தல் மற்றும் குறியீட்டைப் பயன்படுத்துதல்: **9870**

ஜெபி

(5 நிமிடம்)

இம்மட்டுமாய் இந்த பயிற்சியில், ஆண்டவர் உங்கள் குழுவிற்கு கொடுத்த பெலன், நோக்கம் மற்றும் உண்மைத்தண்மைக்காய் நன்றி சொல்லுங்கள். அவரன்றி உங்களால் ஒன்றும் செய்ய இயலாது என்பதை உங்கள் குழுவில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஆவியானவர் நினைவு படுத்த அவரிடம் கேளுங்கள்!

திரும்பிப் பார்

(5 நிமிடம்)

ஆரம்பிப்பதற்கு முன்பு சரிபார்ப்பதற்கு சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

கடந்த பகுதியின் முடிவில் நீங்கள் கற்றுக் கொண்டதை நடைமுறைப்படுத்த உங்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு வழிகளில் சவால் விடுக்கப்பட்டது.

இந்த வாரம் உங்கள் குழு எப்படி செயல் பட்டது என்பதைப் பார்க்க சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

மேலோட்டம்

(1 நிமிடம்)

இந்த அமர்வில் இந்தக் கருத்தைக் குறித்து கேட்போம் மற்றும் விவாதிப்போம்:

- தலைமத்துவ குழுக்கள்

நம்முடைய பட்டியலிலிருந்து இந்த முறையை நாம் பயிற்சி செய்யலாம்:

- 3/3 குழு சந்திப்பு

படிக்கவும்

(5 நிமிடம்)

தலைமத்துவ குழுக்கள்

இந்த செஷன்ல, குறுகிய நேரத்துல பின்பற்றுபவர்களைleadership செல் எப்படி நீண்ட காலத்துக்கு தலைவர்களாக்குதுன்னு கத்துக்கலாம்.

ஒன்று இரண்டாகுது. இரண்டு நான்காகுது. நான்கு எட்டாகுது. தனிப்பட்டது பன்மடங்காகும். தலைமுறை வளரும். அதிவேகமான வளர்ச்சி. தேவன் அவருடைய சிரிஷ்டில உருவாக்கின மாடல் இது தான். இப்படித்தான் தேவன் அவருடைய குடும்பம் வளரணும்னு விரும்பராறு. மூணுக்கு மூணு முறையை நாம ஏற்கனவே கத்துகிட்டு இருக்கோம் அது நுகர்வோர்களை உற்பத்தியாளாராக்குது, கத்துக்கறவங்களை தலைவர்களாவும் சீஷர்களை சீஷர்களை உருவாக்கரவங்களாவும் மாத்துது.

திரும்பி பாருங்க – மேல பாருங்க – முன்னாடி பாருங்க. கத்துக்குங்க – கீழ்படிங்க – பகிர்ந்துக்குங்க.

இந்த மாதிரி சந்திச்சா தனிப்பட்ட விசுவாசிகளுக்கும் ஆண்மீக வளர்ச்சி ஏற்படும் குழுவுல இயேசுவை பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை பெருக்கம் ஏற்படும். இந்த முறை சீஷர்களை பெருக்க உதவுது.

ஆனா ஒரு குழு குறுகிய நேரத்துக்கு இருந்தா எப்படி இருக்கும்? அவங்களால வளர்ந்து தேவனின் ராஜ்ஜியத்தை இனப்பெருக்கம் பண்ண முடியுமா? ஒரு குழு கொஞ்ச காலம் தான் சேர்ந்திருக்கும்னு உங்களுக்கு தெரியும்போது leadership cellsமூணுக்கு மூணு முறையை செயல்படுத்தஒரு வழியா இருக்கு.

தனிப்பட்ட விசுவாசிகளை குறுகிய நேரத்துல இனப்பெருக்க முறைகளை கத்துகிட்டு நீடிக்க செய்ய leadership cells தயார் படுத்துது.

கத்துக்கறவங்களை தலைவர்கள் ஆக்கி அவங்க புதிய குழுக்களை ஆரம்பிக்க leadership cells உதவறாங்க, புதிய சர்ச்சுகளுக்கு பயிற்சி குடுக்கறாங்க, leadership cells தேவனின் குடும்பத்தை மேலும் வளர்க்கும்.

ஒரு குழு நடமாடிக்கிட்டு இருந்தா leadership cells வளரும். ஏற்கனவே இயேசுவை விசுவாசிக்கறநாடோடிகள், மாணாக்கள், ராணுவ வீரர்கள், அன்றாட கூலி ஆட்கள் leadership cellல பிரமாதமா செயல்படறாங்க. அவங்க கலாச்சாரத்துனால, தொழில்னாலஅன்றாட ஜீவிதத்துனால – செயல்பட குழுவை நிறுவுவதில கஷ்டமா இருக்கலாம், ஆனா அவங்க போற ஒவ்வொரு இடத்துலயும் எப்படி குழுக்களை ஆரம்பிக்கறதுன்னு பயிற்சி குடுக்கலாம்.

ஒரே நேரத்துல கூட்டமா விசுவாசத்துக்கு வந்தாலும் leadership cells செயல்படும். ஒரு குடும்பம், நண்பர்களின் குழு, ஒரு சிறிய கிராமத்தை கூட குறுகிய நேரத்துல நீண்ட காலத்துக்கு உற்பத்தியாளராக்க பயிற்சி குடுக்கலாம் – தனிப்பட்ட முறைல போகாம ஆண்மீக பயிற்சி குடுக்க தேவை இல்லை.

முந்திய செஷன்ல, கடைசி ரெண்டு மூணுக்கு மூணு முறைய கத்துகிட்டு பயற்சி செஞ்சோம். இப்ப எல்லா முறையையும் – மூணு பகுதிகளையும் தெரிஞ்சுக்கலாம் - திரும்பி பாருங்க – மேல பாருங்க – முன்னாடி பாருங்க.

விவாதி

10 நிமிடம்

- இயேசுவை பின்பற்றும் வேறு ஏதாவது குழு உங்களுக்கு தெரியுமா? அல்லது ஜூம் பயிற்சியை கற்றுக் கொள்ள நீங்கள் ஒரு தலைமத்துவ குழுவை அமைக்க தயாரா?
- அவர்களை கூட்டி சேர்ப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

செயல்பாடு

(60 - 90) நிமிடங்கள்

3/3 குழு சந்திப்பு

- திரும்பிப் பார்க்க – கடந்த பகுதியின் கீழ்படிவதில், பயிற்றுவிப்பதில், பகிர்வதில் உள்ள சவால்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். (30 நிமிடங்கள்)
- மேலே பார்க்க – குழுவாக அப் 2:42-47 ஐ வாசித்து 1-4 வரை உள்ள கேள்விகளுக்கு பதில் அளிக்கவும். (30 நிமிடங்கள்)
- முன்னோக்கி பார்க்க – கேள்விகள் 5, 6, 7 ஐ பயன்படுத்தி எப்படி கீழ்படிவது, பயிற்றுவிப்பது மற்றும் பகிர்ந்தளிப்பது என்பதை கண்டறியுங்கள். (30 நிமிடங்கள்)

திரும்பிப் பார்க்கிறேன்

படி 1 - நன்றி கூறுதல்

ஒவ்வொரு நபரும் தங்களுக்கு கிடைத்த நண்மைகளில் ஒன்றைப் பகிர்ந்து கொள்ள சிறிது நேரம் ஒதுக்குங்கள்.

படி 2 - உங்கள் போராட்டங்களைப் பகிர்ந்து கொள்வது மற்றும் ஒருவருக்காக ஒருவர் பிரார்த்தனை செய்தல்

உங்கள் குழுவில் உள்ள ஒவ்வொருவரும் தாங்கள் போராடிக் கொண்டிருக்கும் ஒன்றைப் பற்றி சுருக்கமாகப் பகிர்ந்து கொள்ளுங்கள். அவர்கள் பகிர்ந்து கொள்வதைப் பற்றி அவர்களுக்காக வேறு யாராவது ஒருவர் பிரார்த்தனை செய்யுங்கள்.

படி 3 - குழுவில் கவனம் செலுத்துதல்

நேரத்தை ஒதுக்கி, நீங்கள் ஏன் ஒன்றாக இருக்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள் - கடவுளை நேசிப்பது, மற்றவர்களை நேசிப்பது, இயேசுவைப் பகிர்ந்துகொள்வது மற்றும் மற்றவர்களும் அவரைப் பற்றி பகிர்ந்து கொள்ள உதவுங்கள்.

படி 4 - சரிபார்த்தல்

ஒவ்வொரு நபரும் பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும்:

- இதுவரை நீங்கள் கற்றுக்கொண்டதை எவ்வாறு கடைப்பிடித்தீர்கள்?
- நீங்கள் கற்றுக்கொண்டவற்றில் நீங்கள் யாரைப் பயிற்றுவித்தீர்கள்?
- ஒரு குழுவாக ஒன்றாக இருந்து உங்கள் கதை அல்லது கடவுளின் கதையை யாருடன் பகிர்ந்துள்ளீர்கள்?)

மேலே பார்க்கவும்

படி 1 - கடவுளின் பரிசுத்த ஆவியை வழிநடத்த அழைக்கவும்

பிரார்த்தனை செய்ய சிறிது நேரம் ஒதுக்குங்கள். கடவுளுடன் எளிமையாகவும், சுருக்கமாகவும் பேசுங்கள். நீங்கள் படிக்கவிருக்கும் பகுதியிலிருந்து உங்களுக்குக் கற்பிக்க பரிசுத்த ஆவியிடம் கேளுங்கள்.

படி 2 - கடவுளின் வார்த்தையைப் படித்து கேள்விகளைக் கேளுங்கள்

குழுவில் உள்ள ஒருவரை வேதத்திலிருந்து ஒரு பகுதியை படிக்கச் செய்யுங்கள். நீங்கள் படித்து முடித்தவுடன், குழு இந்த இரண்டு கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும்:

- இந்தப் பத்தியில் உங்களுக்கு பிடித்தது என்ன?
- உங்களுக்கு சவாலாக அல்லது புரிந்து கொள்ள கடினமாக இருப்பது எது?

அதே பகுதியை இரண்டாவது முறை படிக்கவும், பின்னர் குழு இந்த இரண்டு கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

- இந்த பகுதியிலிருந்து மக்களைப் பற்றி நாம் என்ன கற்றுக் கொள்ளலாம்?
- இந்த வசனத்திலிருந்து கடவுளைப் பற்றி நாம் என்ன கற்றுக் கொள்ளலாம்?

இந்த பகுதியை மட்டும் தியானியுங்கள். அதை எளிமையாக செய்யவும்!

முன்னோக்கி பார்க்கவும்

படி 1 - கடவுளின் நோக்கத்திற்காக பிரார்த்தனை

உங்கள் குழுவில் உள்ள ஒவ்வொருவரும் அமைதியாக ஜெபித்து, கடவுளிடம் இந்தக் கேள்விகளைக் கேளுங்கள்:

- கடவுளே, நீங்கள் எனக்குக் கற்பிப்பதை நான் எப்படிக் கடைப்பிடித்து நடைமுறைப்படுத்துவது?
- இந்தப் பத்தியிலிருந்து நான் யாரைப் பயிற்றுவிக்க முடியும், அதனால் அவர்கள் உங்களுக்குக் கீழ்ப்படியவும் நேசிக்கவும் கற்றுக்கொள்ள முடியுமா?
- என்னுடைய சாட்சியையோ அல்லது இயேசுவைப் பற்றிய உங்கள் நற்செய்தியையோ யாருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்?

இப்போது மற்றும் உங்கள் குழு மீண்டும் சந்திக்கும் நேரத்தில் நீங்கள் எடுக்கக்கூடிய குறிப்பிட்ட பதில்கள், குறிப்பிட்ட பெயர்கள் மற்றும் குறிப்பிட்ட படிகளை உங்களுக்கு கொடுக்க பரிசுத்த ஆவியிடம் கேளுங்கள்.

படி 2 - உறுதிமொழிகளை சேகரித்தல்

உங்கள் குழுவில் உள்ள ஒவ்வொரு நபரிடமும் ஒவ்வொரு கேள்விக்கும் தேவன் கொடுத்த பதிலைப் பகிர்ந்து கொள்ளச் சொல்லுங்கள். ஒருவர் ஒன்று, இரண்டு அல்லது மூன்று கேள்விகளுக்கும் கூட தேவனிடமிருந்து எதையும் பதிலாக கேட்டிருக்க மாட்டார்கள். அவர்கள் கேட்கவில்லை என்று வெறுமனே தெரிவிக்கலாம்.

ஆனால் நினைவில் கொள்ளுங்கள், உங்கள் குழு தேவனிடமிருந்து கேட்க வேண்டும். “என் ஆடுகள் என் சத்தத்தை கேட்கின்றன” என்று இயேசு சொன்னார். மேலும் உங்கள் கீழ்ப்படிதல் படிகள் எவ்வளவு குறிப்பிட்டதாக இருக்கிறதோ, அவ்வளவாய் நீங்கள் மீண்டும் சந்திப்பதற்கு முன்பு அவைகளுக்குக் கீழ்ப்படிவது எளிதாக இருக்கும்.

படி 3 - உங்கள் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

நீங்கள் ஒன்றாக நேரத்தை முடிப்பதற்கு முன், உங்கள் 3/3 குழுவை இரண்டு அல்லது மூன்று சிறிய குழுக்களாக உடைத்து, தேவன் உங்களிடம் செய்யச் சொல்லி கேட்கும் காரியங்களைப் பயிற்சி செய்யுங்கள்.

சரிபார்த்தல்

(1 நிமிடம்)

இந்த பகுதியின் கருத்து:

- தலைமத்துவ குழுக்கள்

இந்த பகுதியின் முறை:

- 3/3 குழு சந்திப்பு

அடுத்த அடி

கீழ்படி

பட்டியல் 100-லிருந்து ஏற்கனவே விசுவாசிகளாய் இருக்கும் சிலரை தேர்ந்தெடுங்கள். தலைமத்துவ குழுவைப் பற்றி அவர்களிடம் விவரித்து, அதில் இணைந்து கொள்ள விருப்பமா என்று கேளுங்கள்.

பகிர்ந்து கொள்

தலைமத்துவ குழுவைப் பற்றி யாரிடம் கூற வேண்டும் என்று ஆண்டவரிடம் கேளுங்கள். அவரின் பெயரை உங்கள் குழுவில் பகிர்ந்து கொள்ளுங்கள். மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளும் படி சொல்லுங்கள்.

அமர்வு 9

சரிபார்

(1 நிமிடம்)

பங்கேற்ற அனைவரும் சரிபார்த்து விட்டார்களா.

ஜூம் பயிற்சி/சரிபார்த்தல் மற்றும் குறியீட்டைப் பயன்படுத்துதல்: **1355**

ஜெபி

(5 நிமிடம்)

அவருடைய வழிகள் நம்முடைய வழிகள் அல்ல, அவருடைய நினைவுகள் நம்முடைய நினைவுகள் அல்ல என்பதற்காய் அவருக்கு நன்றி செலுத்துங்கள். அவருடைய சிந்தையை உங்கள் குழுவில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் கொடுக்க அவரிடம் கேளுங்கள். – பிதாவின் வேலையை செய்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தார். பரிசுத்த ஆவியானவர் உங்களை வழி நடத்தவும், இந்த பகுதியை சிறப்பானதாக மாற்றவும் அவரிடம் கேளுங்கள்.

திரும்பிப் பார்

(5 நிமிடம்)

ஆரம்பிப்பதற்கு முன்பு சரிபார்ப்பதற்கு சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

கடந்த பகுதியின் முடிவில் நீங்கள் கற்றுக் கொண்டதை நடைமுறைப்படுத்த உங்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு வழிகளில் சவால் விடுக்கப்பட்டது.

இந்த வாரம் உங்கள் குழு எப்படி செயல் பட்டது என்பதைப் பார்க்க சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

மேலோட்டம்

(1 நிமிடம்)

இந்த அமர்வில், இந்தக் காரியங்களைக் குறித்து நாம் கேட்டு கற்றுக் கொள்வோம்:

- தொடர்ச்சியாயில்லாத வளர்ச்சி
- வேகம்
- எப்போதும் இரண்டு தேவாலயங்களின் பகுதி

இந்த முறையை நமது பட்டியலில் சேர்த்துக் கொள்வோம்:

- பயிற்சியை சரிபார்க்கும் பட்டியல்
- நான்கு புலங்கள் கருவி
- தலைமுறை பொருத்துதல்

படிக்கவும்

(5 நிமிடம்)

தொடர்ச்சியாயில்லாத வளர்ச்சி

இந்த செஷன்ல, நேர் பாதைல ராஜ்ஜியத்தை வளர்ச்சி அடைய செய்யலாம்ங்கற எத்தை உடைக்கறதை பத்தி பேசலாம். சீஷர்கள்சீக்கிரமா அதிகமாக்கற சீஷர்களை உருவாக்கணும், ஒரே நேரத்துல பல விஷயங்கள் நடக்கும் அதுக்காக குறிப்பிட்ட முறைல அது நடக்கும்னு அவசியம் இல்லைனு நினைக்கணும்.

NON – SEQUENTIAL வளர்ச்சியின் வல்லமையை தெரிஞ்சுக்கணும். சீஷர்கள் பன்மடங்காகறதை மக்கள் நினைக்கும்போது, இதுஒவ்வொரு படியின் செயல்னு எப்பவும் நினைக்கறாங்க.

முதல்ல ஜெபம். அப்புறம் தயாரிப்பு. அப்புறம்தேவனின் நற்செய்திகளை பகிர்தல் . பிறகு சீஷர்களை உருவாக்குவது. பிறகு சர்ச்சுகளை உருவாக்குவது. அப்புறம் தலைவர்களை அதிகப்படுத்தறது. அப்புறம் இனப்பெருக்கம்.

இந்த வழியை தெரிஞ்சுகிட்டா, ராஜ்ஜிய வளர்ச்சியைநேரான வரிசையான முறைல பின்பற்றுவது சுலபமா இருக்கும். எப்பவும் இப்படியே செயல்படுமாங்கறது ஒரு பிரச்சனை. பெரிய பிரச்சனை என்னன்னா இப்படி தான் சிறப்பா எப்பவும் செயல்படும்.

ஒரு மனிதனின் ஜீவிதத்தை இந்த லைன் குறிக்குது. இது பிறப்பு தேவனின் நற்செய்திகளை முதல் முறையா கேக்கறாங்க.

இங்க தான் இயேசுவை பின்பற்ற தேர்ந்தேடுக்கறாங்க. இங்க தான் அவங்க கதையை தேவனின் கதை முதல்ல பகிர்ந்துக்கறாங்க அது பன்மடங்காக ஆரம்பிக்குது. இங்க தான் இந்தஜீவிதம் முடியுது.



அப்ப இங்கிருந்து இங்க – இயேசுவை பத்தி முதல்ல கேக்க ஆரம்பிக்கறதுல இருந்து பகிர்ந்துக்கறதுல இருந்து நாம ஆண்மீக தலைமுறையை தெரிஞ்சுக்கலாம்.

பன்மடன்காகறதுக்கு முன்னால இவ்வளவு நேரம். தேவனின் குடும்பம் வளர்றதுக்கு முன்னால இவ்வளவு நேரம். பொதுவா இப்படித்தான் சீஷர் உருவாக்கறதை பத்தி சொல்லிக்குடுக்கப்படுது. ஆனாசிறந்த அபிஷேகம் மாதிரி முறையைபயன்படுத்தினா – என்ன நடக்கும்னு கவனீங்க.



இப்ப புதிய சீஷர் உடனே பன்மடங்காக்க ஆரம்பிக்கராறு. ஆண்மீக தலைமுறை குறையுது. யாராவது தேவனின் நற்செய்திகளை உடனே கேக்கறாரு. தேவனின் குடும்பம் வேகமா வளருது. நித்தியத்துக்காக நிறைய பேரு காக்கப்படறாங்க.

இதெல்லாம் போக – அவங்க பன்மடன்காகும்போது முன்னேறணும். ஆனா செயல்பட்டுகிட்டே இருந்தா என்னாகும்? இன்னும் சீக்கிரமா யாராவது பன்மடங்காக்க ஆரம்பிச்சா எப்படி இருக்கும்? அவங்க விசுவாசிக்கறதுக்கு முன்னால முதல்ல கேட்டதை அவங்க பகிர்ந்துக்க ஆரம்பிச்சா எப்படி இருக்கும்?



பர்களோட குடும்பத்தோட கத்துகிட்டதை இயேசுவிடம் ‘ஆம்’னு சொல்றதுக்கு முன்னால தேவனின் வசனத்திலிருந்து ஒரு குழுவை சேக்க சில பேர் தயாரா இருக்காங்க. எப்படி ஒரு குழுவை சேக்கறதுனுமக்களுக்கு சொல்லுவோம் அவங்க கத்துகிட்டதை பகிர்ந்துக்கணும் அதையே மத்தவங்களுக்கு சொல்லணும், தேவனின் குடும்பம் வேகமா செயல்படுது.

இரட்சிக்கறதைபத்தி மட்டும் பகிர்ந்துக்கறது இல்லாம இயேசுவின் பாதைல ஊழியம் செய்யணும். ஒரு குடும்பமோ நண்பர்களோ கிராமமோ இயேசுவை பின்பற்ற இது ஒரு வழி. ஆனா அதுவே வெகு சீக்கிரம் பன்மடங்காக்கினா என்ன? தேவ குமாரனை சந்திக்கறதுக்கு முன்னால தேவனின் வழிகளை பகிர்ந்துகிட்டா எப்படி இருக்கும்?



சில நேரங்கள்ல தேவனின் நற்செய்திகளை உடனே செயல்படவோ கேக்கவோ குழுவுக்கு முடியாம போகலாம். ஆனா இந்த குழுவால தேவனின் முறைகளை கத்துக்க முடியும் – சமுக வளர்ச்சியோ தலைமை பயிற்சி மூலமா முயற்சிக்கலாம். இயேசுவை பத்தி கேக்கறதுக்கு முன்னாலதேவனின் முறைகள் – பாடங்கள் – கீழ்படிதல் – பகிருதல் – மத்தவங்களுக்கு சொல்லிக்குடுக்கறதுனாலஇந்த குழுவை பன்மடங்காக்க முடியும்.

இது நடக்கும்போது, விரும்பினவங்க மனசுல தேவனின் வழிகள் பதியுது. ஒரு சமூகமா தனிப்பட்ட ஜீவிதங்களா அவருடைய முறைகள் பின்னப்படுது. தேவன் அவருடைய வழியை உருவாக்கும்போது – அவங்க எப்பவும் பெற்ற தேவனின் நற்செய்திகள் சத்தியத்தை வெளிப்படுத்தும். இப்படித்தான் ஒரு நிறுவனம், சமூகம், அல்லது ஒரு தேசமும் இயேசுவை பின்பற்ற இதுஒரு வழி.

Non-Sequential வளர்ச்சிக்கு ‘எது தேவை’ எண்ணம் இப்பவும் தேவை. என்ன செயலா இருந்தாலும் சரி – பெரிய கேள்வி எப்பவும் அது தான் – எந்த நல்ல நிலம் விசுவாசமா இருக்க கூடியது? தேவனின் வழிகளை யாரு கத்துகிட்டு பயிற்சி செஞ்சு பகிர்ந்துக்குவாங்க?

இந்த நல்ல நிலத்தை பாக்கறது – இந்த நல்ல இதயங்களை கண்டுபிடிக்கறது- நம்ம நேரத்துக்கும் முயற்சிக்கும் வெகுமதியா கிடைக்குது. இவங்ககிட்ட தான் நாம மனம் விட்டு சொல்றோம். இவங்களுக்காக தான் நாம நம்ம ஜீவிதங்களை அற்பணிக்கறோம். இவங்க தான் தேவனின் ராஜ்ஜியத்தை வளர வெக்கறாங்க.

விவாதி

10 நிமிடம்

- இந்த வீடியோவில் நீங்கள் கேட்ட ஒரு நல்ல கருத்து என்ன? ஏன்?
- சவாலான காரியம் என்ன? ஏன்?

படிக்கவும்

(5 நிமிடம்)

வேகம்

இந்த செஷன்ல ஏன் பன்மடங்காக்கறதுமுக்கியம் அதுவும் சீக்கிரமா பன்மடங்காக்கறது முக்கியம்னு தெரிஞ்சுக்கப்போறோம். pace பத்தி தான் இந்த செஷன். Pace னா நேரம் – எப்படி வேகமாவும் மெல்லமாவும் நடக்குது. pace முக்கியம் காரணம் நாம எங்க நம்ம நித்தியத்தை கழிக்கறோமோ – நேரத்துக்கும் அப்பாற்பட்ட விஷயம் – குறுகிய நேரத்துல தீர்மானிக்கப்படறதைஜீவிதம்னு சொல்றோம்.

தேவன் நம்ம கிட்ட பொறுமையா இருக்காருன்னு தேவனின் வசனம் கூருது – எதுவும் அழிய விரும்பல, ஆனா எல்லாரும் அவர் பக்கம் திரும்பி அவரை பின்பற்றணும். தேவன் நமக்கு நிறைய நேரத்தை குடுக்கறாரு காரணம் அவர் சொன்னதை செய்ய எல்லாரையும் சென்றடைய நம்மளை அழைச்சதுக்காகநம்ம கிட்ட குறைந்த நேரம் தான் இருக்கு.

இயேசுவை நெருக்கமா பின்பற்ற, அவருடைய மக்களை சீக்கிரம் தொடரணும். நம்ம நேரத்தை வீணடிக்ககூடாது. நம்ம paceஐ அதிகப்படுத்தணும்.

உலகளாவிய சர்ச் – இயேசுவை பின்பற்றும் எல்லாரும், சேர்ந்தா – என்றும் காணாத அளவு பெரியதா இருக்கும். உலகளாவிய சர்ச்- இயேசுவை பின்பற்றும் எல்லாரும், சேர்ந்தா – இது வரைக்கும் இல்லாத உலக ஜனத்தொகையின் பெரிய பகுதியா இருக்கும். அவ்வளவு அதிக எண்ணிக்கை இருந்தாலும் – உலகளாவிய சர்ச் உலக ஜனத்தொகையைவிட வேகமா வளர்றது இல்லை.

அப்படீன்னா முன்ன விட அதிகமா இயேசுவை பின்பற்றுபவராக நாம இருந்தாலும், இயேசுவை பின்பற்றாதவங்க இன்னும் இருக்காங்க அவரை விட்டு பிரிஞ்சிருக்காங்க, பன்மடங்காக்கற சீஷர்களை உருவாக்கறது முக்கியம். ஒரு சீஷரோட ஆரம்பிங்க போதும்.

அவங்க பன்மடங்காக்கி 18 மாசத்துக்கு ஒரு முறை புது சீஷரை உருவாக்கினா – ஒன்றரை வருடம் முழுவதும் – அப்புறம் அந்த சீஷர்கள் அதையே செய்யறாங்க – பத்து வருடங்கள்ல, இயேசுவின் புது சீஷர்களா 64 பேரு இருப்பாங்க. நேசிக்கும் தேவனோட 64 பேரு எப்பவும் இருப்பாங்க.

அதுவே அவங்க இன்னும் வேகமா செயல்பட்டா? அவங்க pace ஐ இன்னும் அதிகப்படுத்தினா?

நாலு மாசத்துல அவங்க பன்மடங்காக்கினா – வருடத்துல கால் பங்கு –18 மாதங்களுக்கு பதிலா, அந்த சீஷரும் அதையே செஞ்சா- 10 வருடத்துல, இயேசுவை பின்பற்றவங்க பில்லியன் கணக்குல இருப்பாங்க. அதை பத்தி யோசிங்க. 100க்கும் குறைவா இருக்கறதை விட. 1,000,000,000 க்கும் மேலா.

எல்லாமே PACE அதிகப்படுத்தலாம்.

18 மாதங்கள்ல இருந்து 4 மாதங்கள்னா நாம நாலரை மடங்கு வேகமா செயல்படறோம்னு அர்த்தம். ஆனா இந்த முடுக்கத்தை ஒவ்வொரு சீஷர்கிட்டையும் 1 0 வருடங்கள்ல கடைப்பிடிச்சா தேவனின் குடும்பம் 15 மில்லியன் மடங்கு வேகமா வளருதுன்னு அர்த்தம். நுற்றுக்கும் குறைவா. பில்லியனுக்கும் அதிகமா.

PACE முக்கியம்.

நம்ம கதையை தேவனின் கதையை பகிர்ந்து இயேசுவை பின்பற்ற வழிநடத்தறதுனால தேவனின் குடும்பம் வளருது. எப்படி அதை அப்படியே செயல்படறதுன்னுபுதிய விசுவாசியோட பகிர்ந்துக்கறதுனால தேவனின் குடும்பம் காட்டுத்தீயை போல வளருது.அதிவேகமானது. ரொட்டி துண்டின் மூலம் புளிப்புமாவு மாதிரி.

ஜுமே மாதிரி

எல்லாத்துக்கும் காரணம் PACE.

விவாதி

10 நிமிடம்

- வேகம் ஏன் முக்கியம்?
- உங்களுடைய சிந்தையிலும் செயல்களிலும் நீங்கள் எதை மாற்ற வேண்டும்? அல்லது உங்களுடைய சிந்தை அவருடைய முன்னுறிமையோடும், வேகத்தோடும் இணைந்திருப்பதற்கு எதை மாற்ற வேண்டும்?
- ஒரு மாற்றத்தை கொண்டு வருவதற்கு இந்த வாரம் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

படிக்கவும்

(5 நிமிடம்)

எப்போதும் இரண்டு தேவாலயங்களின் பகுதி

இந்த செஷன்ல, வளர்ச்சியைமுடுக்கவும் விசுவாசமுள்ள ஆண்மீக குடும்பம் நகரம் முழுக்க பரவவும்எப்படி இயேசுவின் விசுவாசிகள் ரெண்டு சர்ச்சுகளின் அங்கமா இருக்க முடியும்னு தெரிஞ்சுக்க போறோம். தேவனின் வசனத்துல – நாம ஆண்மீக குடும்பமா ஜீவிக்க அவர் கிட்ட சரியான திட்டம் இருக்குனு தெரிஞ்சுக்கறோம். அவருடைய குடும்பம் ஒரு சர்ச்சா மூணு விதமா பைபில்ல கூறப்பட்டிருக்கு.

- **உலகளாவிய சர்ச்** – எல்லாவிசுவாசிகளும் கூட்டமா இருந்தவங்க, இருக்கறவங்க, இருக்கப்போறவங்க.
- **மாநில நகர சர்ச்** – எல்லா விசுவாசிகளும் நகரத்துல அல்லது தேசத்தின் பகுதில கூடறது.
- **சாதாரண சர்ச்** – ஒரு கட்டடத்துலையோ அல்லது வீட்லயோ விசுவாசிகள்கூடறசிறிய குழுவுல.

சிறிய குழு – இந்தஅடிப்படை சர்ச் – ஆன்மீக குடும்பம் கூடி ஒண்ணா பல மாதங்களா வருடங்களா ஒரே சமயத்துல செயல்படும்போது சேர்ந்தே வாழ்ந்து சிறப்பா செயல்படுது. அதே சமயம், இயேசுஅவருடைய சீஷர்களுக்கு அவங்க தொடர்ந்து புதிய ஆண்மீக குடும்பங்களை ஆரம்பிச்சி, இயேசுவை போல வளரச்செய்து, எப்படி புதிய ஆன்மீக குடும்பங்களை வளர்க்கணும்னு சொல்லிக்குடுக்க கட்டளையிட்டாரு.

இயேசு நமக்கு கூறினாறு – எல்லா தேசங்கள்லயும் சீஷர்கள்உருவாக்குங்க, பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்துலஞானஸ்நானம்பண்ணி என்னுடைய கட்டளைகளுக்கு கீழ் படிய சொல்லிகுடுங்க. அப்படீன்னா எப்படி இந்த ரெண்டு விஷயங்களும் ஒண்ணா வந்துச்சு – நாம எப்படி சர்ச்சுக்கு

அங்கமாவும் புதிய சர்ச்களையும் ஒரே நேரத்துல ஆரம்பிக்க முடியும்?

ஒரு அடிப்படை சர்ச்சை கற்பனை பண்ணுங்க – நாலே குடும்பங்கள். வழிநடத்தறஒவ்வொரு ஜோடி சின்னங்கள் வெவ்வேற தம்பதிகளிடம் இருக்கு. ஒரே சர்ச்சின் அங்கமா எல்லா தம்பதிகளும் இருக்காங்க - இது அவங்க ஆண்மீக குடும்பம்.

இவங்களோடஜீவிக்கறாங்க அதாவது – அவங்க நல்ல செயல்கள்லையும் உற்சாகப்படுத்தி நேசிக்கற சகோதர சகோதரிகள். ஆனா இதே தம்பதிகள் ஒவ்வொருவரும் புதிய ஆன்மீக குடும்பத்தை ஆரம்பிக்க செயல்படறாங்க. அவங்களுடைய சிறிய குழுவுல செயல்படற மாதிரி செயல்படல, ஆனா அவங்க ஒரு புதிய ஆன்மீக குடும்பத்தை ஆரம்பிச்சிஅதுவளர மாடலாவும் உதவி செய்யறாங்க.

இதை கற்பனை பண்ணுங்க – ஒரே நேரத்துல நாலு சர்ச்சை ஒரு சர்ச் ஆரம்பிக்குது. இப்படி தான் தேவன் அவருடைய குடும்பத்தை வேகமா வளர்த்த முடியும். இப்படி தான் சர்ச் தன்னுடைய வேகத்தை அதிகரிக்க முடியும்.

முந்திய செஷன்ல, training cycle – மாடல், அசிஸ்ட், வாட்ச் அண்ட் லீவ் பத்தி தெரிஞ்சுகிட்டோம். இந்த முதல் ரெண்டு கட்டங்களும் – மாடல்அசிஸ்ட் வேகமா செயல்படறதுக்காக இருக்கு - புதிய விசுவாசிகள் ஆரோகியமா அவங்க விசுவாசத்துல வளருவாங்க. அப்படீன்னா ஏற்கனவே இருந்த சர்ச்சும் ஆரம்பிச்சா அந்த நாலு சர்ச்சுகளுக்கும் என்னாகும்.

மாடலிங்கும் அச்சிஸ்டிங்கும் ஆரம்பிக்க உதவின பிறகு, இந்த தம்பதிகள் (ஏற்கனவே இருந்த சர்சுகள்) ஏற்கனவேஇந்த புதிய சார்சுகளை (முதல் தலைமுறை) மாடலிங்கும் அச்சிஸ்டிங் செய்யவும் உதவி இருக்காங்க (ரெண்டாவது தலைமுறை). இந்த நாலு புதிய சர்ச்சுகளும் (முதல் தலைமுறை) நம்ம தம்பதிகள் (உருவாகற சர்ச்) இப்ப வாட்ச் கட்டத்துல இருக்காங்க – புதிய சர்ச்சுகளோட முன்னேற்றத்துல கண்ணா இருக்காங்க (முதல் தலைமுறை) அதே நேரத்துல புதிய சர்ச்சுகளை மாடல் அசிஸ்ட் பண்றாங்க (உவது தலைமுறை) தானே ஆரம்பிக்க உதவிக்கறாங்க.

ஒரே நேரத்துல மத்த ஆன்மீக குடும்பத்தை மாடல் அசிஸ்ட் செய்ய நிறைய பேரால முடியாது. ஆனா அவங்க கவனிச்சு பன்மடங்கு சர்ச்சுகளுக்கு பயிற்சி குடுத்து வளரும்போதே வழிகாட்டிகளோடஇணைக்க உதவறாங்க.

அப்படீன்னா ஒரு தனி ஆன்மீக குடும்பம் – ஒரு சிறிய குழு சர்ச் – ஒரே நேரத்துல பல சிறய குழு சர்ச்சுகளை ஆரம்பிக்கலாம். இதுல நிறைய பலன் இருக்கு. அப்படீன்னா இந்த சர்ச்சுகளுக்கு என்னாகும் அவங்க வளரும்போதே புதிய சர்ச்சுகளை இன்னும் புதிய சர்ச்சுகளைஆரம்பிச்சுகிட்டே இருக்காங்க? எப்படி இணைஞ்சிருக்காங்க? நீட்டிக்கப்பட்ட ஆன்மீக குடும்பமா அவங்க எப்படி ஜீவிக்கறாங்க?

பதில் என்னன்னா இந்த எல்லா சாதாரண சர்ச்சுகளும் வளரும் தேகத்தின் அணுக்கள் மாதிரி, அவங்க இணைஞ்சு நகரத்துலையோ மாநில சர்ச்சுலையோ இணையறாங்க. சர்சுகள் தொடர்புடையது. ஒரே ஆன்மீக டி என் ஏ வை பகிர்ந்துக்கறாங்க. முதல் பன்மடங்கான குடும்பத்தொட எல்லாரும் இணைஞ்சிருக்காங்க.

இப்ப – சில வழிகாட்டுதலோட – மேலும்பெரிய அங்கமாககூடி வராங்க.

விவாதி

10 நிமிடம்

பிரிவதின் மூலம் பெருகும் ஆவிக்குறிய குடும்பங்களை உருவாக்குவதற்கு பதிலாய், தொடர்ந்து புதிது புதிதாய் ஆவிக்குறிய குடும்பங்களை உருவாக்குவதின் நற்பண்புகள் என்ன?

படிக்கவும்

(5 நிமிடம்)

பயிற்சியை சரிபார்க்கும் பட்டியல்

இயேசு கூறினார் – சிறந்த அன்பு இதைவிட வேற எதுவும் இருக்க முடியாது – நண்பர்களுக்காக தன்னுடைய உயிரை குடுக்கறது. இயேசு சொன்னாரு பிறகு திரும்ப திரும்ப வெளிப்படுத்தினாரு தேவனின் விருப்பத்தினால நம்ம விருப்பங்களை விட்டுக்குடுத்தா குடும்பம் அருமையா வளருது.

பயிற்சி பட்டியல் ஒரு சாதாரண பட்டியல் இதை நீங்க மத்தவங்களை பல வித ஜூமே பயிற்சி training cycle அல்லது 100 பேர் கொண்ட பட்டியல்ல உள்ளவங்களுக்கு உதவி செய்ய பயன்படுத்தலாம்.

மத்தவங்களுக்குள்ள எந்த திறமைகள் வளருதுன்னு பாக்கறீங்க? இன்னும் எங்க எல்லாம் வளரணும்?

பயிற்சி பட்டியல் இருந்தா போற இடமெல்லாம் இயேசுவின் விசுவாசிகளை தலைவர்களாக்கும்போது நீங்க குறியோட செயல்பட உதவியா இருக்கும்.

ஆமாம், இதுக்கு நேரமும் முயற்சியும் தேவை. ஆமாம், தேவனின் சரியான திட்டத்துக்கு நம்முடைய விருப்பங்களை விட்டுக்குடுக்கறோம் தியாகம் செய்யறோம். ஆமாம், எல்லாத்துக்கும் மேலா, இது மதிப்பானது.

ஜூமே கருவியின் பயிற்சி பட்டியல் சிறந்த விளையாட்டு ஜீவிக்க சாதாரண கருவியா இருக்கு – தேவனின் செயல்.

செயல்பாடு

(20 நிமிடங்கள்)

பயிற்சியை சரிபார்க்கும் பட்டியல்

- வரி 1 ஐப் பயன்படுத்தி உங்களை நீங்களே மதிப்பீடு செய்து, பயிற்சி சரிபார்ப்புப் பட்டியலில் தொடர்புடைய நெடுவரிசைகளைக் குறிக்கவும்.

சுய மதிப்பீடு

கேட்டது - இந்த முறை அல்லது கருத்தைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேனா?
கீழ்ப்படிந்தது - இந்தக் கருவி அல்லது கருத்திற்கு நான் கீழ்ப்படிந்திருக்கிறேனா? ஒரு கருவி என்றால், நான் அதை சொந்தமாக பயிற்சி செய்திருக்கிறேனா? ஒரு கருத்து என்றால், அது உங்கள் முன்னோக்கை எவ்வாறு மாற்றுகிறது என்பதைப் பற்றி நீங்கள் சிந்தித்தீர்களா?
பகிரப்பட்டது - இந்தக் கருவி அல்லது கருத்தை நான் பகிர்ந்துள்ளேனா? ஒரு கருவி என்றால், இந்தக் கருவியை எப்படிப் பயன்படுத்துவது என்று யாருக்காவது காட்டியுள்ளீர்களா? ஒரு கருத்து என்றால், இந்த கருத்தை நீங்கள் யாரிடமாவது பகிர்ந்துள்ளீர்களா?
பயிற்சி பெற்றது - இந்தக் கருவி அல்லது கருத்தைப் பகிர்ந்துகொள்ள நான் மற்றவர்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறேனா? ஒரு கருவி என்றால், அந்த கருவியை வேறொருவருடன் பகிர்ந்து கொள்ள நான் ஒருவருக்கு பயிற்சி அளித்திருக்கிறேனா? ஒரு கருத்து என்றால், அந்த கருத்தை வேறு ஒருவருடன் பகிர்ந்து கொள்ள நான் ஒருவருக்கு பயிற்சி அளித்திருக்கிறேனா?

வழிகாட்டியின் வளர்ச்சி நிலை

அறியாதது - வழிகாட்டப்படுபவருக்கு தெரியாதா, அறிமுகமில்லாதவரா அல்லது முறையை தவறாகப் புரிந்து கொண்டாரா?

திறமையற்றவர் - வழிகாட்டப்படுபவருக்கு ஓரளவு தெரிந்திருந்தாலும், முறையைப் பற்றி இன்னும் உறுதியாக தெரியவில்லையா?

திறமையானவர் - வழிகாட்டப்படுபவர் முறையைப் புரிந்துகொள்கிறாரா மற்றும் முறையின் அடிப்படைகளைப் பயிற்றுவிக்க முடியுமா?

திறமையானவர் - வழிகாட்டி, தன்னம்பிக்கையுடன் முறையை திறம்பட பயிற்றுவிக்க முடியுமா?

வழிகாட்டியின் பங்கு

மாதிரி - (புதிய தகவல்களைப் பயிற்றுவித்து, புரிதலை உறுதிப்படுத்தவும்) மாதிரி உபயோகம் என்பது நடைமுறை அல்லது முறைக்கு, ஒரு உதாரணத்தை வழங்குகிறது. இது பயிற்சி சுழற்சியின் சுருக்கமான பகுதியாகும். இது பொதுவாக ஒரு முறை மட்டுமே செய்யப்பட வேண்டும். இது ஒரு நடைமுறை அல்லது ஒரு முறையைப் பற்றி விழிப்புணர்வை உருவாக்குகிறது மற்றும் அது எப்படி இருக்கும் என்பதைப் பற்றிய பொதுவான கருத்தை தருகிறது. மீண்டும் மீண்டும் மாதிரியை உபயோகிப்பது ஒருவரைச் சித்தப்படுத்துவதற்கான ஒரு சிறந்த வழி அல்ல.

உதவு - (அவர்களுக்கு அடிப்படைகள் கிடைக்கும் வரை நின்று அவர்களுடன் இருங்கள்) உதவி என்பது கற்கும் திறனைப் பயிற்சி செய்ய அனுமதிப்பதாகும். இது “மாதிரி” என்ற கட்டத்தை விட அதிக நேரம் எடுக்கும். அதற்கு வழிகாட்டியின் தரப்பில் "கைப்பிடித்து வழி நடத்துதல்" தேவைப்படுகிறது. வழிகாட்டி வழிகாட்டியாக இருக்க வேண்டும் மற்றும் கற்பவருக்கு பயிற்சி அளிப்பதில் பங்கு வகிக்க வேண்டும். இந்தக் கட்டம், கற்பவர் முழுத் திறமையுள்ளவராக ஆகும் வரை நீடிக்காது, ஆனால் திறமையின் அடிப்படைகளை அவர்கள் புரிந்துகொள்ளும் வரை மட்டுமே நீடிக்கும். இந்த கட்டம் நீண்ட காலம் தொடர்ந்தால், கற்றவர் வழிகாட்டியை சார்ந்து இருப்பார் மேலும் முழு திறனை அடைய மாட்டார்.

கவனி- (தொடர்ந்து திறமை அடையும் வரையில் ஈடுபடுங்கள்) கவனிப்பது என்பது மிக நீண்ட கட்டம். இது கற்பவருடன் அதிகமான மறைமுக தொடர்பை உள்ளடக்கியது. இது ஒரு திறமையின் அனைத்து அம்சங்களிலும் முழுத் திறனை வளர்க்க முயற்சி செய்கிறது. முதல் இரண்டு கட்டங்களும் இணைந்தால் அது பத்து மடங்கு அல்லது அதற்கும் அதிகமாக இருக்கலாம். கற்றவர் திறமையில் முன்னேறும்போது, வழிகாட்டியுடனான தொடர்பு குறைவாகவும், தற்காலிகமாகவும் மாறக்கூடும்.

விட்டு செல் - (சக வேலையாளாக அவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்) படிப்பவர் ஒரு வழிகாட்டியாக மாறும்போது வெளியேறுவது ஒரு வகையான பட்டப்படிப்பு. கற்பவரும் வழிகாட்டியும் ஒரே நெட்வொர்க்கில் இருந்தால், அவ்வப்போது தொடர்பு மற்றும் சக வழிகாட்டுதல் தொடர்ந்து நடைபெறலாம். பெற்றோர்கள் ஒரு குழந்தையை தங்கள் மிதிவண்டியை முற்றிலும் மேற்பார்வையின்றி ஓட்டுவதற்கு அனுமதித்தால், அதுவே விட்டுச் செல் கட்டமாகும்.

பயிற்சியை சரிபார்க்கும் பட்டியல்

சுய மதிப்பீடு ...	1	**கேட்டது**	**கீழ்ப்படிந்தது**	**பகிரப்பட்டது**	
வழிகாட்டியின் வளர்ச்சி நிலை ...	2	அறியாதது	திறமையற்றவர்	திறமையானவர்	
வழிகாட்டியின் பங்கு ...	3	**மாதிரி** புதிய தகவல்களைப் பயிற்றுவித்து, புரிதலை உறுதிப்படுத்தவும்	**உதவு** அவர்களுக்கு அடிப்படைகள் கிடைக்கும் வரை நின்று அவர்களுடன் இருங்கள்	**கவனி** தொடர்ந்து திறமை அடையும் வரையில் ஈடுபடுங்கள்	
வழிகாட்டியின் நடத்தைகள் ...	4	கட்டளையிடவும் மற்றும் தெரிவிக்கவும்	கட்டளையிடவும் மற்றும் ஆதரவு தெரிவிக்கவும்	ஆதரவு மற்றும் ஊக்கம்	
பொறுப்புகளை திட்டமிடல் ...	5	வழிகாட்டி முடிவு செய்கிறார்	விவாதித்து வழிகாட்டி முடிவு செய்கிறார்	கலந்து ஆலோசித்து வழிகாட்டப்படுபவர் முடிவெடுக்கிறார்	
பயிற்சி முறைகள் / கருத்துக்கள்					
கடவுள் சாதாரண மக்களை பயன்படுத்துகிறார்					
சீஷர்கள் மற்றும் தேவாலயத்தின் எளிய வரையறை					
ஆவிக்குறிய சுவாசித்தல் என்பது கேட்டல் மற்றும் கடவுளுக்கு கீழ்படிதல்					
S. O. A. P. S வேத வாசிப்பு					
பொறுப்புடைமை குழுக்கள்					
தயாரிப்பாளர் VS நுகர்வோர் வாழ்க்கை முறை					
ஒரு மணி நேரத்தை எப்படி ஜெபத்தில் செலவிடுவது					

தொடர்புடைய காப்பாளர் - பட்டியல் 100				
ஆவிக்குறிய பொருளாதாரம்				
நற்செய்தி மற்றும் அதை எவ்வாறு பகிர்ந்து கொள்வது				
ஞானஸ்நானம் மற்றும் அதை எப்படி கொடுப்பது				
உங்கள் 3 நிமிட சாட்சியத்தைத் தயார் செய்யவும்				
பிறருக்கு உங்கள்				

விவாதி

10 நிமிடம்

- நீங்கள் எந்த பயிற்சி முறையில் சிறப்பாய் பயிற்சி கொடுக்க முடியும்?
- நீங்கள் எந்த பயிற்சி முறையில் சிறப்பாய் பயிற்சி கொடுப்பது கடினமாய் இருக்கும்?
- சரிபார்ப்பு பட்டியலில் இருந்து எதையாவது சேர்க்கவோ அல்லது எடுக்கவோ செய்வீர்களா? ஏன்?

நினைவு கொள் – உங்கள் சக பயிற்சியாளரிடம், சொல்லிக் கொடுப்பதை சரிபார்க்கும் பட்டியலை பகிர்ந்து கொள்ள தவறி விடாதீர்.

உங்களிடம் பயிற்சியாளர் அல்லது வழிகாட்டி இல்லையென்றால், கூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்து, இப்போதே ஒன்றைக் கோரவும்.

நான்கு புலங்கள் மற்றும் தலைமுறை மேப்பிங் ஆகியவை வளர்ந்து வரும் இயக்க முயற்சிகளுக்கு உதவ வடிவமைக்கப்பட்ட கருவிகள்.

நீங்கள் இருக்கும் இடத்தில் இவைகளை நடைமுறைப்படுத்த ஜூம் பயிற்சியாளர்கள் உள்ளனர்.

நான்கு புலங்கள் கருவி

சீஷர்கள் மூலம் நடைபெற்று வரும் கிரியைகளை காண்பதற்காய், அவர்களை அடிக்கடி அமைதியான ஒரு இடத்திற்கு இயேசு அழைத்துச் சென்றார்.

நான்கு புலங்கள் கண்டறியும் விளக்கப்படம், தற்போதைய முயற்சிகள் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள செயல்பாடுகளை மதிப்பிடு செய்யப் பயன்படுத்தப்படுகிறது. இது தலைவர்களுக்கு எல்லாப் புலங்களையும் பயன்படுத்த உதவுகிறது.

அடுத்த இரண்டு ஸ்லைடுகளை பார்க்கவும்: நான்கு புலங்களின் வரையறை மற்றும் உதாரணங்கள்


புலங்களின் வரையறை

- காலியான நிலம்: எங்கே, யாருடன் தேவ இராஜ்ஜியத்தை விஸ்தரிக்க திட்டமிடுகிறீர்கள்?
- விதைப்பதற்கேற்ற நிலம்: எங்கே, யாருடன் தேவ இராஜ்ஜியத்தை விஸ்தரிக்க திட்டமிடுகிறீர்கள்? எப்படி செய்யப் போகிறீர்கள்?
- வளரும் களம்: மக்களை எவ்வாறு சித்தப்படுத்துகிறீர்கள் ஆவிக்குறிய மற்றும் தனித்தனியான ரீதியில், மற்றும் அவர்களின் இயற்கையான நெட்வொர்க்குகளில்?
- அறுவடைக் களம்: புதிய ஆவிக்குரிய குடும்பங்கள் [எளிய தேவாலயங்கள்] எவ்வாறு உருவாகின்றன?
- பெருக்கும் களம்: நீங்கள் யாருடன், எப்படி, எப்போது உண்மையுள்ள நபர்களை பிரித்தெடுக்கிறீர்கள்? அவர்களைச் சித்தப்படுத்துகிறீர்கள்? மற்றும் இனப்பெருக்கத்திற்கு அவர்களைப் பொறுப்பேற்கச் செய்கிறீர்கள்?

நான்கு புலங்கள் உதாரணம்

செயல்பாட்டுக்கான வளங்கள்

நான்கு கள வரைபடம்



கலந்துரையாடுங்கள்

10 நிமிடம்

- உங்களைச் சுற்றி ஒரு வெற்று களத்தை அடையாளம் காணவும். நீங்கள் இணைக்கப்பட்டுள்ள எந்த சமூகங்கள் அல்லது மக்கள் குழுக்களில் எந்த சுவிசேஷ நடவடிக்கையும் இல்லை?
- எவ்வாறு துறைகளில் ஒன்று புறக்கணிக்கப்பட்டால் நீண்டகால வளர்ச்சி பாதிக்கப்படுகிறது? உதாரணங்களைக் கொடுங்கள்.
- எந்த ஜூம் கருவிகள் எந்த துறையில் உதவ முடியும்?


தலைமுறை பொருத்துதல்

தலைமுறை மேப்பிங் என்பது ஒரு இயக்கத்தின் தலைவர்கள் தங்களைச் சுற்றியுள்ள வளர்ச்சியைப் புரிந்துகொள்ள உதவும் மற்றொரு எளிய கருவியாகும்.

ஒரு தலைமுறை மர வரைபடத்தை ஒரு துண்டு காகிதத்தில் அல்லது பல காகித துண்டுகளில் வரையலாம். எங்கே பயிற்சி தேவைப்படலாம் அல்லது இல்லை என்பதற்கு இந்த வரைபடம் தேவைப்படும். இயக்கத்தின் ஆரோக்கியம் தலைவர்களுக்கு ஒரு முக்கிய கவலையாகும் மற்றும் பலனளிப்பது ஆரோக்கியத்தை அளவிடுவதற்கான ஒரு சிறந்த வழியாகும்.

அடுத்த ஸ்லைடில் உள்ள உதாரணத்தைப் பார்க்கவும்.

தலைமுறை வரைபடத்தில் எளிய சபையை குறிக்கும் முறை



கலந்துரையாடுங்கள்

10 நிமிடம்

கீழ்க்கண்டவற்றில் கலந்துரையாட தலைமுறை மேப்பிங்கைப் பயன்படுத்தவும்:

- பெருகுவதை எந்த தலைவர்கள் பார்க்கிறார்கள்?
- அடுத்தது எந்த குழு பெருகும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்க்ள்?
- மற்ற தலைவர்களை கட்டியெழுப்ப எந்த தலைவர்கள் உதவ முடியும்?
- உறுதியற்ற பொறுப்புணர்வை எந்த தலைமுறையிலாவது பார்க்க முடிகிறதா?

சரிபார்த்தல்

(1 நிமிடம்)

இந்த அமர்வில் கேட்ட கருத்துக்கள்:

- தொடர்ச்சியாயில்லாத வளர்ச்சி
- பெருக்கத்தின் வேகம் முக்கியம்
- எப்போதும் இரண்டு தேவாலயங்களின் பகுதி

இந்த அமர்வில் கேட்ட முறைமைகள்:

- பயிற்சியை சரிபார்க்கும் பட்டியல்
- நான்கு புலங்கள் கருவி
- தலைமுறை பொருத்துதல்

அடுத்த அடி

கீழ்படி

"வேகம்" என்ற கருத்தை ஒரு நண்பருடன் பகிர்ந்துகொள்ளவும், உங்கள் இருதயத்திலும் ஆத்துமாவிலும் அது ஆழமாக பதிய ஆண்டவரிடம் பிரார்த்தனை செய்யவும். நீங்கள் யாருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று கர்த்தரிடம் கேளுங்கள்.

பகிர்ந்து கொள்

நீங்கள் ஏற்கனவே உங்கள் சொந்த எளிய தேவாலயத்தைத் தொடங்கியிருந்தால், அதில் உள்ளவர்களுடன் "எப்போதும் இரண்டு தேவாலயங்களின் ஒரு பகுதி" என்ற கருத்தைப் பகிரவும். இல்லையென்றால், உங்களுக்குத் தெரிந்த மற்றொரு விசுவாசியுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

ZÚME

அமர்வு 10

சரிபார்

(1 நிமிடம்)

பங்கேற்ற அனைவரும் சரிபார்த்து விட்டார்களா.

ஜூம் பயிற்சி/சரிபார்த்தல் மற்றும் குறியீட்டைப் பயன்படுத்துதல்: **5430**

ஜெபி

(5 நிமிடம்)

நம்மில் அவருடைய நல்ல வேலையை முடிக்க அவர் உண்மையுள்ளவர் என்று ஜெபித்து, கடவுளுக்கு நன்றி சொல்லுங்கள்.

அவர் உங்களுக்குள் மற்றும் உங்கள் மூலமாக செய்ய விரும்பும் பெரிய காரியங்களுக்கு, உங்கள் குழுவிற்கு தெளிவான தலைமைகளையும் திறந்த இருதயங்களையும் கொடுக்கும்படி அவரிடம் கேளுங்கள்.

உங்கள் நேரத்தை ஒன்றாக வழிநடத்த பரிசுத்த ஆவியிடம் கேளுங்கள், மேலும் அவருடைய உண்மைத்தன்மைக்காக அவருக்கு நன்றி சொல்லுங்கள். அவர் உங்களை மேற்கொண்டார்!

திரும்பிப் பார்

(5 நிமிடம்)

ஆரம்பிப்பதற்கு முன்பு சரிபார்ப்பதற்கு சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

கடந்த பகுதியின் முடிவில் நீங்கள் கற்றுக் கொண்டதை நடைமுறைப்படுத்த உங்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு வழிகளில் சவால் விடுக்கப்பட்டது.

இந்த வாரம் உங்கள் குழு எப்படி செயல் பட்டது என்பதைப் பார்க்க சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

ஊக்கப்படுங்கள்...

உங்களுக்கு தெரியாமலிருக்கலாம். ஆனால் இப்பொழுது எளிய சபைகளை ஆரம்பிப்பதை குறித்தும், உலக முழுவதும் சீஷர்களை உருவாக்குவது குறித்தும் இப்பொழுது உங்களுக்கு பயிற்சி இருக்கிறது!

இந்த அமர்வில் ஜூம் பயிற்சி ஒரு ஆரம்பமே. நீங்கள் கற்றுக் கொண்ட முறைகளை பிற்பாடு நடைமுறைப்படுத்த தேவையான திட்டத்தை உருவாக்குவோம்.

மேலோட்டம்

(1 நிமிடம்)

இந்த அமர்வில் இந்தக் கருத்தைக் குறித்து கேட்போம் மற்றும் விவாதிப்போம்:

- தலைமத்துவத்தின் வலை

இந்த முறைகளை நம்முடைய தொகுப்பில் சேர்ப்போம்:

- சக வழிகாட்டுதல் குழு
- 3 மாத திட்டம்

படிக்கவும்

(5 நிமிடம்)

தலைமத்துவத்தின் வலை

இந்த செஷன்ல, LEADERSHIP IN NETWORKS சிறிய சர்ச்சுகளுடையவளர்ற குழுவை எப்படி ஒண்ணா செயல்பட வெக்குது, புதிய தலைவர்களை வளர்த்து தேவன் அவருடைய மக்களுக்காக மேலும் நல்ல விஷயங்களை சாதிக்கணும்னு தெரிஞ்சுக்கலாம்.

அப்படின்னா சர்ச்சுகள் வளரும்போது அது புதிய சர்ச்சுகளை ஆரம்பிக்கும்போது அது புதிய சர்ச்சுகளை ஆரம்பிக்கும்போதுஎன்னாகும்? அவங்க எப்படி இணைஞ்சிருக்காங்க ? நீட்டிக்கப்பட்டஆண்மீக குடும்பமா எப்படி சேர்ந்து வாழறாங்க?

இந்த எல்லா சாதாரண சர்ச்சுகளும் வளர்ற தேகத்துல அணுக்கள் மாதிரின்னு அர்த்தம். இது இணைஞ்சு நகரத்துல மாநில சர்ச்சுல வளருது.

சர்ச்சுகள் தொடர்புடையது. ஒரே ஆண்மீக DNA ஐ பகிர்ந்துக்கறாங்க. முதல்ல பன்மடங்கான குடும்பத்துல இருந்து இதெல்லாமே இணைக்கப்பட்டிருக்கு. இப்ப – சில வழிகாட்டுதலோட – பெரிய அமைப்ப மேலும் செயல்பட இணைஞ்சு வருது. நகரத்துலையும் மாநில அளவுலயும், விசுவாசிகளின் வளரும் இயக்கம் புதிய தலைவர்களுக்கு ஊழியம் செய்யுதுன்னு தேவனின் வசனம் வெளிப்படுத்துது.

புதிய வேதாகமத்துல, இந்த ஊழியர்களை முதியோர்களா திருத்தொண்டர்களா, ஆடு மேய்ப்பவர்களா மந்தையின் கண்காணிகள்னு சர்ச் அழைக்குது. பன்மடங்கானசிறிய சர்ச்சுகள் எருசலேம்ல வீடுகள்ல7 ஊழியர்களால – திருத்தொண்டர்களால மட்டும் செயல்பட்டுதுன்னு தேவனின் வசனம் மூலமா தெரிஞ்சுக்கறோம்.

பன்மடங்கானசிறிய சர்ச்சுகள் எபேசஸ்ல வீடுகள்ல முதியோர்களின் சிறிய குழுவால- நல்ல மேய்ப்பாளன் இயேசுவை பின்பற்றி மந்தைகளுக்காக உயிர் துறந்த ஆடு மேய்ப்பாளர்களால செயல்பட்டுதுன்னு தேவனின் வசனம் மூலமாதெரிஞ்சுக்கறோம்.

நகரத்துலையோ இல்லை மாநிலத்துலையோ, அஞ்சு தலைமை குழு பரிசுகள் குடுக்கப்பட்டதை பாக்கறோம். தேவனின் வசனம் கூருது – கிறிஸ்துவெ அப்போஸ்தலர்களை, தீர்க்கதரிசிகளை, ஞானிகளை, பாச்டர்களை ஆசிரியர்களை, மக்களை ஊழியம் செய்ய ஆயத்தப்படுத்தறதுக்காக குடுத்தாரு, அப்ப தான் கிறிஸ்து உருவாகும்.

சிறிய குழு எல்லா வேலையையும் செய்ய முடியும்ங்கறதுக்காக இந்த ஆண்மீக பரிசுகள் குடுக்கப்படல ஆனா அவங்களால ஊழியம் செஞ்சு இயேசுவை பின்பற்ற மக்களை உருவாக்க முடியும் – அதனால விசுவாசிகள் எல்லாரும் தேவனின் இருதயத்துல இருக்கற எல்லா வற்றையும் நிறைவேற்ற முடியும்.

இதுக்கு கூடுதலாவோ அவங்க ஆண்மீக குடும்பத்தை சந்திக்கும்போது, இந்த தலைவர்கள் சந்திச்சு வீட்ல எப்படி சாதாரண சர்ச் நடத்தறாங்களோ அப்படி இவங்களாலையும் ஊக்கப்படுத்த முடியும்.

இந்த மூணுக்கு மூணு முறை தலைமை பயிற்சி சந்திப்புகள்லையும் கூர்ந்து வழிகாட்டுதல்ல பயன்படும்.

உள்ளூர்ல எப்படி செயல்படுதோ அப்படி மேல் மட்டத்துல நாலு துறைகள் திட்டம் போடா, மதிப்பிட பயிற்சி குடுக்க பயன்படுத்து.

தனிப்பட்டவர்களா மட்டும் இல்லாம அவங்க சார்ந்த எல்லா இடங்கள்லயும் தலைவர்கள் நிகழ்சிகளை பகிர்ந்துக்கறாங்க.அவர் குடும்பங்களை சார்ந்து ஊழியம் செய்யறவங்க நன்மையை பகிர்ந்துக்கறாங்க. எங்க பிணைப்பு ஆரம்பமாகுதோ அங்க தான் ஆன்மீக குடும்பங்களை மையப்படுத்தற இடமா இருக்கும். தம்ப்பால ஆரம்பிக்கற சர்ச் பிணைப்பு தம்ப்பால நகர சர்ச்சா செயல்படும். அது வளர்ந்து மாநிலம் முழுக்க ஊழியம் செய்யும்போது ப்ளோரிடா இணைப்பை சார்ந்து அது செயல்படும். நாடு முழுக்க உலகம் முழுக்க ஊழியம் செய்ய அனுப்பும்போது, தேச அளவுலையோ இல்லை சர்வதேச அளவுல செயல்பட ஆரம்பிக்கும்.

இயேசு கூறினார் – சிறிய விஷயங்கள்ல விசுவாசிச்சா, பெரிய விஷயங்கள்லையும் விசுவாசிப்பீங்க.

பொது ஆண்மீக DNA யும்பகிர ஆரம்பிச்சதுனாலையும் இந்த சர்ச்சு பினைப்புகள் இணைந்திருக்கு. சில நேரங்கள் பிணைப்பு பல பினைப்புகளா மொழி அடிப்படைல, வாய்ப்புகளால வேற காரணங்களால பிரியுது. இது ஒரு வளர்ச்சியின் பரிமாணம் பிரச்சனை இல்லை.

சாதாரண சர்ச்சுகள் தனிப்பட்ட விசுவாசிகள் கத்துக்க, கீழ்படிய தேவனின் வசனத்தை பகிர்ந்துக்க விரும்பறதுனால ஆண்மீக DNA இயக்கமா இருக்கு. இதுவே வெற்றிகரமா தலைமுறை தலைமுறையா, சர்ச்சுல இருந்து இன்னொரு சர்ச், விசுவாசிப்பவர்கள் பிறகு எல்லாமே புதிய ஆரம்பிக்க சீஷர்களை பன்மடங்காக்க ஏற்கனவே ஒவ்வொரு ஆண்மீக குடும்பத்திலும் இயேசுவின் விசுவாசியிலும் இருக்கிறது.

இயக்கங்கள் பல இயக்கங்களை ஆரம்பிக்கும்போது, அப்பா தான்...நகரத்துலையோ மாநிதத்துலையோ தேசத்திலேயோ மாவின் மூலம் செயல்படுது. தேவனின் விருப்பம் பரலோகத்தில் நடப்பது போல பூமிலையும் செயல் பட தேவன் ராஜ்ஜியம் வருது. அப்படித்தான் எல்லா நாடுகளையும் சீடர்களாக்கி பெரிய கமிஷனை முடிக்க முடியும்.

விவாதி

10 நிமிடம்

எளிய சபைகள் ஆழ்ந்த தணிப்பட்ட உறவுகளால் இணைக்கப்பட்டால் அதினால் ஏதாவது பயன் இருக்குமா? உங்கள் சிந்தையில் வரும் சில உதாரணங்களை குறிப்பிடவும்?

படிக்கவும்

(5 நிமிடம்)

சக வழிகாட்டுதல் குழு

இயேசு கூறினார் – நான் புதிய கட்டளையை அளிக்கறேன். ஒருவரையொருவர் நேசிங்க. நான் உங்களை நேசிப்பதுபோல, நீங்க மற்றவரை நேசிங்க. இதனால நீங்க என் சீஷர்கள்னு புரிஞ்சுப்பாங்க.

கூர்ந்து வழி காட்டும் குழுக்கள் மூணுக்கு மூணு குழுக்களை வழி நடத்தி ஆரம்பிக்கறாங்க. மூணுக்கு மூணு வழியை பின்பற்றறாங்க, தேவனின் செயல் உங்க ஆண்மீகத்துக்கு வல்லமையான வழி.

கூர்ந்து வழி காட்டும் குழுக்கள் தலைவருக்கு தலைவரா இயேசுவின் தனிப்பட்ட விசுவாசிகளோட, சாதாரண சர்ச்சுகளோட, ஊழிய அமைப்புகளோட அல்லது சாதாரண சர்ச் பிணைப்போட உலகம் முழுவதும் செல்ல வழி காட்றாங்க.

கூர்ந்து வழி காட்டும் குழுக்கள் வசனத்துல இருந்து இயேசுவின் உதாரணத்தை பின்பற்றி, மூணுக்கு மூணு குழுவை போல அதே நேரத்தை பயன்படுத்தி ஒருவருக்கொருவர் கேள்வி கேட்டு பதில் தெரிஞ்சுக்கறாங்க. இந்த குழுக்களின் நோக்கமே மத்தவங்களை பத்தி தீர்மானிக்கறதில்லை –

ஒருவரை உயர்த்தி பேசி மற்றோவரை தாழ்த்தறது இல்லை.

நீங்கள் குற்றவாளிகள் என்றுதீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள். நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.

கூர்ந்து வழி காட்டும் குழுவின் நோக்கமே ஜெபம், கீழ்படிதல், கடைப்பிடித்தல் பொருப்பு மூலமா இயேசுவின் விசுவாசிகளுக்கு உதவ ஒரு கருவியா இருக்கு. ஒருவருக்கொருவர் நேசிக்கணும்.

இப்படித்தான் செயல்படுது:

திரும்பி பாருங்க

மூணாவது முதல் கட்டத்துல – ஜெபிங்க மூணுக்கு மூணு அடிப்படைல அக்கறையோட இருங்க. குழுவின் நோக்கத்தை கவனிக்க நேரத்தை ஒதுக்குங்க –வசனத்தை படிக்கும்போது, ஜெபிக்கும்போது, விசுவாசிக்கும்போது, தேவனுக்கு கீழ்படியும்போது, எப்படி இயேசுவுக்கு ஒப்புக்குடுக்கறோம்னு பாருங்க.

கடைசியா இந்த மூணாவது முதல் கட்டத்துல,கடந்த செஷன்ல செய்த ஒவ்வொருவருடைய நடவடிக்கை திட்டங்களை அற்பணிப்புகளை ஆராய்ந்து பாருங்க.

அடுத்து பாருங்க

தேவனின் ஞானத்தையும் வசனம், விவாதம், ஜெபம் மூலம் தெரிஞ்சுக்க குழுவின் நேரம் மூணாவது நடு கட்டம் பயன்படுது. சுருக்கமா சாதாரணமா ஜெபிங்க, தேவனின் விருப்பத்தை அவர் வசனம் மூலமா சொல்லிக்குடுக்க தேவனை கேளுங்க. பரிசுத்த ஆவி உங்களை வழி நடத்த சொல்லுங்க.

அவங்க தலைமைல தேவனிடம் என்ன தெரிஞ்சுகிட்டாங்கனு குழுக்கள் பகிர்ந்துக்கணும் – தேவனின் வசனம் ஜெபம் அல்லது மற்ற விசுவாசிகள் மூலமா தெரிஞ்சுக்கணும்.

சாதாரண கேள்விகளை விவாதிக்க சொல்லுங்க:

- நாலு துறைகளின் ஒவ்வொரு பகுதிலையும் எப்படி செயல்படறீங்க?
- எது நல்லா செயல்படுது? எது உங்க பெரிய சவால்கள்?
- உங்க தற்போதைய தலைமுறை வரைப்படத்தை ஆய்வு பண்ணுங்க.
- எது உங்களுக்கு சவாலா இருந்துது எது புரிஞ்சுக்க கஷ்டமா இருந்துது?
- சமீபத்துல எதை தேவன் காட்றாரு?
- அனுபவமுள்ள தலைவர்கள் கிட்ட பங்கெடுத்துக்கறவங்க கிட்ட எந்த கேள்விகளும் கருத்தும் இருக்கா?

மேற்கொண்டு பாருங்க

நாம கத்துகிட்டதை எப்படி கடைப்பிடிச்சி கீழ்படியறதுன்னு தெரிஞ்சுக்கறது தான் குழுவின் மூணாவது கட்டம். இந்த கேள்விகளுக்கு பதில் சொல்ல குழுவுல எல்லாரும் அமைதியா ஜெபிச்சு பரிசுத்த ஆவியை கேளுங்க:

- அடுத்த முறை சந்திக்கறதுக்கு முன்னால தேவனிடம் எனக்காக என்ன திட்டங்கள் இலக்குகள் இருக்கும்? (உங்க வேலைல குறியா இருக்க நாலு துறைகள் கருவியை பயன்படுத்துங்க)
- எப்படிஎன் வழிகாட்டியோ அல்லது குழு உறுப்பினர்களோ எனக்கு இந்த வேலைல உதவ முடியும்.?

கடைசியா ஒரு குழுவா தேவனிடம் ஜெபத்துல பேசுங்க. குழுவுல ஒவ்வொருவரும் ஜெபிச்சி குழுவுல இருக்கற ஒவ்வொரு இருதயங்களை சென்றடையணும்னு தேவனிடம் கேளுங்க.

குழுவுல ஒவ்வொருவருக்கும் தைரியத்தையும் வல்லமையையும் குடுத்து இந்த செஷன்ல தேவன் சொல்லிக்குடுத்தை கடைப்பிடிச்சி கீழ்படிய தேவனிடம் ஜெபிங்க. அனுபவமுள்ள தலைவர் இளம் தலைவருக்காக குறிப்பிட்டு ஜெபிக்கணும்னா, இது தான் அந்த ஜெபத்துக்கு சரியான நேரம்.

இந்த குழுக்கள் தொலைவுல சந்திக்கறதுனால, உங்களால தேவனின் போஜனத்தை கொண்டாட முடியாது, ஆனா ஆரோக்கியத்தை குடும்பத்தை நண்பர்களை கவனிக்கலாம்.

முக்கியமான வேலைகளை முடிச்சிருந்தாலும் இயேசு திரும்ப திரும்ப வெளிப்படுத்தினாரு, அவர் நேசிச்சவங்களை எப்பவும் சீராக்கினாறு. கூர்ந்து வழி நடத்தற குழு சாதாரணமா இருக்கு ஆனா ஜூமே கருவில வல்லமையான தலைவர்களை உருவாக்க ஆதாரமான கருவியா இருக்கு.

செயல்பாடு

(45 நிமிடங்கள்)

சக வழிகாட்டுதல் குழு பயிற்சி

- 2 அல்லது 3 பேர் கொண்ட குழுவாக பிரிந்து சக வழிகாட்டல் குழு மாதிரியை பயிற்சி செய்யவும்.
- பயிற்சி செய்வதற்கு உங்கள் குழுவிலிருந்து வழி காட்டப்பட வேண்டிய ஒருவரை தெரிந்து கொள்ளுங்கள். குழுவின் மற்ற உறுப்பினர்களை வழி காட்டுபவராக இருக்க சொல்லுங்கள். பரிந்துரைக்கப்பட்ட கேள்விகளுக்கு விடைகாண உதவி செய்யட்டும்.

ஒரு சக வழிகாட்டி குழுவை வழிநடத்துவதற்கான எளிய வடிவம்:

திரும்பிப் பார் [உங்கள் நேரத்தில் 1/3 அளவு]

மூன்றின் முதற் பகுதியிலே, ஒரு அடிப்படை 3/3 குழுவில் இருப்பது போன்று நினைத்துக் கொண்டு ஜெபம் செய்யுங்கள். பின்னர் குழுவின் தரிசனத்தையும், உண்மைத் தன்மையையும் முன்பு ஒப்புக் கொண்டவைகளையும் திரும்பிப் பார்ப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள். நீங்கள் கிறிஸ்துவுக்கு எவ்வளவு கீழ்ப்படிகிறீர்கள்? [வசனம், ஜெபம், நம்பிக்கை, கீழ்ப்படிதல், முக்கிய உறவுகள்] கடந்த கூட்டத்தில் எடுத்த நடவடிக்கை, திட்டங்களை உங்கள் குழு முடிக்கவில்லையா? அவர்களை மதிப்பாய்வு செய்யவும்.

மேல் நோக்கி பார்க்க [1/3 நேரம்]

பின்வரும் எளிய கேள்விகளைப் பற்றி உங்கள் குழுவை விவாதிக்கச் சொல்லுங்கள்:

- ஒவ்வொரு அமர்விலும் இந்த நான்கு கள அமைப்பில் எவ்வாறு செயல் படுகிறீர்கள்?
- எது நன்றாக வேலை செய்கிறது? உங்களின் மிகப்பெரிய சவால்கள் என்ன?
- உங்களின் தற்போதைய தலைமுறை வரைபடத்தை மதிப்பீடு செய்யவும்.
- உங்களுக்கு சவாலாக இருந்தது எது அல்லது புரிந்து கொள்ள கடினமாக இருந்தது என்ன?
- சமீபத்தில் கடவுள் உங்களுக்கு என்ன காண்பிக்கிறார்?
- அனுபவமுள்ள தலைவர்களிடமோ அல்லது மற்றவர்களிடமிருந்தோ ஏதாவது கேள்விகளைக் கேட்க வேண்டுமா?

முன்னோக்கி பார்த்தல் [உங்கள் நேரத்தில் 1/3 பகுதி]

எல்லோரும் அமைதியாக ஜெபத்தில் தரித்திருந்து கீழ்காணும் கேள்விகளுக்கு எப்படி விடை காண்பதென பரிசுத்த ஆவியானவரிடம் கேளுங்கள்:

- அடுத்த முறை நாம் கூடி வருவதற்கு முன்னர் எந்த செயல் திட்டத்திற்கு அல்லது இலக்கை பயிற்சி செய்ய தேவன் விரும்புகிறார்? [உங்கள் பணியை மையமாகக் கொள்ள உதவுவதற்காக நான்கு கள முறையைப் பயன்படுத்துங்கள்]
- எப்படி எனக்கு வழிகாட்டுபவர் அல்லது என்னுடைய குழு உறுப்பினர்கள் எனக்கு உதவ முடியும்?

இறுதியாக ஜெபத்தில் குழுவாக தேவனோடு பேசுவதற்கு நேரத்தைச் செலவிடுங்கள். நீங்கள் பிரிந்து செல்லும் போது உங்கள் குழு சென்றடையும் ஒவ்வொருவரின் மனதையும் ஆண்டவர் தயார் செய்யும் படி, குழுவில் உள்ள ஒவ்வொருவரும் தேவனிடம் ஜெபம் செய்ய வேண்டும். இந்த அமர்வில் தேவன் உங்களுக்குக் கற்பித்த எல்லாவற்றுக்கும் கீழ்ப்படிய தேவையான பெலத்தையும் கீழ்ப்படிதலையும் தருவதற்காய் தேவனிடம் வேண்டிக்கொள்ளுங்கள். ஒரு இளைய தலைவருக்காய் ஜெபிக்க, ஒரு மூத்த தலைவருக்கு இதுவே சரியான தருணம். இந்த குழுக்கள் பெரும்பாலும் தூரத்தில் சந்திப்பதால், நீங்கள் கொண்டாடுவதற்கு இதுவே தருணம். இராப்போஜனம் அல்லது உணவைப் பகிர்ந்து கொள்ளலாம், ஆனால் உடல்நலம், குடும்பம் மற்றும் நண்பர்களைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

3 மாத திட்டம்

வேதத்தில் ஆண்டவர் இவ்வாறு சொல்கிறார். “நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.”

ஆண்டவர் திட்டமிடுகிறார், நாமும் திட்டமிட வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

மூன்று மாதத் திட்டம் என்பது உங்கள் கவனத்தையும் முயற்சிகளையும் ஒருமுகப்படுத்தவும், பெருகும் சீடர்களை உருவாக்குவதற்கான கடவுளின் முன்னுரிமைகளுடன் அவற்றைச் சீரமைக்கவும் உதவும் ஒரு கருவியாகும்.

அடுத்த ஸ்லைடு உங்கள் மூன்று மாதத் திட்டத்தை எவ்வாறு உருவாக்குவது என்பதைக் காண்பிக்கும். ஆன்லைன் கருவியைப் பயன்படுத்த பரிந்துரைக்கிறோம்.

செயல்பாடு

(30 நிமிடங்கள்)

உங்களுடைய 3 மாத திட்டத்தை தயாரிக்கவும்

- படிக்கவும் - கூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும். நீங்கள் ஒவ்வொரு படியிலும் ஈடுபட வேண்டியதில்லை, மாறாக அவை உங்கள் திட்டத்திற்கான தூண்டுதலாக இருக்கும். (5 நிமிடம்)
- ஒரு 10 நிமிடம் அமைதியாய் உட்கார்ந்து ஆண்டவர் சொல்வதையும் விளக்கிக் காண்பிப்பதையும் கேளுங்கள். அவருடைய சத்தத்தை கேட்பதற்கு முயற்சி செய்யுங்கள். (10 நிமிடம்)
- உங்கள் திட்டத்தைப் பதிவு செய்யுங்கள் - ஒரு காகிதத்தில் உறுதிமொழிகளை எழுதுங்கள் அல்லது உங்கள் பதில்களைச் சேமிக்க ஆன்லைன் கருவியைப் பயன்படுத்தவும். (15 நிமிடம்)

நான் என் கதையையும் [சாட்சி] கடவுளின் கதையையும் [சுவிஷேசம்] கீழ்கண்ட நபர்களிடம் பகிர்ந்து கொள்வேன்:

என்னுடன் பொறுப்புணர்வு குழுவை ஆரம்பிப்பதற்கு கீழ்கண்ட நபர்களை அழைப்பேன்:

பொறுப்புணர்வு குழுக்களை ஆரம்பிப்பதற்கு கீழ்கண்ட நபர்களுக்கு சவால் விடுவேன். அவர்களை பயிற்றுவிப்பேன்:

என்னுடன் 3/3 குழுவை ஆரம்பிப்பதற்கு கீழ்கண்ட நபர்களை அழைப்பேன்:

3/3 குழுவை ஆரம்பிப்பதற்கு கீழ்கண்ட நபர்களுக்கு சவால் விடுவேன். அவர்களை பயிற்றுவிப்பேன்:

3/3 நம்பிக்கை அல்லது கண்டு பிடிக்கும் குழுவில் சேர்வதற்கு கீழ்கண்ட நபர்களை அழைப்பேன்:

என்னுடன் ஜெப நடை செல்வதற்கு கீழ்கண்ட நபர்களை அழைப்பேன்:

ஒவ்வொரு [நாள்/வாரம்/மாதம்] நான் ஜெப நடை செல்வேன்.

தன் கதையையும் ,கடவுளின் கதையையும் சொல்வதற்கு பட்டியல் 100 ல் உள்ள கீழ்கண்ட நபர்களை தயார் செய்வேன்:

தொடர்ந்து ஜெப சுழற்சி முறையை உபயோகப்படுத்த கீழ்காணும் நபர்களுக்கு சவால் விடுப்பேன்:

ஒவ்வொரு [நாள்/வாரம்/மாதம்] நான் ஜெப சுழற்சி முறையை உபயோகிப்பேன்.

நான் இருக்கும் தலைமத்துவ குழுவிற்கு கீழ்காணும் நபர்களை அழைப்பேன்:

சூம் பயிற்சியை கற்றுக் கொள்ள கீழ்காணும் நபர்களுக்கு உற்சாகமளிப்பேன்:

மற்ற அர்பணிப்புகள்:

விவாதி

10 நிமிடம்

உங்கள் மூன்று மாதத் திட்டங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளுங்கள்.

வாரந்தோறும் உங்களைச் சந்திக்கத் தயாராக இருக்கும் பயிற்சி கூட்டாளரைக் கண்டறியவும். அவர்களும் அவ்வாறே செய்ய உறுதி செய்யுங்கள்.

சரிபார்த்தல்

(1 நிமிடம்)

இந்த அமர்வில் கேட்ட கருத்துக்கள்:

- தலைமத்துவத்தின் வலை

இந்த அமர்வில் கேட்ட முறைமைகள்:

- சக வழிகாட்டுதல் குழு
- 3 மாத திட்டம்


அடுத்த அடி

சமூகத்தில் இணையவும்

ஜூமின் பயிற்சிப் பகுதி முடிவடைகிறது, ஆனால் கருவிகள் மற்றும் கருத்துகளின் பயிற்சி தொடர்கிறது.

தனியாக செய்யாதேயுங்கள். ஊக்கம் மற்றும் வளர்ச்சிக்கு ஒரு சமூகத்தைக் கண்டறியவும். QR குறியீட்டைப் பயன்படுத்தி ஜூம் சமூகத்தில் சேரவும்.

ஜூம் பயிற்சியை முடித்ததற்கு வாழ்த்துகள்!


ZÚME